# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 26 திங்கட்கிழமை (08.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 074


# யானைச் சின்னத்தை ஜே.வி.பி. ஏற்க மறுப்பின் பொது எதிரணி இரண்டாகப் பிளவுபடும் நிலை!



## விடாப்பிடிப் போக்கில் ரணில்



கொழும்பு, பெப்ரவரி 08

ஐக்கிய தேசிய முன்னணியின் பெயரின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஜே.வி.பி. தொடர்ந்து மறுத்து வருமானால், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அமைக்கப்பட்ட எதிர்க்கட்சியின் பொதுக் கூட்டணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டாகப் பிளவுபடுவது தவிர்க்க முடியாதது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொதுத் தேர்தலைத் தமது ஐக்கிய தேசியக் கட்சி இடம்பெறும் கூட்டணி யானைச் சின்னத்திலேயே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் ஐ.தே.கட்சியினதும் எதிர்க்கட்சிகளினதும் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மிக உறுதியாக விடாப்பிடி நிலையில் இருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது. (23 ஆம் பக்கம் பார்க்க )

## 14 மூத்த இராணுவ அதிகாரிகள் ஒரேயடியாகக் கட்டாய ஓய்வில்!

கொழும்பு, பெப். 08

இலங்கையில் முன்னர் ஒருபோதுமில்லாதவாறு 14 மூத்த இராணுவ அதிகாரிகள் கடந்த வாரம் ஒரே சமயத்தில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளனர் என இராணுவத் தலைமையக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

ஐந்து மேஜர் ஜெனரல்கள், ஐந்து பிரிகேடியர்கள் உட்பட 14 அதிகாரிகள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர் என இராணுவத் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. உறவைச் சீர்படுத்த ஜனாதிபதி மஹிந்த முயற்சி

### மார்ட்டின் லூதர் கிங்கின் மகன் மூலமாக

கொழும்பு, பெப். 08

அமெரிக்காவுடனான இலங்கையின் உறவுகளைச் சீர்செய்வதற்கு உதவுமாறு பிரபல கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கின் மகனிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மார்ட்டின் லூதர் கிங்கின் மகனான மூன்றாவது மார்ட்டின் லூதர் கிங் கடந்த வாரம் இலங்கைக்கு(24ஆம் பக்கம் பார்க்க)

## 18 டி.ஐ.ஜிகள் உட்பட பொலிஸில் 209 அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு, பெப். 08

பொலிஸ் பேச்சாளர் ஐ.எம்.கருணரட்ண உட்பட - பொலிஸ் உயர் மட்டத்தில் - 209 பேருக்கு உடனடி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் பேச்சாளராக நியமிக்கப்பட்ட பிரியந்த ஜயக்கொடி இதனை உறுதி செய்துள்ளார்.

இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டவர்களில் 18 பிரதி பொலிஸ் மா அதிபர்கள், 81 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் அடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களில் அநேகமானவர்கள் வடக்கு, கிழக்கில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளவர்களில் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் வாதிகளுக்கு ஒழுக்காற்றுக்கோவை கடைப்பிடிக்கக் கோருகிறது ஆயர்கள் குழு

கொழும்பு, பெப். 08

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது அரசியல்வாதிகள் தாமாக முன்வந்து ஒழுக்காற்றுக் கோவையொன்றை பின்பற்றவேண்டும் எனக் கிறிஸ்தவ ஆயர்கள் குழுவொன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் செளந்தரநாயகம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி(24ஆம் பக்கம் பார்க்க)


**கல்விச் சுடர்**

**உள்ளே**

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான வணிகக் கல்வி மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான தமிழ், அளவையியல் பகுதி I மாதிரி வினாத்தாள்கள்


## இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார் பொன்சேகா

கொழும்பு, பெப். 08

அரசைக் கவிழ்ப்பதற்காகத் திட்டமிட்டார் என்பது உட்பட பல குற்றச்சாட்டுகளுக்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த அரசு தீர்மானித்துள்ளது! என கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்யத் திட்டமிட்டமை, அரசைக் கவிழ்ப்பதற்கு திட்டம் தீட்டியமை உட்படப் பல குற்றச்சாட்டுகளுக்காக எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா இராணுவ நீதிமன்றினால் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸுடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்ட பின்னரே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் இந்த முடிவை எடுத்துள்ளனர் (24ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் இருவரை விசாரிக்க பொலிஸுக்கு நீதிமன்று அனுமதி

கொழும்பு, பெப். 08

இலங்கை இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்வதற்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் தோட்டாக்கள் ஆகியவற்றை சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான 24 கோடி ரூபா பெறுமதியான எம்.ஐ.24 ரக தாக்குதல் ஹெலிகொப்டரை அழித்த விடுதலைப் புலி உறுப்பினர் ஆகிய இருவரைத் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள கொழும்பு பிரதான நீதிவான் சம்பா ஜானகீ ராஜரட்ண நேற்றுமுன்தினம் பொலிஸாருக்கு அனுமதியளித்துள்ளார்.

சீனாவிடமிருந்து மிகவும் இரகசியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுதங்களும் தோட்டாக்களும் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் தேசியக் கொடியை எரிக்க முயன்றவர் லண்டனில் பொலிஸாரால் கைது!

கொழும்பு, பெப். 08

கடந்த 4 ஆம் திகதியன்று லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்குள் பிரவேசித்து இலங்கையின் தேசியக் கொடியை எரியூட்ட முயன்றமை தொடர்பில் ஒருவரை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர் என இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்துள்ள குழு ஒன்று, கடந்த நான்காம் திகதி வியாழக்கிழமை இலங்கையின் தேசியக் கொடியை எரியூட்ட முயற்சித்துள்ளது. எனினும் அதனை லண்டன் பொலிஸார் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்-

இந்தச் சம்பவத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் (24ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்தைத் தூண்டும் செயற்பாட்டில் ஜே.வி.பி., தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

### அமைச்சர் குணசேகர குற்றம் சாட்டுகின்றார்

கொழும்பு, பெப். 08

ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றன - என்று அரசமைப்புத் துறை அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இரு கிராமங்களில் நாளை மக்கள் மீள் குடியேற்றம்

## அடுத்த கட்டம் எதிர்வரும் சனிக்கிழமை

யாழ்ப்பாணம், பெப். 8

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து தற்போது உறவினர் வீடுகளில் தங்கியுள்ள ஒருதொகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இதனை அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு ஆகிய கிராமங்களிலும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை கனகபுரம், திருநகர்வடக்கு, திருநகர் தெற்கு, ஜெயந்திநகர், பெரியபரந்தன் ஆகிய கிராமங்களிலும் மக்கள் மீள்குடி யேற்றப்படவுள்ளனர்.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த தினங்களில் காலை 8 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்திற்கு வருகைதந்து தமது பயணங்களை மேற் கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-16-400)


### S.L.A.S பரீட்சைக்கான விசேட வகுப்பு

★ முக்கிய புதிய விடயங்களை உள்ளடக்கியது
★ வசதிக்கு ஏற்ப இரு பிரிவுகள்
ஆரம்பம் : புதன்கிழமை 10.02.2010
பிரிவு I பி.ப. 2.30 - 5.00 பிரிவு II பி.ப. 5.00.7-30
★ 19.02.2010 வரை தினமும் நடைபெறும்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை எதிர்



### ஸ்ரீ வைகுந்தம் வெளியீடு

புலமைப்பரிசில் பயிற்சிப்பரீட்சை
வினாப்பத்திரம் I, தரம் 5
ஆக்கம்- ஸ்ரீ. ரமணன்
பெற்றுக்கொள்ளும் இடம் :
வஸ்தியன் அச்சகம்
402, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
விலை : ரூபா 10
(சி/5634670)


### நினைவழியா ஓராண்டில்...

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 02 | | 19 |
| ★ | | ★ |
| 10 | | 01 |
| ★ | | ★ |
| 1938 | | 2009 |



**திருமதி மகேஸ்வரி குணராஜா**
(வேலணை மேற்கு சிற்பனை முருகன் கோயிலடி)

தாமரையில் பூத்து வந்த தங்கமுகம் ஒன்று!
தண் நிலவில் சாறெடுத்து வார்த்த முகம் ஒன்று!
பால் மணமும் பூ மணமும் படிந்த முகம் ஒன்று!
பாவலர்க்குப் பாடம் தரும் பளிங்கு முகம் ஒன்று!
வேல்வடிவில் கண்ணிரண்டும் விளங்கும் முகம் ஒன்று!
வெள்ளிரதம் போலவரும் அன்னை முகம் ஒன்று!
நூறு முகம் காட்டுதம்மா அன்னை முகம் இன்று!
சிற்பனை முருகனவன் திருப்பாதத் திருநிழலில்
தங்குகின்ற அம்மம்மாவே!

வானாள நீங்கள் சென்று வருடங்கள் கடந்தாலும் வாடாத மலராக எம் நெஞ்சில் வாழ்வீர்கள்

தகவல்:
தி.கிருபாகரன் (பேரன்),
பிரான்ஸ். (92324) குடும்பத்தினர்.


### கார் விற்பனைக்கு

12 ஸ்ரீ Nisan Sunny கார் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு : 0777250918



### நூபதி காட்சியறையில்

★ கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும்
தொ. பே: 0777427777
யாழ். மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
(சி/5646...)



### ENGLISH - PERSONAL CLASS

தனியாகவும், குழுவாகவும்
அனுபவம் வாய்ந்த பட்டதாரி, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா ஆசிரியர்
தொடர்பு : 0779309740



### பணியாளர் தேவை

கொக்குவிலில் இயங்கும் பிரபல இணையத்தள (Net Cafe) நிறுவனத்துக்கு கணனி இயக்குநர்கள், தொலைபேசி இயக்குநர்கள் (பெண்கள்) தேவை. அண்மையிலுள்ளவர்கள் சுயவிவரங்களைக் குறிப் பிட்டு 12.02.2010 இற்குள் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இலக்கம் : 3978 மே/பா. உதயன்


### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 | | 09 |
| ★ | | ★ |
| 04 | | 01 |
| ★ | | ★ |
| 1946 | | 2010 |



**அமரர் சின்னத்தம்பி சின்னராசா (ரிங்கர்)**

காலத்தால் அழியாத காவியமாய்
எமை விட்டு நீங்கிய
எம் வீட்டின் குல விளக்கே !
மாதமொன்றான போதும்
நீங்கிடுமா? உங்கள் நினைவு

அப்பா என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
நாள் தோறும் பிரார்த்திக்கின்றோம்.

பிடாரி அம்மன் கோவிலடி,
ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**அருணாசலம்பிள்ளை சதானந்தம் (ஆபிரகாம்)**



வண்ணார்பண்ணையைப் பிறப்பிட மாகவும், எழுதுமட்டுவாளை வதிவிடமாக வும், தற்காலிகமாக இணுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட அருணாசலம்பிள்ளை சதா னந்தம் (ஆபிரகாம்- ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், இ.போ.ச.) 06.02.2010 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரு ணாசலம்பிள்ளை- ருக்மணிதேவி தம்பதிய ரின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், விஜயானந்தராஜா (ஜேர்மனி), ரதீந்திராதேவி (இந்தியா), மதீந்திராதேவி, கஜேந்திரராஜா (கனடா), சுகுணானந்தராஜா (லண் டன்), சர்வானந்தராஜா (ஜேர்மனி), கிருபானந்தராஜா (ஜேர்மனி), கருணானந்தராஜா (லண்டன்), சசீந்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சிவகாமி அம்மன் கோயில் வீதி, இளந் தாரி கோயிலடி, இணுவிலில் அவரது இல்லத்தில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் 11.02.2010 வியாழக்கிழமை கே.கே.எஸ் றோட் நூல்நிலைய அருகிலுள்ள அசெம்பிளி ஒவ்கோட் இல் (தேவசபை, சுன்னாகம்) நடைபெற்றுப் பூடவுடல் காலை 9 மணியளவில் உடுவில் மல்வம் சேமக்காலைக்கு நல்லடக்கத் திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
இணுவில்.
(92320)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(சிற்சபேசன் ஆறுமுகதாஸ்,
அண்ணா தொழிலக ஊழியர்.)

### மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை அழகம்மா**



நவற்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அழகம்மா 05.02.2010 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலுப்பிள்ளையின் அன்புமனைவியும் தர்சினி, சுதாசினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்துரை, வினாசித்தம்பி, சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீசுதாகர், சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் மதுஷன், தனோஷகா, அபிநயா, ரொஷான் ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத் தில் நடைபெற்றுப் பூதவுடல் நிலாவரை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

எல்லாளன் சனசமூக நிலையம் அருகில்
நவற்கிரி, புத்தூர்.
(92321)

தகவல் :
குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



ஊரெழு சைவாலய முன்னேற்றக்கழக
உறுப்பினரும் எமது கழக உறுப்பினருமான
**தயாகுணம் மலரவனின்**
சகோதரனுமான
**தயாகுணம் சிவகரன்**
அவர்கள் 06.02.2010 சனிக்கிழமை
அகாலமரணமடைந்த செய்தியறிந்து
ஆறாத்துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின்
குடும்பத்தாருக்கும் எமது இரங்கலை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம்,
ஊரெழு கலைவாணி ச.ச. நிலையம்,
ஊரெழு கலைவாணி முன்பள்ளி,
ஊரெழு கலைவாணி விளையாட்டுக்கழகம்.

(92323)


### நவீன முறையில் நிறப்பூச்சு வேலைகள்

* வீட்டு நிறப்பூச்சு
* வீட்டு மரத்தளபாடங்கள்
* கட்டடங்கள்

மற்றும் ஏனைய வேலைகள் ஒப்பந்த அடிப்படையில் செய்து தரப்படும்.
தொடர்பு : 0712292900
(92316)


### தவறிவிட்டது

கலம்பரை, கோப்பாய் வடக்கு, கோப்பா யைச் சேர்ந்த சிவபாலசிங்கம் ஜெகதீசன் என்பவருடைய அடையாள அட்டை, (881753553V) மற்றும் வி.அ.அ, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன யாழ். பஸ்நிலை யத்துக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. தொடர்பிற்கு : 0779810074



### ஐந்தாம் மாத நினைவில்

புதிய உயர்கல்லூரி அதிபர்களான சண்முகநாதன் - அருள்நங்கை
அவர்களின் அருந்தவப்புதல்வன் **சந்துதன்**
**பத்தாவது பிறந்தநாள் - 07.02.2010**

உன் இல்லத்தில் பத்தாவது பிறந்த நாளில் “ சந்துதம்” என்ற கோயிலில் அழகிய நிழல் கண்டேன். தெய்வமாய், உருவமாய் காட்சி தந்தாய். ஆனால் உன் மழலை மொழிகள் கேட்கவில்லையடா மகனே! உன் அசைவுகள் காணாத நிலைகண்டு மனம் பதறினேன். எம்மை எல்லாம் மகிழ்ச்சியில் வைத்து நீ தீபம் ஏற்றி விழாக் கொண்டாடும் நேரத்தில் உன் மீளாத்துயில் இல்லமதில் உறக்கமாய் உறையும் இடத்தில் பத்தாவது பிறந்த நாளில் மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி வணங்கினேன் ஐயா! மகனே எங்குதான் சென்றாயோ?

உன் பிரிவால் துடிக்கின்றோம் ஐயா !

லோட்டன் வீதி,
[illegible]

உன் அன்பு
தயா சித்தப்பா, சகிலா சித்தி, அபிராம், தாணிஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன்னொரு தேர்தல் திருக்கூத்து

இலங்கைத் தீவில் மீண்டும் ஒரு திருக்கூத்து அரங்கேறப் போகின்றஒது. ஜனநாயகம், தேர்தல், வாக்களிப்பு என்ற பல பெயர்களில் அமைந்த திருவிழாதான் அது.

ஜனாதிபதித் தேர்தல் திருவிழா என்ற நாடகம் பூர்த்தியாகி விட்ட நிலையில் இனிமேல் அரங்கேறப் போவது பொதுத் தேர்தல் நாடகமே.

ஜனாதிபதித் தேர்தலும், அதையொட்டி நடந்த பிரசார முறைகளும், அது நடந்தேறிய விதமும், தேர்தல் பெறுபேறுகளும் இலங்கைத் தீவு மக்களையே பேச்சு மூச்சற்றவர்களாக்கி, அதிர்ச்சியில் உறையவைத்து, மௌனியாக்கி நிற்கையில், அது போன்ற இன்னொரு தெருக்கூத்துக்கு ஒத்திகை பார்க்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஏப்ரல் முதல் வாரத்தில் முடிவடைகின்றது.

ஏப்ரல் புதுவருடத்துக்கு முன்னர் புதிய அரசு பதவியேற்கக் கூடியதாக அடுத்த பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதற்கு ஏற்ற வகையில் தற்போதைய நாடாளுமன்றம் இந்த வாரத்தில் கலைக்கப்படக்கூடும் என எதிர்வு கூறப்படுகின்றது.

நாட்டின் பொதுத் தேர்தல் என்பது அந்த நாட்டின் சட்டமியற்றும் உயர் சபைக்கு மக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஓர் உயர்ந்தபட்ச - மேன்மையான - நிகழ்வாகக் கருதப்பட வேண்டும். ஆனால் மக்களின் உண்மையான உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் நீதியான ஜனநாயக நிகழ்வாக அது அரங்கேறுமா என்ற பலத்த சந்தேகமே மக்கள் மனதை இப்போது பெரும் அவநம்பிக்கையாக நிரப்பி நிற்கின்றது.

மிக அண்மைக்காலத்தில் நடந்து முடிந்த பல்வேறு தேர்தல்கள் எப்படியெல்லாம் அரங்கேறின என்பது தொடர்பான மக்களின் பட்டறிவே இத்தகைய விசன எண்ணத்தை அவர்கள் மனதில் தோற்றுவித்திருக்கின்றது என்பது பொய்யல்ல.

இனி நடக்கப்போகும் பொதுத் தேர்தலாவது நீதி, நியாயமான முறையில் - ஜனநாயகப் பண்பியல்புகளையும், கருத்துக் கூறுவது தொடர்பான அடிப்படை விழுமியங்களையும் மதிக்கும் விதத்தில் - முறையாக நடத்தப்பட்டாலும் கூட, அத்தேர்தல் மூலம் தெரிவாகும் நாடாளுமன்றம் அந்த ஜனநாயகப் பண்பியல்பைப் போற்றும் வகையில் செயற்படுமா என்பது குறித்து நாட்டு மக்களுக்குத் தீர்க்க முடியாத பலத்த சந்தேகம் இருப்பதை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

அத்தகைய நிலைமையைத் தற்போது காலாவதியாகும் இந்த நாடாளுமன்றம் நாட்டு மக்கள் மத்தியில் ஆழமாக விதைத்து விட்டுச் செல்கின்றமையும் மறுக்க முடியாத உண்மையாகும்.

2004 ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரும்பொட்டில் ஆட்சியை அமைத்த அரசுத் தரப்பு, சபையின் சபாநாயகர் பதவியைக்கூட ஒரு வாக்கு வித்தியாசத்தில் எதிரணியிடம் பறிகொடுத்து, அல்லாடும் நிலைமையே ஆரம்பத்தில் இருந்தது.

ஆனால் பின்னர் நிலைமை என்னவாயிற்று?

எதிரணிக் கட்சியிலிருந்த எம்.பிக்களில் பெரும் எண்ணிக்கையானோரை அமைச்சுப் பதவியைக்காட்டி ஆளும் பக்கத்துக்கு இழுக்கும் 'அநாகரிக ஜனநாயகமே' இப்போதைய நாடாளுமன்றின் ஒரே பெருமை என்று கூறும் அளவுக்கு இங்கு ஜனநாயகத்தின் மகத்துவம் கேவலமாகும் நிலைக்குக் கெட்டுப் போனது.

மக்களையே சந்திக்காமல் எதிரணியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைக் காலையில் ஏற்றவர், மாலையில் அரசுப் பக்கம் 'பல்டி' அடித்து அமைச்சர் பதவியையோ, பிரதி அமைச்சர் பதவியையோ அதற்குக் 'கைம்மாறாக' பெற்றுக் கொள்ளும் முறைகேடு கூட இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தில் சர்வ சாதாரணம் என்பது இப்போதுதான் நிலைநாட்டப்பட்டது.

அமைச்சர் பதவிகளுக்காக அரசியலில் 'சோரம்' போன கூட்டம் ஒன்றை உற்பவிக்கும் புதிய ஜனநாயகப் போக்கு இந்தத் தேசத்தில் இப்போது வலுவாகக் கட்டமைந்துள்ளது.

இதனால்தான் 'கின்னஸ்' புத்தகத்தில் பதியும் உலக சாதனை போல அரசுத் தரப்பின் 95 வீதமான எம்.பிக்களுக்கு அமைச்சர்கள், பிரதி அமைச்சர் பதவிகளை வழங்கி 'மெகா' அமைச்சர்கள் பட்டாளத்தைக் கொண்டிருக்கும் பெருமையை இலங்கைத் தீவு சுவீகரித்துக் கொண்டது.

நிறைவேற்று அதிகாரத்தின் குயுக்தித் தனத்தால், நாட்டின் சட்டமியற்றும் உயர் தகைமை கொண்ட நாடாளுமன்றம் இவ்வாறு கடைகெட்டுப் போகும் விதத்தில் ஜனநாயக விரோதக் கேவலம் அரங்கேறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும், கடமையும், அதிகாரமும், தகுதியும், தகைமையும் நீதித்துறைக்கே உள்ளது என மக்கள் எதிர்பார்த்து நம்பியிருந்தனர்.

ஆனால் அரசியல் போக்குகளின் திசையில் இழுபட்ட நீதித்துறையோ இத்தகைய ஜனநாயக குளறுபடிகள் இலகுவாக அரங்கேற வழிவிடும் விதத்தில் சட்ட வியாக்கியானம் செய்து விலகி நின்றதால் இந்த ஜனநாயக முறைமை மீதே - ஆட்சிப் போக்கு மீதே - மக்கள் நம்பிக்கை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் -

நீதி, நேர்மையான - மக்களின் உண்மையான மன நிலைப்பாட்டைப் பிரதிபலித்து வெளிப்படுத்துகின்ற - நியாயமான தேர்தல் ஒன்று நீதியான முறையில் நடத்தப்படும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இன்னும் பிறக்கவில்லை.

அத்தகைய தேர்தல் நடத்தப்பட்டு மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் நியாயமான நாடாளுமன்றம் ஒன்று உருவானாலும் அது ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் நீதி,நியாயமாகச் செயற்படும் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு இன்னும் ஏற்படவேயில்லை. அதுதான் உண்மை.

கடந்த கால அரசியல் பட்டறிவு - அனுபவம் - அத்தகைய அவநம்பிக்கை எண்ணத்தையே மக்கள் மனதில் ஆழ விதைத்து நிற்கின்றது.

# ஜெனரல் பொன்சேகா கைதுசெய்யப்பட்டு ராணுவச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவாரா?

நேற்று (07.02.2010) 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது.

இலங்கையின்62ஆவது சுதந்திர தினத்தைக் கண்டியில் கொண்டாடிய ஜனாதிபதி ராஜபக்ஷ முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு பேசுகையில் நூற்றாண்டுகள் பழமையான வரலாற்று சம்பவமொன்றை நினைவு கூறத் தவறவில்லை.

அன்று கெப்பெற்றிப் பொலவின் சகோதரியின் புதல்வன் அந்த சிறுவனாகிய வீரன் மத்தும பண்டார அச்சமின்றி தன் உயிரைத் தியாகம் செய்த இடத்திலிருந்து உங்களை நோக்கி நான் பேசுகின்றேன். உங்கள் புதல்வர்கள் மற்றும் புதல்விகளும் மத்தும பண்டாரவை போன்ற வகையிலேயே தம் நாட்டின் மீது அளவு கடந்த பற்று தலைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து நினைவில் கொண்டிருங்கள். அதே காரணத்துக்குத் தான் உங்கள் புதல்வர்களும் புதல்விகளும் என்மீதும் அன்பு கொண்டுள்ளார்கள்'' என்று ஜனாதிபதி தமது உரையில் கூறினார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்டியின் கடைசி மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் மத்தும பண்டார என்ற வீரச் சிறுவனின் தலையைக் கொய்து தண்டிக்கும் படி உத்தரவு பிறப்பித்த அதே இடத்திலி ருந்து ஜனாதிபதி தமது உரையை நிகழ்த்தினார்.

முற்காலத்தில் படைவீரர்கள் வாள்களை வீசி போர் புரிந்த அதே மண்ணில் முப்படை கள் மற்றும் அதிரடிப் படைவீரர்கள் போன்றோர் அணிவகுத்து மரியாதை செலுத்தினார்கள். விமானப்படை சாகசங்கள் மற்றும் கனரகவாகன பவனிகள் இடம்பெற வில்லை.

இருந்தாலும் கண்டி வாவியில் கடற்படையின் டோரா படகு அணி வகுப்பு ஒன்று இடம்பெற்றது.

புலிகள் இயக்கத்தை வெற்றி கொண்டதன் பின்னர் இவ்வாறான நிகழ்வில் கலந்து கொள்வது படையணிகளுக்கு இதுவே முதல் தடவை. எட்டு மாதங் களுக்கு முன்னர் கடந்த மே மாதத்தில் தான் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் குண்டுகள் துளைக்கப்பட்ட, தலை துண்டிக்கப்பட்ட சடலம் நந்திக் கடல் ஏரிக்கரு கில் கண்டெடுக்கப்பட்டிருந்தது. இந்த வெற்றியை பிரதிபலிக்கும் விதத்தில் படையணிகள் தமது அணி வகுப்பில் வெளிப்படுத்தின.

ஆயிரக்கணக்கான மக்கள் நேரடியாக இதைப்பார்த்து மகிழ்ந்தார்கள். அதேவேளை லட்சக்கணக்கானவர்கள் தொலைக்காட்சியில் பார்த்தார்கள்.

ராஜபக்ஷவுக்கு இது இன்னுமொரு பெருமகிழ்வுக்கான சந்தர்ப்பமாகும். ஒரு கிழமைக்கு முன்னர் தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் அபரிமிதமான பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்களிப்பில் இருந்தார்.

இதேவேளை கண்டியின் புறநகர்ப் பகுதியான பல்லேகலவில் தேசத்திற்கு மகுடம் என்ற தொனிப்பொருளில் இடம் பெற்ற ராணுவ தளபாடங்களின் கண்காட்சியைப்பார்ப்பதற்காக மக்கள் பெரும் எண் ணிக்கையில் கூடியிருந்தார்கள். ராணுவத் தளபாடங்கள், நிழல்படங்கள், மாதிரிகள், போரில் கைப்பற்றப்பட்ட போர் ஆயுதங்கள் போன்றவையெல்லாம்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ராணுவம், கடற்படைகளின் விமானங்கள் மற்றும் கடற்கலங்கள் பலவும் வீதியூடாக இரவு வேளையிலேயே அங்கு கொண்டு செல்லப்பட்டக. ஏனென்றால் மலைப்பிரதேசமான கண்டியில் விமான நிலையம் கிடையாது. வீதிகள் தோறும் மக்கள் திரண்டு இவைகளைப் பார்த்தார்கள். மக்கள் ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாய் இது இருந்தது.

போர் வெற்றியை அரசாங்கம் நன்றாகவே பயன்படுத்திக்கொண்டது. ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு அதிகமாகப் பயன் படுத்திக் கொள்ளப் பட்ட மிக முக்கி யமான தனி சாதனை இதுவாகும். நாடாளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கும் வேளையில் மக்களின் மனங்களையும் இதயங்களையும் வென்றெடுப்பதற்காக மிக நன்றாகவே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது இந்தக் கண்காட்சி. நாடாளுமன்றத்தைக் கலைப்பது கடந்த வெள்ளிக் கிழமை நடைபெறுவதாக இருந்த போதிலும் சோதிடர்களின் கருத்துக் கமைய அது பிற்போடப்பட்டதாகத் தெரிகின்றது. அது அனேகமாக பெப்பரவரி 9 அல்லது 10ஆம் திகதி நடைபெறலாம் என்று தெரிகின்றது. ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் பொதுத்தேர்தல் இடம்பெறலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

### ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம்

ஜனாதிபதி ராஜபக்ஷ தமது பிரதானிகளுடன் வெள்ளிக்கிழமை ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் மேற் கொள்ளவிருக்கும் பல விடயங்களில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான கடன் வசதிகள் தொடர்பான ஒப்பந்தத்தில்

## பொதுத் தேர்தலை முன்வைத்தே கண்டியில் ஆயுதம் கண்காட்சி

கையெழுத்திடுவதும் ஒன்றாகும்.

ரஷ்யாவுடனான கடன் ஒப்பந்தம் மற்றும் உதவிகள் நெருக்கமடைந்திருப்பது அரசாங்கத்தை தைரியமடையச் செய்துள்ளது- இது சர்வதேச மட்டத்தில் அரசின் நிலைமையை மேலும் ஸ்திரப் படுத்துவதாகும்.

அரச படைகள் புலிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்த வேளையில் சீனா தான் கனரக ராணுவப் பொருள்களை அதிகமாக தந்துதவிய நாடாகும். இப்பொழுது போரின் பின்னரான காலத்தில் ரஷ்யா மேலும் உதவிகளை வழங்கி இலங்கையின் ராணுவ பொருள்களை நவீனத் துவப் படுத்தவும் சீர்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றது.

ரஷ்யாவும் சீனாவும் ஐ.நா வின் பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

போர்க்காலக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பான பிரச்சினைகள் எழும்போது பாதுகாப்புச் சபை யில் மேற்கு நாடுகளின் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்பதற்கு இவை இரண்டும் ராஜபக்ஷவுக்கு நெருக்கமாக நின்று உதவும் என்று கருத இடமுண்டு.

கடந்த திங்கட்கிழமை (பெப்ரவரி-1) 14 ராணுவ அதிகாரிகள்- 5 மேஜர் ஜெனரல்கள், 5 பிரிகேடியர்கள், ஒரு கேணல், ஒரு லெப்படினன் கேணல், இரண்டு லெப் டினன்ட்கள் ஆகியோர் கட்டாய விடு முறையில் அனுப்பப்பட்டனர். 1992 ராணுவ அதிகாரிகள் சட்டவிதிகளின் படி இந்த நடவடிக்கையை ராணுவத் தளபதி எடுத்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. மேற்படி விதியின் 39ஆவது பிரிவு பின்வருமாறு கூறுகின்றது.

ஜனாதிபதியின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஓர் அதிகாரியின் ஒழுக்கக் கேடு அல்லது வேறு சந்தர்ப்பங்களில் இப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கருதப் படும் இடத்து ஓர் அதிகாரியானவர் ஓய்வு பெறும்படி யாக அல்லது பதவியிலிருந்து விலகும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்'' என்றிருக் கின்றது.

இந்த 14 அதிகாரிகள் விடயத்தில் நீதி மன்ற விசாரணை எதுவும் நடைபெறவில்லை. அவர்கள் மீது குற்றச் சாட்டுக்கள் எதுவும் சாட்டப்படவில்லை. ஆனால் இந்த அதிகாரிகள் மீதான நடவடிக்கைகள் பலமான ஆதாரங்களின் கீழ் கவனமாக ஆலோசித்ததின் பின்னரே எடுக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. அவர்கள் தம்மீதான நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்புச் செயலருக்கு மேல் முறையீடு செய்யலாம் என்பதைத் தவிர வேறு எதுவும் அந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வரவில்லை.

அதிகாரிகள் கட்டாய ஓய்வு என்பதற்கு மேலாக ராணுவ உயர்வு மட்டத்தில் பிற வட்டாரங்களிலும் வேறு பல மாற்றங்களும் செய்யப்படவுள்ளனவென்று கூறப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை வெளிநாட்டமைச்சில் புலனாய்வு ஆலோசகராக பணியாற்றியவரும் தேசிய பாதுகாப்பு சபையில் அமரும் வாய்ப்பு பெற்றிருந்தவருமான ஓய்வுபெற்ற மேஜர்ஜெனரல் ஒருவர் அவரது கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

ஜெனரல் பொன்சேகாவை மையமாக வைத்து இரகசிய புலனாய்வுத் திணைக்களத்தினர் மேற்கொண்டு வந்த தொடர்ச்சியான பன்முகப்பட்ட விசாரணைகளையடுத்தே இந்த அதிகாரிகள் அனைவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### பொன்சேகா கைதாகலாம்

கடந்த வாரம் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்படுவது சாத்தியம் என்ற வகையில் வெளிவந்த செய்திகள் தொடர்பான நிலை அப்படியே இருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து வரும் புலனாய்வு அதிகாரிகள் ஒழுங்குமுறையாக சட்டமா அதிபர் மோகான் பீரிஸுடன் ஆலோசனை நடத்திவருகிறார்கள். இந்த புலனாய்வு இப்போது ஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

ஜெனரல் பொன்சேகா சிவில் சட்டங்களின்படியல்லாமல் ராணுவ சட்டங்களின் கீழ் குற்றச்சாட்டுக்களை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்று தெரியவருகின்றது.

அரசாங்கத்தை வீழ்த்தவும் ஜனாதிபதி ராஜபக்ஷவை கொலை செய்யவும் சதித்திட்டம் தீட்டப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே புலனாய்வுகள் பெரிதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றப் புலனாய்வுப்பிரிவினர் கூறுகின்றனர்.

ஜனவரி 26 ஆம் திகதி தேர்தல் தினத்தன்று இரவில் ஜெனரல் பொன்சேகாவும் மற்றும் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் களும் 'சினமன் லேக்சைட்' ஹோட்டலில் தங்கியிருந்த வேளையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டதாக அவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

ஹோட்டலில் இருந்த கண்காணிப்பு கமராக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டு, ஹோட்டலின் பாதுகாப்பு அலுவலர்கள் ஜெனரல் பொன்சேகாவும் மற்றவர்களும் தங்கியிருந்த 70 அறைகளுக்குள் நுழையாது தடுக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஹோட்டலின் பாதுகாப்பு முகாமையாளர் ஓய்வு பெற்ற மேஜர் ரஞ்சித்தயாரட்ண தான் கமராக்களை செயலிழக்கச் செய்தார் என்று தெரியவந்ததைத் தொடர்ந்து அவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். ஆனால் ஓய்வுபெற்ற ஜெனரலின் முகாமையிலுள்ள புலனாய்வாளர்களை விசாரித்தபோது தாங்கள் தான் கமராக்களை செயலிழக்கச் செய்தார்கள் என்றும் ஓய்வுபெற்ற ஜெனரல் அவ்வாறு செய்யவில்லையென்றும் கூறியுள் ளார்கள்.

அரசைக் கவிழ்ப்பதற்கோ ராஜபக்ஷவை கொலை செய்வதற்கோ தாங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| தை 27 | 09.02.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி | ஏகாதசி |
| | பி.இ. 01.11 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | மு.ப. 07.56 வரை |
| சுபநேரம்: | 11.05-12.35 வரை |
| ராகுகாலம்: | 03.35-05.05 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் மீதான கொலை அச்சுறுத்தல்;

# புலம்பெயர்ந்த புத்திஜீவிகள் கண்டனமும் அதிர்ச்சியும்

'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரால் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் புலம்பெயர் நாடுகளில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

கிஷோரின் பண்பற்ற இந்தச் செயலை புலம்பெயர் மக்கள், புத்திஜீவிகள் ஊடகவியலாளர்கள் கடும் தொனியில் கண்டித்துள்ளனர்.

இந்தக் கொலை அச்சுறுத்தல் குறித்து புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் தெரிவித்துள்ள கருத்துக்கள் 'ஈழம் இ நியூஸ், இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன.

அந்த இணையத் தளத்தின் செய்தியாளர் ஆர்த்தி தொகுத்து வழங்கிய சிலரின் கருத்துக்கள் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' மற்றும் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சுடர்ஒளி' பத்திரிகையின் ஆசிரியர் ந.வித்தியாதரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கடந்த வாரம் கொலை அச்சுறுத்தலை விடுத்துள்ளது மிகுந்த வேதனையைத் தோற்றுவித்துள்ளது.

சிறிலங்காவில் தோன்றியுள்ள ஜனநாயக விரோதச் சூழலில் தமிழ்ச் சமூகமும் இணைந்துகொள்வதை நாம் அனுமதிக்க முடியாது. சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவது ஒரு மனித இனத்தின் கௌரவம் மிக்க உரிமையாகும். அதனைத் தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது.

அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், படுகொலைகள் எனப் பல சவால்களுக்கும் மத்தியில் தாயகத்தில் இருந்து இயங்கிவரும் தமிழ் ஊடகம் ஒன்றின் மீதான இந்த அச்சுறுத்தல் எமது இனத்திற்கு வருங்காலத்தில் பெரும் அச்சுறுத்தலாக அமையலாம்.

இது தொடர்பில் நாம் வித்தியாதரனைத் தொடர்புகொண்ட போது தனக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் தனது கவலைகளை வெளியிட்ட அவர், இது தொடர்பில் புலம்பெயர் தமிழ் சமூகம் காத்திரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். தாயகத்தில் மேற்கொள்ளப்படும் ஜனநாயக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதிலும், அரசியல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களிலும் புலம்பெயர் தமிழ் சமூகம் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதும் அவரின் விருப்பமாகும்.

வித்தியாதரனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் தொடர்பில் புலம்பெயர் நாடுகளில் வாழும் புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் எமது ஊடகத்திற்குத் தெரிவித்துள்ள கருத்துக்களை 'ஈழம் இ நியூஸ்' தனது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றது.

### அரசியல்வாதிகளின் மிரட்டல் எமக்குப் புதிதல்ல

*கலாநிதி ஆர்.சேரன் (துணைப் பேராசிரியர், சமூக விஞ்ஞானவியல் துறை, வின்சர் பல்கலைக்கழகம், கனடா)*

அரசியல் வாதிகள் ஊடகவியலாளரை மிரட்டுவதும், கொலை செய்வதும் நாட்டை விட்டு விரட்டுவதும் நமக்குப் புதிதல்ல. பொறுமையின்மையும் ஊடக சுதந்திரத்தை மதிக்காத மனோபாவமும் செய்திதருபவரை சினந்து கொள்வதும்/கொல்வதும் இலங்கையின் அரசியல் மரபாகிவிட்டது.

எனினும் பல நெருக்கடிகள்/இடர்பாடுகள்/ அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வெளிவந்துகொண்டிருக்கும் 'உதயன்' நாழிதளின் ஆசிரியர் வித்தியாதரனை சிவநாதன் கிஷோர் மிரட்டியிருப்பது அனாகரிகமும், ஆபத்தும் நிறைந்த ஒரு செயலாகும். இதனை வன்மையாகக் கண்டிப்பது எல்லா ஊடகவியலாளரினதும், மனிதஉரிமை வாதிகளினதும் கடமையாகும்.

### திணறிக்கொண்டிருக்கும் தாயக ஊடகங்கள்

*பரணி கிருஸ்ணரஜனி (அரசியல் விமர்சகர், பெண்ணிய உளவியல் ஆய்வாளர் - Department of Feminisn & Gender Studies, University of Paris).*

கிஷோரின் நடவடிக்கை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததும் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும். உலகில் எந்தத் தேசம் ஆகினும் எந்தக் காலகட்டமாயினும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தபடுவதென்பதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் லஸந்த விக்கிரமதுங்கதனது இறுதி மரண சாசனத்தில் எழுதியுள்ளது போல் 'மஸ்காராவும் ஸ்டைலிங் ஜெல்லும் இல்லாமல் தனது முகத்தைச் சமூகம் பார்க்கக்கூடிய ஒரு கண்ணாடியாகச் சுதந்திரமான ஊடகம் இருக்கின்றது. சமயங்களில் நீங்கள் கண்ணாடியில் பார்ப்பது நல்ல சொரூபமாக இருக்காது. ஆனால் உங்கள் பாதுகாப்பான இருக்கைகளின் தனிமையில் நீங்கள் புலம்பும்போது உங்களுக்கு அந்தக் கண்ணாடியைத் தூக்கிக் காட்டும் ஊடகவியலாளர்கள் அதை வெளிப்படையாகவும் பல ஆபத்துக்களை எதிர்கொண்டவாறும் செய்கிறார்கள். இது அவர்களுடைய கடமை அதிலிருந்து அவர்கள் விலகுவதில்லை'' இது தொடர்பான பொதுவான ஊடக வியாக்கியானம்.

ஆனால் இன்றைய ஈழ அரசியல் களத்தில் ஓர் ஊடகத்தின் பணியின் கனதியை விளக்குவதற்கு அகராதியில் புதிதாக ஒரு வார்த்தையைத்தான் தேட வேண்டும். இனப் படுகொலை ஒன்றைச் சந்தித்து மரத்துப்போன, பேரலித்த கூட்டு உளவியலுக்குள் சிக்கி வெற்று மனிதர்களாயிருக்கும் ஒரு மக்கள் சமூகத்தை வழிநடத்த வேண்டிய பெரும் பொறுப்புக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருக்கின்றன, தாயகத்தைக் களமாகக் கொண்ட தமிழ் ஊடகங்கள்.

இந்த ஊடகங்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதென்பது அந்த ஊடகங்கள் மீதான வன்முறையாக அல்லாமல் அந்த மக்கள் சமூகத்தின் மீதான நேரடி வன்முறையாகவே பார்க்கப்படும். இந்த அடிப்படையில் நாம் எல்லோரும் ஒருமித்து இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல்கொடுக்க வேண்டும்.

### கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்

*கலாநிதி ஆர்.பிரபாகரன் (அருஷ்-படைத்துறை ஆய்வாளர், பிரித்தானியா)*

சிறிலங்காவில் இருந்து வெளிவரும் உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கொலை அச்சுறுத்தலை விடுத்துள்ளது மிகவும் வேதனையானது.

கொலை அச்சுறுத்தல் வித்தியாதரனுக்கு மட்டுமல்ல சிறிலங்காவில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் அத[...] மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கும் ஒருவர் விடுத்துள்ளதை எண்ணும் போது தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே நொந்துகொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவில் தோன்றியுள்ள தற்போதைய நெருக்கடியான நிலையில் ஊடகத்துறை பாதுகாக்கப்படுவது அவசியமானது. ஆனால் ஈழத்தமிழ் மக்கள் போன்ற தமது உரிமைகளுக்காகப் போராடும் இனத்துக்கு அதன் அவசியம் என்பது மிக முக்கியமானது.

ஓர் இனத்தின் ஜனநாயக நடைமுறைகள் என்பது அதன் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் ஊடாகவே வெளியுலகைச் சென்றடைகின்றன. எனவே எதனையும் நாம் வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு உரிமையுள்ளவர்கள் ஆக வேண்டும். ஆனால் அதன் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் என்பது ஒரு ஜனநாயக படுகொலையாகவே பார்க்கப்படும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் கட்சியாகவுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் இந்தச் செயலுக்கு எதிராக அனைவரும் தமது கண்டனங்களைப் பதிவுசெய்யவேண்டியது அவசியமானது. அதுவே வருங்காலத்தில் ஒரு வளமான சமூகமாக தமிழ் இனத்தை மாற்றும்.

### செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியாற்றிய ஒருவரின் செயலா இது?

*கிருஷ்ணா கலைச்செல்வன் (அரசியல் - பாதுகாப்பு பத்தி எழுத்தாளர், லண்டன் பல்கலைக்கழக சர்வதேச பாதுகாப்புக் கற்கை நெறி மாணவர், பிரித்தானியா)*

சிறிலங்காவில் ஊடகங்களுக்கு எதிரான வன்முறை என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் தற்போது 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியருக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரால் விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் ஆனாது தமிழ் அரசியலில் உருவாகிவரும் ஒரு புதிய அபாயகரமான போக்கையே சுட்டிநிற்கின்றது.

அதாவது இயக்கப் பின்னணிகள் அற்ற ஒரு தமிழரசியல் வாதியினால் இவ்வாறான மிரட்டல்கள் விடப்படுவது என்பது தமிழரசுக்கட்சி மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி கால அரசியலை நினைவுபடுத்துவதாகவே காணப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைப் பீடம் இது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கையினை நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோருக்கு எதிராக மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமான விடயமாகும். செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியாற்றிய ஒருவர் இவ்வாறு நடந்துகொள்வது மிக வும் அதிர்ச்சி அளிக்கின்றது. இந்த இழிவான செயலானது அனைவரினாலும் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும்.

தற்போதைய அரசியல் சூழலில் ஈழத் தமிழர்களுக்கு தமிழ்த்தேசிய வரையறையில் நின்ற வண்ணம் செய்திவழங்கும் ஒரு நிறுவனமாகவே நாம் உதயன் பத்திரிகையைப் பார்க்கின்றோம். அந்த வகையில் 'உதயனின்' இருப்பும் பங்களிப்பும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு மிகவும் அவசியமானதாகும்.

### சமூகத்தில் உள்ள அனைவரும் கண்டிக்க வேண்டும்

*பகீரதன், (PEACE AND CONFLICT STUDIES, UNIVERSITY OF TORONTO, கனடா)*

பொருளாதார சமூக முன்னேற்றத்தை அடைந்த நாடுகளில் கருத்துச் சுதந்திரமும் ஊடக சுதந்திரமும் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. மக்களின் சுதந்திரத்தையும்உரிமைகளையும்உறுதிப்படுத்துவதிலும் பலப்படுத்துவதிலும் சுதந்திர ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தாயகத்தில் இயங்கும் சுதந்திரமான ஊடகங்கள் தங்களது கருத்துக்களை வெளியிட சுதந்திரமில்லாத மக்களின் குரலாக ஒலித்து வருகின்றன. அந்த நிலையில் அத்தகைய ஊடகங்களின் மீதான அச்சுறுத்தல்கள் அனைத்து மக்களின் மீதும் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகப் பார்க்கப்படவேண்டும்.

ஊடகங்களின் மீதான அச்சுறுத்தல்களை ஊடகவியலாளர்களும், புத்திஜீவிகளும் மட்டுமன்றிச் சமூகத்தில் உள்ள அனைவரும் கண்டிக்கவேண்டும். சமூகத்தில் இருந்து எழும் பலமான எதிர்க்குரல் மட்டும்தான் அடக்குமுறையில் சிக்கியுள்ள தமிழ் இனத்தின் குரலாய் ஒலிக்கும். சுதந்திர ஊடகங்களின் சுதந்திரத்தையும் அந்த மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும்.

### ஜனநாயகப் பண்புகளின் மீது கிஷோருக்குள்ள அவநம்பிக்கையை பிரதிபலிக்கின்றது

*இதயச்சந்திரன் (அரசியல் ஆய்வாளர், பிரித்தானியா)*

தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் 'உதயன்' 'சுடர் ஒளி' ஆசிரியர் ந.வித்தியாதரன் அவர்களை தொலைபேசி ஊடாக அச்சுறுத்திய விவகாரம் உண்மையானது என்பதை 'தமிழ்வின்' இணையத்தளத்துக்கு அவர் வழங்கிய நேர்காணல் உறுதிப்படுத்துகின்றது.

எப்போதோ தொலைந்திருக்கவேண்டிய நபராக வித்தியாதரனை நோக்கி சாபம் இடுவது ஜனநாயப்பண்புகளின் மீது கிஷோருக்கு இருக்கும் அவநம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. பொது வாழ்வில் இணைந்து மக்கள் பிரதிநிதியாக வலம் வரும் ஒருவர் விமர்சனங்களுக்கு முகம் கொடுக்கும் ஆளுமையைப் பெற்றிருக்க வேண்டும்.

ஊடகங்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்ந்து விடும் அதிகார இருப்புவாதிகள் போன்று ஒடுக்கப்படும் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இயங்கமுடியாது.

கொழும்பு வீதி ஓரப்பற்றைக்குள் தராக்கி சிவராம் என்கின்ற ஊடகப்போராளி எழுத்துச் சமராடி தூக்கி வீசப்பட்டபோது அடக்குமுறைக்கு எதிராக நிமிர்ந்து நிற்கும் அனைத்துலக ஊடகங்கள் கொதித்தெழுந்தன.

சுருங்கிவிட்ட உலகத்தில் செய்திகள் பாய்ந்து செல்லும் வேகம் எழுத்தின் வலிமை கருத்தாக மாறி மக்களைப் பற்றிப் பிடித்துவிடும் என்கிற யதார்த்ததை உணர்த்துகின்றது.

## மெய்கண்டான் வித்தியாலய மெய்வன்மைப் போட்டி

சுழிபுரம்,பெப்.8

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மு.நடராசா வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் உடற்கல்வி, சிறப்பு விருந்தினர்களாக க.புத்திசிகாமணி செயலாளர், பிரதேச சபை வலி. மேற்கு, லயன் க.கனகராசன் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-201-28)

## ஆசிரியர்களின் சம்பளம்

அச்சுவேலி, பெப். 8

கிளிநொச்சி, துணுக்காய் கல்வி வலயங்களில் வரவைப் பதிவு செய்த ஆசிரியர்களுக்கான ஜனவரி மாதச் சம்பளம் வவுனியா, யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைகளில் வழங்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் இன்று திங்கட்கிழமை தங்களின் சம்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று வடக்குமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (ஒ-11)

## ஜெனரல் பொன்சேகா கைது....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சதிசெய்தார்கள் என்ற குற்றச்சாட்டை ஜெனரல் பொன்சேகா மிகப் பலமாக மறுத்துள்ளார்.

இது என்மீது குற்றஞ் சாட்டவும் என்னைக் கொலை செய்வதற்குமான முயற்சியேயல்லாமல் வேறொன்றுமில்லை என்று பொன்சேகா கூறியுள்ளார்.

ஓய்வு பெற்ற ராணுவ ஜெனரலும் ஏனைய முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களும் ஹோட்டலில் தங்கியிருந் தமைக்கு பாதுகாப்பு அச்சங்களே காரணமாய் இருந்தனவென்று ஜெனரலின் உதவியாளர்கள் கூறியுள்ளார்கள்.

தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே தமது பாதுகாப்பு சக்திகளையெல்லாம் ஓரிடத்தில் சேர்ந்து இருக்கச் செய்வது அவசியம் என்று கருதப்பட்டது என்று பெயர்க்குறிப்பிட விரும்பாத முன்னாள் ராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். 'எமது வேட்பாளர் அன்றிரவு கைது செய்யப்படவிருந்தார் என்ற தகவல் எமக் குக் கிடைத்திருந்தது. அவரை பாதுகாக்க நாங்கள் [...]' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆனால் குற்றவியல்துறை புலனாய்வாளர்கள் வேறுவிதமான கதைகளைக் கூறுகின்றார்கள்.

விசாரணைகள் தொடர்கின்றன. பல விடயங்கள் அம்பலமாகியுள்ளன. இப்பொழுது காவலில் வைக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற ஒரு மேஜர் ஜெனரல் நாடு முழுவதும் ஓய்வு பெற்ற ராணுவத்தினரைச் சேர்த்து வந்துள்ளார். இன்னொரு ஓய்வு பெற்ற ஜெனரலுடன் இவர் பல நகரங்களுக்குச் சென்று வந்துள்ளார். இவர்களின் நோக்கம் முன்னாள் ராணுவத்தினரை சேர்ப்பதாகும். அவ்வாறு சேர்க்கப் பட்டவர்களுக்கு தலா 50 ஆயிரத் துக்குக்கு மேலாக மாதாந்தம் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என்கிறார்கள் அவர்கள்.


ஜெனரல் பொன்சேகாவின் உதவியாளர்களைப் பொறுத்தவரை ஓய்வு பெற்ற ராணுவ அலுவலர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்ந்திருந்தது உண்மைதான். ஆனால் அவர்கள் அனைவரும் தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் என்று கூறினார்கள். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரையும் கவர்ந்திழுக்கும் சுப்பிரமணியம் பூங்கா

யாழ். நகரில் காணப்படும் யாவரும் அறிந்த ஒன்று பொதுசன நூல் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள சுப்பிரமணியம் பூங்கா. இது மக்களிற்காக கட்டப்பட்ட இயற்கையும் செயற்கையும் கலந்து காணப்படும் அழகிய சோலை. இப் பூங்கா மக்களின் பொழுது போக்கிற்கான கட்டடமாக மட்டுமல்லாது உறவுகள் இணைந்து மகிழ்ந்திடும் ஓர் இடமாகவும் காணப்படுகின்றது. அதாவது இப்பூங்காவிற்கு பெற்றோருடன் பிள்ளைகள் இணைந்து வருவதால் சிறந்த கலாசார பின்னணியில் இப்பூங்கா காணப்படுகின்றது.

அத்தோடு இங்கு காணப்படும் அழகிய பூக்கள் இங்கு வரும் பலரைக் கவிஞராகவும் மாற்றுகின்றன. அதாவது கற்பனைகளைத் தூண்டி கவிதைகளை வடிக்கும் மௌன மொழி பேசும் இயற்கைச் சோலையாக இது திகழ்கின்றது. மேலும் குழந்தைகள் விளையாடும் வகையில் சில கருவிகளுடன் கூடிய விளையாட்டு நிலையமும் காணப்படுகின்றது. இங்கு நாளாந்தம் பெரும் தொகையான மக்கள் வருகை தந்து மனம் மகிழ்ந்து செல்கின்றனர். சனி ஞாயிறு போன்ற தினங்களில் ஏனைய நாள்களை விட அதிகமான மக்கள் வருகை தருகின்றார்கள். இங்கு வருகை தரும் மக்களில் யாழ். நகரப் பகுதியில் உள்ளவர்கள்மட்டு மல்லாது அனைத் துப்பிர தேச வேறு மாவட்ட, வேறு நாட்டு மக்களும் உள்ளனர். இன்று நாட்டில் பல வருடகாலமாகத் தொடர்ந்து யுத்த அனர்த்தங்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் மனஞ் சஞ்சலங்களுக்குள்ளாகி நிம்மதியற்று காணப்படும் மக்கள் அனைவருக்கும் அமைதியளிக்கும் இடமாக இந்த சுப்பிரமணியம் பூங்கா விளங்குகின்றது.



இப்பூங்காவில் இன்னும் சில வசதி வாய்ப்புக்கள் மேற்கொள்ளப் பட்டால் இதன் அழகு மிளிரும். அதாவது இங்கு இரு நீர்த்தடாகத் தொட்டி வடிவில் நீர் பாய்கின்ற வகையில் தொட்டிகள் காணப்படுகின்ற போதிலும் அதனுள் நீர் இல்லாமையினால் அச் சோலையின் அழகைப் குறைப்பது போல் காணப்படுகின்றது. ஒரு மலரின் ஓர் இதழ் வீழ்ந்துவிட்டால் அந்த மலரில் ஏதோ குறையுள்ளது போல் காணப்படும். அவ்வாறுதான் அந்த அழகுச் சோலையில் நீர் வீழ்ச்சியமைப்புக்கள் காணப்படும் போதிலும் அதில் நீர் இல்லாமை சிறிய மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றது எனத்தெரிவிக்கின்றனர் மக்கள்.



இப்பூங்காவின் சிறப்பிற்குக் காரணம் கலாசாரத்தை சீரழிக்காத வகையில் அச்சோலையில் காணப்படும் காட்சிகளும் அங்கு வரும் மக்களின் கலாசாரத்தை சீரழிக்காத செயற்பாடுகளுமாகும். இதனைப் போன்றே என்றும் இருத்தல் வேண்டும் அப்போது தான் ஒரு புனிதத்திற்குரிய இடமாக இது மதிக்கப்படும். இங்கு ஒரு சிறிய பணத் தொகையே மக்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. பெரும் மகிழ்வைப் பெற இச்சிறு பணத்தை வழங்குவது ஒரு பொருட்டல்ல என மக்கள் தெரிவிக்கின்றனர். இப் பூங்காவைப்பற்றிக் கூறுகையில் இதன் சுகாதார மேம்பாட்டைக் கூறுதல் மிகவும் முக்கியமானதாகும். பல தொகை மக்கள் இங்கு வருகை தந்து செல்லும் போதுஉணவுப் பொருள்களை இச் சோலையில் வைத்து உண்கின்ற போதிலும் எப்பொழுது சென்றாலும் இப்பூங்கா சுகாதாரமாகக் காணப்படுகின்றது. இதற்காக இதனைப் பராமரிக்கும் வேலையாள்களை எவ்வளவு பாராட்டி

**ப. ராஜசோபனா**


னாலும் தகும். மனம் சுழிக்காது வந்து செல்வதற்கு இச் சுகாதார நிலையும் ஒரு காரணமாக உள்ளது. இயற்கையோடு உறவாடுகையின் போதும் உறவுகள் மகிழ்வதைப் பார்த்து மகிழ்கையின் போதும் எமது ஆயுள் காலம் ஒரு நாளாயினும் அதிகரிக்கும். எனவே சுப்பிரமணியம் பூங்காவிற்குச் செல்லுங்கள் . உங்கள் மனக்கவலைகளை மறவுங்கள். எப் போதும் மகிழ்வுடன் வாழுங்கள்.






# மிளிரும் யாழ். மணிக்கூட்டுக் கோபுரம்

யாழ். நகரப் பகுதியின் மத்தியில் எல்லோரையும் நிமிர்ந்து பார்க்க வைக்கும் கோபுரம் மணிக்கூட்டுக் கோபுரமே. யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கும் யாழ். பொது நூலகத்திற்கும் அருகே காணப்படும் இம் மணிக்கூட்டுக் கோபுரமானது கிட்டத்தட்ட 70 அடி உயரத்தை கொண்டதாக காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள உயரமான மணிக்கூட்டுக் கோபுரங்களுக்குள் யாழ். மணிக்கூட்டுக் கோபுரமும் உள்ளடங்கும். 1875ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்த வெளி நாட்டவரான ''கிங்எட்வேட்'' என்பவரை யாழிற்கு வரவேற்பதற்காக மக்களிடமிருந்து பணம் சேர்க்கப்பட்டது. அப்படி சேர்க்கப்பட்ட பணத்திலிருந்து ஒரு தொகைப் பணம் எஞ்சியதாகவும் அப்படி எஞ்சிய பணத்தைக் கொண்டு எம் மூதாதையினரால் கட்டப்பட்டதே இம் மணிக்கூட்டுக் கோபுரம் என்பது வரலாற்றுச் சான்றாகும். அக்காலத்தில் எம் மூதாதையினரால் கட்டப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரமானது. இந்த நூற்றாண்டுச் சந்ததியினருக்கும் பயன்படுவது போற்றத்தக்கது. யாழ். நகரின் ஊடாகப் பயணிக்கும் பாதசாரிகளுக்கும், வாகனங்களில் பயணிப்பவர்களுக்கும் நேரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் இம் மணிக்கூட்டுக் கோபுரம் மிகவும் உதவியாக உள்ளது. அது மட்டுமன்றி பல மீற்றர் தூரத்திலிருந்தும் இம் மணிக்கூட்டுக் கோபுரத்தினை பார்வையிடலாம். கடந்த காலம் யுத்தம் காரணமாக இம் மணிக்கூட்டுக் கோபுரத்திற்குச் சேத மேற்பட்டாலும் ''வேரோடு சாயாத விருட்சம் போல்'' கம்பீரமாகக் காணப்படுகின்றது. கடந்த 2002 ஆம் ஆண்டு சேதமேற்பட்ட பகுதிகளைச் சீர் செய்து புனரமைப்புச் செய்யப்பட்டது. மீண்டும் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். பொலிஸ் நிலைய வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதி போன்றவை மூடப்பட்டு மணிக்கூட்டுக் கோபுரம் பாவனையில்லாமல் காணப்பட்டது. கோபுரத்தில் காணப்படும் மணிக்கூடுகளும் செயலிழந்து பராமரிப்பற்றும் காணப்பட்டன. ஆனால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதி சூழலினால் மீண்டும் மணிக்கூட்டுக் கோபுர வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.



செயலிழந்த மணிக்கூடுகளை அப்புறப்படுத்தி கோபுரத்தை மெருகூட்டியதோடு கடந்த ஆண்டு ஐப்பசி மாதமளவில் தொழில்நுட்பவியலோடு கூடிய நவீன வசதியிலான மணிக்கூடுகளை கோபுரத்தில் பொருத்தியுள்ளதை தற்போது காணக் கூடியதாகவுள்ளது. யாழ். மக்களை மட்டுமன்றி வெளிமாவட்ட மக்களையும், வெளி நாட்டவரையும் இம் மணிக்கூட்டுக் கோபுரம் கவர்கின்றது. யாழிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் முக்கியமாக இதனையும் பார்வையிட்டுச் செல்வதை காணக் கூடியதாகவுள்ளது. யாழ். நகரிற்குள் பாடசாலை செல்பவர் முதல் வேலைக்குச் செல்பவர்கள்மற்றும்தம் அன்றாடப்பயணத்துக்காகச் செல்பவர்கள் வரை அனைவரும் தற்போது யாழ். மணிக் கூட்டுக்கோபுர வீதியைப் பயன்படுத்துகின்றனர். கடிகார வசதியற்ற ஏழைகள் முதல் கடிகாரம் செயலிழந்தவர்கள் வரை தம் சொந்தக் கடிகாரமாக இம் மணிக் கூட்டுக் கோபுரத்தையே பயன்படுத்துகின்றனர். மேலும் இன ,மதபேதமின்றி அனைவரும் சேர்ந்து பார்வையிடும் பெருமை கூட இம் மணிக் கூட்டுக் கோபுரத்தைச் சாரும். இப்படி வானளாவ நிமிர்ந்து நிற்கும் எம் சொத்தான இம் மணிக் கூட்டுக் கோபுரத்தைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவருடைய கரங்களிலே உள்ளது. நமக்காக எம் மூதாதையரால் உருவாக்கப் பட்ட இதனை எம் எதிர் காலச்சந்ததியினருக்கும் பயன்பட வழி வகுத்தல்அவசியமாகும். இம் மணிக்கூட்டுக் கோபுரத்தில் எத்தனை விதமான நவீன வசதியுள்ள கடிகாரங்கள் பொருத்தினாலும் இக் கோபுரத் திற்கு என்றிருக்கும் தனித்துவம் மாறாது என்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே மணிக் கூட்டுக் கோபுரத்திற்கு மதிப்பளிப்பதோடு அது காட்டும்பொன்னான நேரத்தையும் மதிப்போம்.

**தர்ஷா-சந்திரகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



தடை, தாமதங்களால் எரிச்சல், கோபம் அடையலாம். சபலங்களை, பேராசைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். சில வேலைகளை அவசரப்பட்டு செய்து விட்டு பின்னர் வருத்தம் கொள்வீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம்.

### இடபம்



எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும் நாள். தந்தையுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பிரியமான சிலர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உடன் பிறப்புக்கள் மீதான பாசம் கூடும். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசி உங்களின் சொந்த விடயங்களைச் சொல்வீர்கள்.

### மிதுனம்



லட்சியங்களை நிறைவேற்ற துடிப்போடு செயல்படுவீர்கள். சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்திலிருந்தே முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். நண்பர் ஒருவரின் ரகசியத்தை அறிந்து கொள்வீர்கள்.

### கடகம்



பெருமை, ஜம்பத்திற்காக செலவு செய்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என, பயம் கொள்ளலாம்.

### சிங்கம்



உங்களின் உதவியுடன் நண்பர்கள் சிலர் வேலைகளை முடித்துக் கொள்வர். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக் காக அலைய நேரிடலாம். சிலரின் வருகையை எதிர்பார்த்து நீண்ட நேரம் காத்திருக்கலாம். பொறுப்பான வேலை ஒன்றை ஏற்றுக் கொள்வதால் அவதிகளுக்கு ஆளாகலாம். வாகனப் பிரயாணத்தில் கணிசமான பணம் கரையும்.

### கன்னி



விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வியாபாரிகள் வரவேண்டிய மிகுதிகள் வருவதால் மகிழ்ச்சி அடைவர். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூல மாக முடியும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல் லலாம். சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். மனதில் சந்தோஷம் குடிகொள்ளும்.

### துலாம்



அயலாருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில் மற்றொரு செலவு உருவாகலாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம்.

சில்லறை விமர்சனம் செய்து அதில் இன்பம் காண்பீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

### விருச்சிகம்



பகட்டான ஆடைகள் அணிவதில் நாட்டம் செல்லும். முக்கிய விடயங்களில் உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்குச் செய்து முடிப்பீர்கள். உடற்பயிற்சி, தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

### தனுசு



ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டிய நாள். சிலர் உங்களிடம் கடன் வாங்கலாம் அல்லது நீங்கள் சிலருக்கு கடன் கொடுக்கலாம். பல நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை அவசரமாக முடிக்க வேண்டிய கட்டாய நிலைமை உருவாகலாம். குடும்பத்தினரின் விமர்சனங்களுக்கு ஆளாகலாம். நிதானம் அவசியம்.

### மகரம்



சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். நண்பர்கள் சிலருக்காக மற்றொருவரிடம் பரிந்து பேசுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். தாய் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். ஆதாயகரமான நாள்.

### கும்பம்



உறவினர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும் நாள். உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். இரண்டு மூன்று நாள்களாக நீடித்த மனக் குழப்பங்கள் முடிவுக்கு வரலாம். நினைத்த பொருளை வாங்க தாராளமாக செலவிடுவீர்கள்.

### மீனம்



உங்களை குறை சொல்லும் சிலரிடம் பதிலுக்குப் பதில் பேசி சமாளிப்பீர்கள். உறவினர்கள் சிலருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்டு அதை செய்து கொடுப்பீர்கள். ஓய்வெடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில் தொந்தரவு ஏற்படலாம். மற்றவர்களுக்காக உங்களுக்கு பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் கேதீஸ்வரன் விஜயநந்தினி (விஜி)



தோற்றம்:
26.12.1969

மறைவு:
10.01.2010

"குடும்பம் எனும் கோயிலில் குலதெய்வமாயிருந்து
எம் மனங்களில் உம் நினைவுகளை விதைத்திட்டு
இயற்கையின் நியதியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
விதி விதித்த வலையினிலே வீழ்ந்துவிட்டாய் அன்னையே!
ஆற்றுவார் பலர் இருந்தும் ஆறவில்லை எம் மனங்கள்
அல்லல்கள் ஏதுமின்றி ஆண்டவன் அடி சென்றீர்
அங்கு உறங்குகின்றீர் அமைதியாக
உங்கள் உயிர் பிரிந்த வேதனை நினைவுகள்
எம் உயிர் பிரியும்வரை அழியாதம்மா!"

எமது குடும்பக் குலவிளக்கு அணைந்தவேளை உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள். 08.02.2010 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று நடைபெற இருக்கும் அந்தியேட்டி நிகழ்விலும் 10.02.2010 ஆம் திகதி எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் பங்கு கொண்டு அதன் பின்னர் நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விலாசம்:
கோ.கேதீஸ்வரன்,
இல.118, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771725489

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

(சி/564673)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**01.04.1988**

✱வடக்கில் இருந்து கிழக்குக்கும், கிழக்கில்இருந்து வடக்குக்கும் இந்திய அமைதிப் படையினர் போக்குவரத்துச் செய்ய இலங்கைஅரசு சில நிபந்தனைகளை விதித்திருப்பதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

✱இந்தியா திரும்ப அழைத்துக் கொள்ளும் மலை யகத் தமிழரின் எண்ணிக்கைக்கு ஏற்பவே எஞ்சியோருக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கொள்கையை இலங்கை அரசு கடைப்பிடிக்கக் கூடாது என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

✱கல்முனைப் பிரதேசத்தில் முஸ்லீம் மக்கள் வாழும் இரு கிராமங்களில் ஆயுதம் தரித்த கோஷ்டியொன்று தீவைத்தும், துப்பாக்கிச் சூடு நடத்தியதிலும் பலர் மரணம்.

**02.04.1988**

✱யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப் பட்டு வந்த எரிபொருள் விநியோகத் திற்கான ''பெர்மிட்'' முறை நீக்கம்.

✱எல்லைப்புறத் தமிழர் கிராமங்களில் இராணுவ சீருடையில் இந்திய அமைதிப் படை யினரும், நடமாட நேர்வதால் சீருடையில் நடமாடுபவர்களைத் தீவிர வாதிகள் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டாமென இலங்கை இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிப்பு.

**03.04.1988**

✱தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் ஒரேயடியாக அரசு விடுதலை செய்ய வேண்டுமென தமிழ்க் காங்கிரஸ் கட்சி செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவிப்பு.

✱தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக 26 மாணவர்களை உடனடியாக விடுவிக்கும்படி ஜனாதிபதி ஜே.ஆர்., பொலீஸ்மா அதிபருக்குப் பணிப்பு.

✱அரசமைப்புச் சட்டத்திருத்தமொன்றைத் தாம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு.

**04.04.1988**

தமது தனிப்பட்ட பாதுகாப்புக்காக ஐந்து துப் பாக்கிகளை வைத்திருக்க சுதந்திரக் கட்சித் தலைவி சிறீமாவோவுக்கு பாதுகாப்பு அமைச்சர் அனுமதி.

✱தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் ஆறுமாத காலத்துள் வடக்கு, கிழக்குப் பிரதேசங் களிலுள்ள தத்தமது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விடுவார் என தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

**05.04.1988**

✱இலங்கைத் தமிழரது அபிலாசைகளை திருப்தி செய்யக்கூடிய 14 ஆவது அரசமைப்புத் திருத்தமொன்றை இலங்கை அரசு கொண்டு வருமென இந்திய அரசு உறுதியளித்தால் ஆயுதங்களை ஒப் படைத்து இலங்கை அரசுடன் பேச விடுதலைப்புலிகள் தயாராக உள்ளதாக அதன் தலைவர் பிரபாகரன் இந்திய அரசுக்கு கடிதம் அனுப்பிவைப்பு.

✱திருகோணமலையை அண்டியுள்ள பகுதி களில் இலங்கை இராணுவத்தினர் புதிதாக பத்து முகாங்கள் அமைப்பு.

**06.04.1988**

✱தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்று தங்கியிருந்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களில் ஒரு தொகுதியினர் யாழ்ப்பாணம் திரும்பினர்.

✱வட பகுதியில் அமைதி ஏற்பட்டுள்ளதால் அங்கு திரும்பிச் சென்று வாழுங்கள் எனக் கூறியே இந்திய உயரதிகாரிகள் தம்மை யாழ்ப்பாணம் அனுப்பிவைத்ததாக தமிழ்நாட்டில் இருந்து திரும்பிய அகதிகள் தெரிவிப்பு.

✱பிரிட்டிஸ் எயர்வேய்ஸ் நிறுவனத் திற்குச் சொந்தமாக விமானங்கள் இலங்கையில் தரித்துச் செல்லாது என மேற் கொள்ளப்பட்ட முடிவு இலங்கைக்கு மற்றுமொரு பொருளாதார இழப்பு என விமர்சனம்.

**07.04.1988**

✱ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீரவைக் கைதுசெய்ய விசேட பொலிஸ் குழுவொன்று தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவிப்பு.

✱இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் இலங் கைக்கு திருப்பி அனுப்ப காலக்கெடு எதனையும் இந்தியா நிர்ணயிக்க வில்லை என இணை அமைச்சர் நட் வர்சிங் லோக சபையில் தெரிவிப்பு

**08.04.1988**

✱இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கியதற்காக இராணுவ நீதிமன்றத் தால் தண்டிக்கப்பட்ட கடற்படை வீரர் தமது தண்டனையை இரத்துச் செய்யக் கோரி மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்.

✱வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராச்சிச் சபைகளுக்கு உலக வங்கி 22 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு.

✱வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அகதிகளின் புனர்வாழ்வுத் திட் டங்களுக்கு ஐ.நா சபைகளின் அகதி கள் புனர் வாழ்வு ஆணைக்குழு ஒரு கோடி 34 லட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு.

**09.04.1988**

யாழ். குடாநாட்டுப் பொதுமக்கள் தம்மிடமுள்ள பழைய மற்றும் கிழிந்த ஐந்து ரூபா, இரண்டு ரூபா நோட்டுக் களை யாழ். குடா நாட்டிலுள்ள இராணுவ முகாம்களில் மாற்றிக் கொள்ள இயலும் என பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு.

ஒருவர் காணாமல் போன ஒரு வருடத்தின் பின்னர் அவரை இறந்து விட்டதாக கருதவேண்டும் என்று கூறும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்.

**10.04.1988**

✱தமிழீழ விடுதலைப் புலிகளை விட்டு விட்டு தமிழர் அமைப்புக்கள் ஒன்று சேர முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர் தலிங்கம் தெரிவிப்பு.

✱சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக வழங்கிய உறுதி மொழியிலிருந்து இலங்கை அரசு பின் வாங்கியுள்ளதாக தமிழ்க் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குமார் பொன்னம் பலம் தெரிவிப்பு.

✱தமிழர் விடுதலைக் கூட்டணி உயர் மட்டத் தலைவர்களுக்கும்விடுதலைப் புலிகள் இயக்க உயர் மட்டத் தலைவர் களுக்கும் இடையில் சென்னையில் பேச்சு வார்த்தை.

**11.04.1988**

✱நிபந்தனையற்ற போர் நிறுத்த மொன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியையும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையும் கோரும் மகஜ ரொன்று திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 64 பொது அமைப்புக்களால் அனுப் பிவைப்பு

யாழ். குடாநாட்டில் தங்கியிருக்கும் திரு கோணமலை மாவட்ட அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்ல இந்திய அமைதிப் படை உதவும் எனத் தெரிவிப்பு

**12.04.1988**

✱மூன்றாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர். போட்டியிடுவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக் கையில் இரண்டு பட்ட கருத்து

✱விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்குமிடையே ஏற்கனவே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் முட்டுக் கட்டை ஏற்பட்டதற்கு இந்தியத் தூது வர் டிக்ஸிற்றே காரணம் என தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் குமார் பொன்னம் பலம் தெரிவிப்பு

**13.04.1988**

✱வட பகுதியில் ஐந்து மாவட்டங்களி லும் புனர்நிர்மாணப்பணிகளை ஐ.நா.சபை தனது நேரடி மேற்பார்வையில் செயற் படுத்துவிக்கவுள்ளதாக ஐ.நா சபையின் புனர்வாழ்வு உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு.

✱தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந் திய அரசுக்குமிடையே தொடர்பு இருந்து வருகிறது என இந்திய வெளி யுறவு அமைச்சர் நட்வர்சிங் தெரிவிப்பு

✱எதிர்க்கட்சிகள் திகைக்கக்கூடிய வகையில் அரசு பொதுத்தேர்தலுக் கான திகதியை அறிவிக்குமென அமைச் சர் அதுலத் முதலி [illegible]

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

*2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப் படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.*



## கோஇளமுருகேசலிங்கம் மேனகா

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப் பிரிவு- 3ஏ**

நான் தரம் 6 முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்று வருகின்றேன். இந்து அன்னை எனது கல்விக்காக வழங்கிய கொடைகள் ஒப்பற்றவை. எமது ஆசிரியர்கள் எம்மைச் செவ்வனே வழிநடத்தி இப் பெறுபேற்றைப் பெறச் செய்தார்கள். எமக்கு எனது மதிப்புக்குரிய அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் என யாவரும் வழிகாட்டிகளாக இருந்ததுடன் பல உதவிகளும் ஊக்குவிப்புகளும் தந்தார்கள்.

நான் கலைப்பிரிவில் கல்வி கற்று முதன்மையான பெறுபேற்றைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் படித்தேன். எனது இப் பெறுபேற்றுக்கு இறையாசியும், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சகோதரர்களின் ஊக்குவிப்பும் வழிகாட்டலுமே காரணமாக அமைந்தன.

எனது இப் பெறுபேற்றினை வீரகத்தி விநாயகரினதும் ஏனைய தெய்வங்களினதும் ஆசிகள் தீர்மானித்தன. அத்துடன் இன்று வரை எம்மை வழிநடத்துகின்ற இறைவனுக்கும் பெரியோர்களுக்கும் எனது உள்ளம் கனிந்த மானசீகமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

எனது சக மாணவர்களும் இனிவருகின்ற காலங்களில் சிறந்த முறையில் கல்வி கற்று பாடசாலைக்கும் எமது பிரதேசத்திற்கும் பெருமையைத் தேடித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.



## மிதிலா தில்லைநடேசன்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**வர்த்தகத்துறை- 3ஏ**

நான் ஆரம்பக்கல்வியை மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலும், பின்பு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையிலும் கற்று தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன். பின்பு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி அடுத்த கட்ட கல்வியை யாழ்ப்பாணக் கல் லூரி வட்டுக்கோட்டையிலும் பின்பு எனது கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி யிலும் தொடர்ந்தேன். ஜி.சீ. ஈ சாதாரண தரத்தில் 10ஏ பெற்று உயர்கல்விக்காக வணிகத்துறையை தெரிவு செய்து அதில் சிறந்த பெறுபேற்றை பெற்றேன். இதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும் எனது நன்றியை மனப்பூர்வமாகத் தெரிவிக்கின்றேன்.

எனது பாடசாலையில் இனியும் தொடர்ந்து வரும் காலங்களிலும் மாணவர்கள் நல்ல பெறுபேற்றை பெற வேண்டும் எனக் கூறி மீண்டும் ஆசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். விடாமுயற்சியுடன் எதனையும் முயன்றால் எமது இலக்கை மிக இலகுவாக அடையலாம் என்பது எனது கருத்து.

இறையாசியும் எமது பாடசாலை ஆசிரியர்களின் அயராத உழைப்பும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களின் பங்களிப்பும், எனது பெற்றோர், அண்ணா, நண்பர்களின் ஊக்குவிப்பும் எனக்கு இப்பெறுபேற்றை எடுக்கக் காரணமாய் அமைந்தன.

ஒரு சிறந்த முகாமையாளராக வந்து எனது நிறுவனத்தினை கட்டுக்கோப்புடன் சிறந்ததோர் நிலைக்குக் கொண்டு வந்து அதன் மூலம் எனது ஊருக்கு சிறந்த சேவை ஆற்றவேண்டும் என்பதே எனது இலட்சியம் ஆகும்.



## தங்கவேலு தனுஷன்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு- 3ஏ**

நான் தரம் ஒன்று முதல் ஜி.சீ.ஈ சாதாரணதரம் வரை அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று உயர்தரக் கல்விக்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியை தேர்வு செய்து கல்வியைத் தொடர்ந்தேன்.

கடவுளின் ஆசியுடன் எனது பெற்றோரின் அயரா உழைப்பின் காரணமாகவும் மற்றும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வழிநடத்தலின் காரணமாகவும் எனது முயற்சியின் காரணமாகவும் இப் பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டேன்.

எனது கல்விப்பயணம் வெற்றியை நோக்கிச் சென்று ஓர் அரசங்க அதிபராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம் ஆகும்.

எதிர்கால மாணர்களே உங்கள் இலட்சியத்தின் மீது நம்பிக்கையோடு செயற்பாடுங்கள் வெற்றி நிச்சம்.



## கந்தசாமி சிறிகாந்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு-2ஏ,பி**

நான் ஆரம்பக் கல்வியில் இருந்து ஜி.சீ.ஈ சாதாரணதரம் வரை கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில் கல்வி கற்றேன். அங்கு எனது கல்வியின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்த அதிபர், ஆசிரியர் அவர்களின் பங்களிப்பு மிகையானது. அதன் பின்பே உயர்கல்விக்காக சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு வந்து கலைப்பிரிவை தெரிவுசெய்து கற்றேன். இக் கல்லூரியில் ஆசிரியர்களுடைய கற்பித்தலும் அதிபர் என்மீது வைத்திருந்த நம்பிக்கையும் நான் ஆசிரியர் மீது வைத்திருந்த மதிப்பும் என்னை இந்த நிலைக்கு உயரச் செய்துள்ளது.

நாம் எமது இலட்சியத்தை அடைய கற்றல் மட்டும் போதாது கடவுள் நம்பிக்கையும் நாம் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் ஆசிரியர்களின் அன்பும் அருளும் நிச்சயம் இருந்தால் இலட்சியத்தை அடையமுடியும்.

**சந்திப்பு : இந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி — பகுதி - I

அலகு ரீதியான பரீட்சை நோக்கு வினாக்கள்:

## வணிக அறிமுகம், வணிகச் சூழலும் பொறுப்பும்

### பகுதி - 1

* 01-20 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. பின்வருவனவற்றுள் எது ஒரு மனித தேவையாகக் கருதப்படும்?
    1) பாண். 2) மருந்து வகைகள்.
    3) சப்பாத்துக்கள். 4) மோட்டார் வாகனங்கள்.
    5) உணவு வகைகள்.

02. ஒருவர் தனக்குத் தேவையான பொருட்களைப் பல்வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள முடியும். அங்கீகரிக்கப்பட்ட வணிக ஒழுக்காற்றுக்கமைய பின்வருவனற்றுள் பொருத்தமற்றதாகக் கருதப்படும் வகை எது?
    1) சுயஉற்பத்தி. 2) பரிமாற்றம்.
    3) பலவந்தத்தை பிரயோகித்தல். 4) பிச்சை எடுத்தல்.
    5) மேற்கூறிய எல்லாம்.

03. பின்வருவனவற்றுள் எது ஒரு உள்ளீடாக கருதப்பட முடியாதது?
    1) முயற்சியாண்மை. 2) இயற்கைவளம்
    3) மூலதனம். 4) நிகழ்வுகள்.
    5) அறிவு.

04. இல்லத்தரசி ஒருவர் தனது குடும்பத்தின் நுகர்வுக்காகத் தனது சொந்தத் தோட்டத்திலேயே வளர்த்த காய்கறிகளைப் பயன்படுத்துகிறார். இந்த உற்பத்தி நடவடிக்கை எவ்வாறு அழைக்கப்படும்?
    1) நேரில் உற்பத்தி. 2) பாய்வு உற்பத்தி.
    3) நேர் உற்பத்தி. 4) தொகுதி உற்பத்தி.
    5) முதனிலை உற்பத்தி.

05. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2007இன் அடிப்படையில் பின்வருவனவற்றுள் எது மொத்த தேசிய உற்பத்திக்கு உயர்ந்தளவு பங்களிப்பினை ஆற்றியுள்ளது.
    1) வேளாண்மை. 2) காட்டுத்தொழில்.
    3) சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும்.
    4) கட்டவாக்கம். 5) மின்வலு நீர்.

06. முதனிலை உற்பத்தியை (Primary Production) மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவுசெய்க.
    1) விவசாயம் / காட்டியல்/ மீன்பிடித்தொழில்/ கட்டுமானம்.
    2) சுரங்கமறுத்தலும் கல் அகழ்தலும் / ஆக்கத்தொழில் / கட்டுமானம்/ மீன்பிடித் தொழில்.
    3) விவசாயம் / காட்டியல்/ மீன்பிடித்தொழில் / சுரங்கமறுத்தலும் கல் அகழ்தலும்.
    4) ஆக்கத்தொழில் / கட்டுமானம் / போக்குவரத்து / களஞ்சியப்படுத்தல்.
    5) விவசாயம் / மின்சாரமும் வாயும் / சுரங்கமறுத்தலும் கல் அகழ்தலும் /மீன்பிடித் தொழில்.

07. கைத்தொழில்களானது அளவு அடிப்படையில் வகைப்படுத்தும் அடிப்படையாக எது கருதப்படலாம்?
    1) பேரளவுக் கைத்தொழில்.(Large Scale)
    2) நடுத்தரளவுக் கைத்தொழில்.(Medium Scale)
    3) சிற்றளவுக் கைத்தொழில்.(Small Scale)
    4) நுண்ணளவுக் கைத்தொழில்(Micro Scale)
    5) மேற்கூறிய அனைத்தும்.

08. ஒரு வணிகம் அடையவேண்டிய குறுகியதும் குறுங்கால அடிப்படையிலானதுமான எதிர்பார்ப்பு அழைக்கப்படுவது,
    1) இலக்கு. 2) குறிக்கோள். 3) கொள்கை.
    4) தந்திரோபாயம். 5) இலாபம்.

09. வணிகம் ஒன்றில் செல்வாக்குச் செலுத்தும் புறக்காரணியாக கருதமுடியாதது எது?
    1) தொழினுட்பமுன்னேற்றம்.
    2) அரச தலையீடு. 3) வேலையின்மை.
    4) வணிக உற்பத்தித்துறை. 5) பணவீக்கம்.

10. திரைப்படம், நாடகம், சங்கீதம், விளையாட்டு, சமூக சேவைகள் என்பன எந்த வகையான சேவையாகும்?
    1) சுற்றுலா. 2) பொழுதுபோக்கு.
    3) நிதிச்சேவை. 4) தனிநபர் அக்கறை.
    5) உயர்தொழில்.

11. வணிகம் என்பது,
    1) இலாபத்தை ஈட்டும் நோக்குடன் மட்டும் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு செயற்பாடாகும்.
    2) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் ஏதேனுமொரு செயற்பாடாகும்.
    3) பண்டங்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும் ஆகும்.
    4) இரு நபர்களுக்கிடையிலான ஓர் உடன்படிக்கையாகும்.
    5) பண்டங்களின் உரிமைமாற்றம் தொடர்பான கருமம் ஆகும்.

12. மிகை உற்பத்தி காரணமாக பண்டமாற்று முறைமை தோன்றியுள்ளது. அதன் இறுதி விளைவு யாது?
    1) மிகையுற்பத்தி மீளப் பகிரப்படுதல்.
    2) உற்பத்தி செய்வதற்கான ஊக்கல் தோன்றுதல்.
    3) பண்டங்களுக்கான உரித்து மாற்றமடைதல்.
    4) தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல்.
    5) துணைச் சேவைகள் விருத்தியடைதல்.

13. பின்வருவனவற்றுள் வணிகங்களின் ஒரு வகையாக கருதப்படக்கூடியது எது?
    1) சேவை வணிகம். 2) தனியார்துறை வணிகம்.
    3) பொதுசனப் பயன்பாட்டு வணிகம்.
    4) இலாபநோக்க வணிகம்.
    5) துணைச் சேவைகள் விருத்தியடைதல்.

14. சந்தையைக் கருத்திற்கொள்ளும் பொது வணிகர் ஒருவருக்கு மக்கட்சூழல் (Demographic Environment) மிகவும் முக்கியமான காரணி ஆகும் இதன்படி இலங்கையின் வணிகர்களுக்கான
    மிகவும் சரியான தற்போதைய பாவணையாளர் சனத்தொகை.
    1) 17 மில்லியன். 2) 18 மில்லியன். 3) 19 மில்லியன்.
    4) 20 மில்லியன். 5) 21 மில்லியன்.

15. வணிகத்தின் சமூகப் பொறுப்பு என்ற எண்ணக்கருவை விளக்குகின்ற மிகவும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
    1) அக்கறையுடையோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.
    2) பங்குதாரரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.
    3) ஊழியரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.
    4) சமூகத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.
    5) முகாமையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தல்.

16. வணிகச் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் இணையம், மின்னஞ்சல், மின் வங்கித் தொழில், கடனட்டைகள் போன்றவற்றின் வாயிலாக ஏற்படும் சூழல் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
    1) பொருளாதாரச் சூழல். 2) சமூகப்பண்பாட்டுச் சூழல்.
    3) சட்டவியல் சூழல். 4) தொழில்நுட்பச் சூழல்.
    5) மக்கட்சூழல்.

17. தனிப்பட்டோர் நம்பிக்கைகள், பெறுமானங்கள், நியமங்கள் என்பவை எவ்வணிகச் சூழலின் கீழ் கருதப்படும்?
    1) பொருளாதாரச் சூழல்.
    2) தொழில்நுட்ப விஞ்ஞானச்சூழல்.
    3) அரசியல், சட்டவியற் சூழல்.
    4) சமூகப் பண்பாட்டுச் சூழல். 5) இயற்கைச் சூழல்.

18. சூழற்காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
    அ - முகாமையாளர்கள் ஆ - தொழில் நுணுக்கம்
    இ - போட்டியாளர் ஈ - ஊழியர்கள்.
    உ - மக்கட் தொகையியல்
    மேற்போன்றவற்றுள் கட்டுப்படுத்த முடியாதவையாகக் கருதப்படும் காரணிகள் எவை?
    1) அ, ஆ, இ. 2) அ, ஈ, உ. 3) ஆ, இ, உ.
    4) அ, இ, உ. 5) ஆ, ஈ, உ.

19. இலங்கையில் வணிக நடத்தையை அரசியற் சூழல் பாதிக்கின்றது. பின்வருவனவற்றுள் எது அரசியற் சூழலுக்குப் பொருத்தமற்ற செயற்பாடாகும்?
    1) பொது முயற்சிகளைத் தனியார் மயப்படுத்தலும் மீள்கட்டமைப்புச்செய்தலும்.
    2) அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துதல்.
    3) எரிபொருள் விலை துரிதமாக உயர்தல்.
    4) ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும்.
    5) பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

20. வணிகத்தின் சிற்றினச் சூழல் விசையினுள் உள்ளடங்கும் காரணிகளாகக் கருதப்படாதது எது?
    1) உடைமையாளர். 2) ஊழியர்.
    3) முகாமையாளர். 4) வழங்குநர். 5) பங்குதாரர்.

* 21-30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்குக.

21. குறித்த உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வது தொடர்பில் குறித்த ஒரு நாடு கொண்டுள்ள நிபுணத்துவத்திற்கு வழங்கும் பெயர் ........................... ஆகும்.

22. சந்தையில் விற்பனைக்கிருந்தும் நுகர்வோர் அறிந்திராத பொருட்கள் .................. ஆகும்.

23. வணிக நிறுனங்களின் விவேகச் செயற்பாடுகளின் திரட்சி .................. ஆகும்.

24. முதல்நிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்பத்தி, மூன்றாம் நிலை உற்பத்தி என்பவற்றுக்கான இணைப்பு(Link) ............................ எனப்படும்.

25. கொள்வனவாளரையும் விற்பனையாளரையும் இணைக்கும் ஏதேனும் ஒரு நிலைமை .............................. என அழைக்கப்படும்.

26. உணவு வகைகள், உடை, வீடமைப்பு, கல்வி, உடல்நலம் என்பவை .................... ஆகக் கருதப்படும்.

27. வணிக நிறுவனங்களின் முதன்மையான நோக்கம்...........ஆகும்.

28. ஒரு வணிகம் மிகவும் கவனம் செலுத்தவேண்டிய வணிகச்சூழல் காரணி ........... ............................. ஆகும்.

29. சூழல் மாசுபடாதவாறு உற்பத்தி மேற்கொள்ளல் .................................... என அழைக்கப்படும்.

30. நல்லது கெட்டது பற்றி ஒருவரிடம் உள்ள அறிவு ....................... எனப்படும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: A.T.நந்தன் B.Com (Hons), MBA (Reading), CMA (SL)
ராஜேஸ்வரி கல்வி நிலையம், கொழும்பு-13.

"2010 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வணிகக் கல்வி, பகுதி - I: தொடர்ச்சி......

இல. 31-40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

31. நேரில் உற்பத்தியின் மூன்று வகைகளையும் குறிப்பிடுக.

..................................................................................................

..................................................................................................

32. உற்பத்திப்பொருள் ஒன்றின் பெறுமதி (Value) எவ்வாறு அளவிடப்படும்?

..................................................................................................

33. சந்தையின் புதிய போக்கு நோக்கி மாற்றத்தினை ஏற்படுத்திய பிரச்சினைகள் ஐந்தும் எவை?

..................................................................................................

..................................................................................................

34. கைத்தொழில் பொருட்களின் வகைகள் மூன்றும் எவை?

..................................................................................................

..................................................................................................

35. நிலம் எனும் இயற்கை வளத்தின் வகைகள் இரண்டும் எவை?

..................................................................................................

..................................................................................................

36. உண்மையான, நம்பகரமான வணிகம் எதிர்காலத்தில் அடையவேண்டிய எதிர் பார்ப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

..................................................................................................

..................................................................................................

37. மூன்றாம் நிலை உற்பத்தியின் பிரதான விளைவுகள் இரண்டும் எவை?

..................................................................................................

..................................................................................................

38. சூழல் பாதுகாப்புத் தினம் எத்திகதியில் இடம்பெறும்?

..................................................................................................

39. சூழல் மாசுபடுதலின் பிரதான வகைகள் நான்கும் யாவை?

..................................................................................................

..................................................................................................

40. இலங்கையில் சூழல் விவகாரங்கள் தொடர்பில் செயற்படுவதற்கான பிரதான அதிகாரத்தைக் கொண்டுள்ள நிலையம் எது?

..................................................................................................

..................................................................................................

## வணிகக் கல்வி | பகுதி - II

### வணிக அறிமுகம்:-

01. 1) தற்காலத்தில் வணிகமானது பரந்து விரிந்து காணப்படுவதுடன் அதன் அம்சங் களின் அடிப்படையில் பரந்த கருத்தினையும் கொண்டுள்ளது.
    1. வணிகம் (Business) என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாதென விளக்குக.
    2. வணிகமொன்றின் அடிப்படைத் தொழிற்பாடுகளை விளக்குக.
2) வேலைச் (Job) சிறப்புத்தேர்ச்சியின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தனித்தனியாக விளக்குக.
3) 1. ஏபிரகாம் மாஸ்லோவின் தனிநபர் தேவைப்பட்டியலையும், அடிப்படைத் தேவைகளையும் குறிப்பிடுக.
    2. தேவைக்கும் விருப்பத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
4) 1. உற்பத்தி காரணிகளின் (Factors of Production) அடிப்படைகளை விளக்குக.
    2. அறிவு (Knowledge) என்பதால் கருதப்படுவது யாது?
5) வியாபாரத் துணைநிலைச் சேவைகளானவை வியாபாரத்தைச் சிறப்பாக நடத்திச் செல்வதற்கு அவசியமாகக் காணப்படுகின்றது.
    1. வியாபாரங்களைச் சிறப்பாக நடத்துவதற்கான துணைச்சேவைகள் யாவை?
    2. நீர் குறிப்பிட்ட துணைச்சேவைகள் வியாபாரங்களை நடத்திச் செல்வதற்கு எவ்வாறு அவசியமாகின்றது?
6) வணிகங்களை வகைப்படுத்தும் அடிப்படைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

02. 1) பின்வரும் சோடி எண்ணக்கருக்களை ஒப்பிட்டு வேறுபாடு காட்டுக.
    1. நுகர்வு பண்டங்களும் கைத்தொழில் பண்டங்களும்.
    2. வர்த்தகமும் வியாபாரமும்.
    3. பண்டங்களும் சேவைகளும்.
2) வணிகம் தொடர்பான நவீன எண்ணக்கருவாக அமைவது உடைமையாளர்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி, வணிகத்தில் அக்கறை கொள்ளும் அனைத்துத் தரப்பினருக்கும் நலன்களைப் பெற்றுக்கொடுப்பதாகும். வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர் ஆறினைக் குறிப்பிட்டு அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு நலன் வீதம் குறிப்பிடுக.
3) இலங்கையில் 2007ஆம் ஆண்டுக்கான மொத்தத்தேசிய உற்பத்தி (GNP) தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| முதல் நிலை உற்பத்தி | 13.8% |
| இரண்டாம் நிலை உற்பத்தி | 24.1% |
| மூன்றாம் நிலை உற்பத்தி | 62.1%. |

    1. முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை உற்பத்திகளைத் தனித்தனியே விளக்குக.
    2. மேற்குறித்த சதவீதங்களுக்கமைய அதியுயர் பங்களிப்பு மூன்றாம் நிலை உற் பத்தியிலிருந்து ஆகும். அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
4) வணிக நிறுவனங்கள் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டிருக்கக் கூடும். அத் தகைய நோக்கங்களுள் ஆறு நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
5) 1. சேவைகளின் பிரதான சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.
    2. பரிமாற்றம் ஒன்று தோன்றுவதற்குக் காணப்படவேண்டிய இன்றியமையாத சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
6) மரபு ரீதியான (பழைமையான) வணிக நடைமுறைகளிலிருந்து நவீன வணிக நடைமுறைகள் வேறுபடும் விதத்தினை விளக்குக.

03. 1) இலாபத்தை உழைத்தல் மட்டுமே ஒவ்வொரு வணிக நிறுவனத்தினதும் நோக்க மல்ல. மேலே தரப்பட்டுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அல்லது உட்ன்பட வில்லையா? உமது விடைக்கு காரணங்களைத் தருக.
2) பாய்ச்சல் அட்டவணையைப் பயன்படுத்தி வணிகத்தின் உப பகுதிகளைத் தருக.
3) 1. வணிகங்களுக்கு விருப்பங்களைக் காட்டிலும் தேவைகளே கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இக்கூற்றுக்கு ஆதாரமாக இரு காரணங்களைத் தருக.
    2. வணிகங்களின் உண்மையான வெற்றி என்பது எக்காரணிகளால் தீர்மானிக்கப் படுகின்றன என்பதனை விளக்குக.
4) பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
    1. நேர் உற்பத்தியும் நேரில் உற்பத்தியும் (Direct and Indirect Production)
    2. பெறுமதியும் திருப்தியும் (Value and Satisfaction)
    3. பரிமாற்றமும் கொடுக்கல்வாங்கலும் (Exchange and Transaction)

04. 1) வேலையின்மையானது பொருட்கள் சேவைகளின் கேள்வி குறைவதற்கு காரண மாக இருப்பினும் வணிகத்திற்குச் சாதகமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகீன்றன. மேற்படி கூற்றுகளுடன் உடன்படுகின்றீரா அல்லது உடன்படவில்லையா? உமது விடைக்கான காரணத்தை விளக்குக.
2) 1. கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது த்றகால வணிகங்கள் பல்வேறு சவால் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றைக் குறிப்பிடுக.
    2. வணிகத்தின் பரிணாம வளர்ச்சியிலான கட்டங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
3) உலகமயமாதல் என்பதனை விளக்கி, சந்தைகளை உலக மயமாக்குதலின் நேரான விளைவுகளையும் எதிரான விளைவுகளையும் குறிப்பிடுக.
4) 1. இலங்கையில் கடந்த சில தசாப்தங்களாகக் கைத்தொழிலில் ஒரு பின்னடை வானது காணப்படுகிறது. இதற்கான காரணங்களைத் தருக.
    2. தற்காலத்தில் வணிகமானது பல்வேறு விருத்திகளைக் கண்டுள்ளது. இதற்கான காரணங்களை விளக்குக.

### வணிகச் சூழலும் பொறுப்பும்:-

05. 1) பேரண்டச்சூழல்களில் தற்காலத்தில் பூகோளச்சூழல் (Global Environment) காரணி களானது அண்மைய காலங்களில் வணிகங்களில் பல்வேறு சவால்களை எற்படுத்தி யுள்ளன. அவ்வாறான பூகோளச் சூழல் சவால்களை விளக்குக.
2) மக்கட்சூழலில் ஆக்கக் கூறுகளைக் குறிப்பிட்டு அக்கூறு ஒவ்வொன்றும் வணிகச் செயற்பாடுகளில் செலுத்தும் தாக்கத்தை விளக்குக.
3) வணிகர் ஒருவர் ஏன் வணிகச் சூழல் காரணிகளில் அக்கறை கொள்ளவேண்டியது அவசியமாகும். என்பதனை விளக்குக.
4) தற்காலத்தில் உலகளாவிய சனத்தொகை அதிகரிப்பானது ஏற்படுத்தியுள்ள விளைவு களைக் குறிப்பிடுக.
5) ஒரு வணிகத்திற்குக் காண்படும் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.
6) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
    1. புவி மாநாடு (Earth Sumit)
    2. கியோட்டா உடன்படிக்கை (Kyota Agreement)
    3 பபவாஅ ஆய்வு (SWOT Analysis)

06. 1) வணிகங்களின் சமூகப் பொறுப்பு என்பதனை விளக்கி சமூகப் பொறுப்பினை வெளிப்படுத்துவதற்கு கம்பனிகள் பின்பற்றும் உபாயங்கள் எவை?
2) இலங்கையில் நகர்ப்புறங்களில் சூழல் மாசுபடல் தொடர்பில் எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சினை கழிவுப்பொருட்களை முடிவு செய்வதற்கான இடங்களின் பற்றாக்குறையாகும். வணிகக் கல்வி மாணவன் என்ற முறையில் இப்பிரச்சினையை வெல்வதற்கு உதவக்கூடிய மாற்று வழிகளையும் நடைமுறை சாத்திய தீர்வுகளை யும் முன்மொழிக.
3) நுண்பாகச் சூழலில் காணப்படும் சூழல் விசைகளைக் குறிப்பிடுக.
4) 1. நுகர்வோனின் கொள்வனவு ஆற்றலினைத் தீர்மானிக்கும் மிகப் பிரதான காரணி பொருளாதாரச் சூழல் ஆகும். விளக்குக.
    2. தொழில்நுட்பச் சூழலின் காரணமாக வணிகங்களில் ஏற்படக்கூடிய சார்பான காரணிகளை விளக்குக.
5) வணிகச்சூழலை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக மிகவும்-அவசியமான முகாமை நுட்பம் (SWOT Analysis)ஆகும்.
    1. SWOT பகுப்பாய்வின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
    2. SWOT பகுப்பாய்வானது வணிக நோக்கங்களை அடைவதில் எவ்வாறு செல் வாக்குச் செலுத்தும் என விளக்குக.
6) 1. ஒரு வணிகம் ஒழுக்கநெறி முறையின் (Ethics) பிரகாரம் தொழிற்பட வேண்டும்.
    இக்கூற்றினை விளக்குக.
    2. மக்கள் குழுவால் பின்பற்றப்படும் சமூக சூழலின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

07. 1) 1. இயற்கைச் சூழலானது தற்காலத்தில் எதிர்நோக்கில் போக்குகளைக் குறிப்பிடுக.
    2. பேரண்டச்சூழல் தொடர்பாக (PESTNDG) என்பதனை விளக்குக.
2) வணிகங்களின் உயர்தொழில் வணிக ஒழுக்க நெறி தொடர்பாக (Proffessional Ethics) கருமங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
3) 1. வணிகங்களின் சமூகப் பொறுப்பு தொடர்பாக முக்கியத்துவம் அளிக்கப்படும் நடைமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
    2. வணிகங்களின் சமூகப் பொறுப்பின் பிரிவுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
4) 1. கிரயத்தைக் குறைப்பதற்காகப் பட்டாசு வெடி உற்பத்தியாளர் ஒருவர் சிறு பராயத்தவர்களையும் திறனைப்பெறாதவர்களையும் பயன்படுத்துகின்றார். தற்போது நிகழும் சட்டங்களினதும் சமூக ஒழுக்காறுகளினதும் அடிப்படை யில் இதன் விளைவுகளைக் குறிப்பிடுக.
    2. வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதாரச் சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி கூட்டுறவுப் பயிற்சிகளுக்கான விண்ணப்பம் கோரல்

2010 மாசி மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கும் பின்வரும் கூட்டுறவுப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவு
2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு
3. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவு

மேற்படி பயிற்சிகள் தொடர்பான விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் ரூபா 20/- செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 22.02.2010**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி 2 ஆம் மாடி
இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அதிபர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி)/564677)





டயிடஸ் ஸ்ரோஸ்
2439422



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் கஜேந்திரன் அவர்கள்
அன்புத் துணைவியார்
**அமரர் டாக்டர் ரேணுகா கஜேந்திரன்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வட்டு. மத்திய கல்லூரி,
வட்டுக்கோட்டை.

அதிபர், ஆசிரியர்கள்,
சக ஊழியர்கள்.

(92280)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1163 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 13 27 35 42

05-02-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,972,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 212,488 | 20/- | 4,249,760/- |
| 2 இலக்கங்கள் | 19,480 | 40/- | 779,200/- |
| 1 இல. + லக்கினம் | 19,249 | 60/- | 1,154,940/- |
| 2 இல. + லக்கினம் | 1,768 | 200/- | 353,600/- |
| 3 இலக்கங்கள் | 528 | 1000/- | 528,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,972,000/- | - |
| மொத்தம் | | | 7,985,500/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 253,572 | | 8,485,500/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,920,700/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : லசந்த சம்பத் குமார ஒப‌ எலப்பிட்டிபவத்த
கைத்தொலைபேசி வெற்றியாளர்: என்.எம்.சபூர் ஏறாவூர்

2010 பெப்ரவரி 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| புத்தளம் | 500959959-2-47 |
| பதுளை | 500952629-0-02 |
| மொனராகலை | 500946084-8-39 |
| கம்பஹா | 500964238-0-21 |
| மட்டக்களப்பு | 500953793-7-42 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

## சங்கானையில் 17மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

சங்கானை இந்து இளைஞர் மன்ற சிறுவர் பாடசாலையின் இறுதியாண்டில் சிறப்புச் சித்தியெய்திய 17மாணவர்களுக்குக் கௌரவிப்புச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்து இளைஞர் மன்ற தலைவர் பா.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் அ.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

இந்து இளைஞர் மன்றச் சிறுவர் பாடசாலை ஆசிரியை திருமதி த.அஜந்தாமதியும் விருந்தினர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (1-302)

## தேங்காய் பிடுங்க ஏறிய சிறுவன் தவறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், பெப்.8

தேங்காய்பிடுங்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய சிறுவன் விழ்ந்து படுகாயமடைந்தான்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நாவற்குழி ஐயனார் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் காந்தரூபன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயம் அடைந்தவன் ஆவான்.

இந்தச் சிறுவன் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (1-78)

## கவியரசு ச.ச.நிலையம் மீண்டும் இயங்குகிறது

புங்குடுதீவு, பெப்.8

சரவணை கிழக்கு, வேலணை பன்னம்புலம் கவியரசு சனசமூக நிலையம் இரண்டு தசாப்த காலங்களுக்குப்பின் மீண்டும் இயங்கி வருவதாகவும் அதற்கான நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் சோ.யோகலிங்கம் தெரிவித்துள்ளார். (1-88)

## மஹஜன சம்பத
මහජන සම්පත
Mahajana Sampatha

05.02.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2204

வெற்றி எழுத்து: S
வெற்றி எண்கள்: 5 3 9 8 4 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S 5 3 9 8 4 9 | ரூபா. 17,813,617/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 5 3 9 8 4 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 3 9 8 4 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 17 |
| 3 பரிசுகள் | 9 8 4 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | 8 4 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1381 |
| 5 பரிசுகள் | 4 9 | ரூபா. 100/= | பரிசுகள் 13407 |
| 6 பரிசுகள் | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 13314 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 5 3 9 8 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | 5 3 9 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 136 |
| 9 பரிசுகள் | 5 3 9 | ரூபா. 100/= | பரிசுகள் 1342 |
| 10 பரிசுகள் | 5 3 | ரூபா. 50/= | பரிசுகள் 13256 |
| 11 பரிசுகள் | S | ரூபா. 20/= | பரிசுகள் 53354 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,604,060.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 17,833,706.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk





ICDL ImageMaker is a new certification designed to give candidates the fundamental skills required to use and manipulate digital images. By explaining the basics and cutting through the jargon, ICDL ImageMaker gives candidates the practical skills they need to get the most out of digital imaging software and hardware.



GATEWAY LANGUAGE AND ICT CENTRE JAFFNA
*347, Kasthuriyar Road, Jaffna.*
*Phone : 021 222 7967 / 021 567 5555*
*E-mail : gatewayjfn@sltnet.lk*

ICDL Sri Lanka · ECDL Foundation · ICDL ImageMaker



# IMMEDIATE VACANCIES IN KURDISTAN

## குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL சர்வதேச விமான நிலையத்தில்
## (ERBIL INTERNATIONAL AIRPORT)
## உடனடி வேலை வாய்ப்பு

**14 நாட்களுள் வீசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.**

**வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை 11.02.2010 (வியாழக்கிழமை)**

★ **CLEANERS** - REQ No.100

100 கிளீனேர்ஸ் மாதச் சம்பளம் ரூபா.28,750/=

**MONTHLY SALARY - US$ 250/- (S.L.Rs.28,750/=)**

தங்குமிட வசதி இலவசம், உணவு இலவசம், மருத்துவ வசதி இலவசம்.
ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).

**Terms & Conditions**

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

உங்களது பாஸ்போட், 6 கலர் படங்களுடனும் 11.02.2010 வியாழக்கிழமை கொழும்பில் 375, டாம் வீதியில் உள்ள எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும். ஆங்கில அறிவு அதிகம் வேலையில்லை. இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். வயதெல்லை 18 - 35 வரை.

★ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு. ★

# TRANSSTAR
INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
Tel: 011-2386 824, Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311
Abb. No. AL/1311/Advt/02/10
(Near Hulftsdorp Courts - Colombo)
(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைத் தோட்ட அபிவிருத்தியும் அதில் பயன்படுத்த வேண்டிய தொழில்நுட்பங்களும்

யாழ்.மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தினால் விவசாய அபிவிருத்தி கமநல சேவை அமைச்சின் நிதியீட்டத்தின் மூலம் பாடசாலை மட்ட விவசாய அபிவிருத்தித் திட்டம் ஒன்று தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களின் உதவியுடன் வேலணை மத்திய கல்லூரி, வேலணை மேற்கு நடராஜ வித்தியாயலம், இந்து மகளிர் கல்லூரி, முத்துத்தம்பி மகா வித்தியாலயம், ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, வட்டு.மத்திய கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம், டிறிபேர்க் கல்லூரி ஆகிய 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலை ஒவ்வொன்றிற்கும் பாடசாலைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக விதைப் பொதிகள், தேசி, பப்பாசி, முருங்கைக் கன்றுகள், மருத்துவ மூலிகைக் கன்றுகள், மண்புழு வடிதிரவத் தொகுதிக்கான உபகரணங்கள், திரவ பசளை, தாவர பீடை நாசினிகள் தயாபரிப்பதற்கான உபகரணங்கள், பழமரங்கள் ஒட்டுதல், கத்தரித்தலுக்கான உபகரணங்கள், பீப்பா சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் பாடசாலைத் தோட்டத்திற்குத் தேவையான உபகரணங்கள் என்பன பாடசாலைகளின் தேவைப் பகுப்பாய்வின் அடிப்டையில் வழங்கப்படவிருக்கின்றன.

மேலும் இப்பாடசாலைகளுக்கு பாடசாலை தோட்ட பயிற்சிகளாக பாடசாலைத் தோட்டத்தின் முக்கியத்துவம், பாடசாலைத் தோட்டத்தைத் திட்டமிடல், கூட்டெரு தயாரிப்பு முறைகள், அவற்றின் பாவனை, மண்புழுத்திரவம், மண்புழு உரம் தயாரித்தல், அவற்றின் பாவனை, உயிரியல் பீடை நாசினிகளை உபயோகித்து மரக்கறிப் பயிர்களில் பீடை முகாமைத்துவம் ஆகிய தலைப்புகளில் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்து கல்லூரி, வட்டு.மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கான பயிற்சி 14.09.2009ஆம் திகதி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்துமகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளுக்கான பயிற்சி 16.09.2009ஆம் திகதி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட ஏனைய பாடசாலைகளுக்கான பயிற்சிகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பாடசாலைத் தோட்ட அபிவிருத்தி தொடர்பான முக்கிய தெழில்நுட்பங்கள் இக்கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளன.

### பாடசாலைத் தோட்டம்

பாடசாலையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கு விவசாயம் தொடர்பான பிரயோக ரீதியான அறிவு, திறன் என்பவற்றை வழங்கும் வகையில் திட்டமிட்டு அமைக்கும் தோட்டம் பாடசாலைத் தோட்டம் எனப்படும்.

### பாடசாலைத் தோட்டத்தை திட்டமிடும் போது கவனிக்கவேண்டியவை

❖ பயிர்களுக்கு ஏற்ப இடத்தைத் தெரிதல்
❖ அனைத்து உணவு வகைகளும் அடங்கக்கூடியவாறு பயிர்களைத் தெரிவு செய்தல்.

➢ காபோவைதரேற்று கொண்டவை
மரவள்ளி, வற்றாளை, குரக்கன், சோளம், தினை
➢ புரதம் கொண்டவை
பயறு, கௌபி, உழுந்து, போஞ்சி, பயற்றை, அவரை, துவரை
➢ கொழுப்புக் கொண்டவை
தேங்காய், சோயாஅவரை
➢ உயிர்ச்சத்து, கனிப்பொருள்கள் கொண்டவை.
மரக்கறிகள், இலைக்கறி வகைகள், பழப்பயிர்கள்
➢ வாசனைப் பயிர்கள்
இஞ்சி, மஞ்சள், கறிவேப்பிலை, றம்பை
➢ மூலிகைப் பயிர்கள்
துளசி, தூதுவளை, முடக்கொத்தான்

❖ பாடசாலைச் சுற்றாடலிலும் உள்ள வளங்களைப் பயன்படுத்தல்.
இடம், நேரம், முயற்சி, தாவர, விலங்குக் கழிவுகள்
❖ வருடம் முழுவதும் அறுவடை பெறக் கூடிய விதத்தில் திட்டமிட்டுப் பயிர்களை நடுதல்
❖ சுழற்சி முறையில் பயிர்ச் செய்கையைத் தொடர்ச்சியாகச் செய்தல்
❖ பாடசாலைக் கழிவுகள், பயிர்க் கழிவுகள், குப்பை கூழங்களைச் சேமித்து கூட்டெரு தயாரித்துப் பயிர்களுக்கு இட்டுப் பயன்பெறல்.
❖ பெரிய மரம் உள்ள இடங்களில் மிளகையும் நிழல் உள்ள இடங்களில் மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்களை நடுகை செய்யலாம்.
❖ நீர் வடிப்புள்ள, சூரிய வெளிச்சமுள்ள இடங்களில் வல்லாரை, பொன்னாங்காணி, தவசி முருங்கை போன்ற இலை மரக்கறிகளை நடுகை செய்யலாம்.
❖ பூக்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைப் பாடசாலையின் முன்புறம் நட்டு அழகிய சூழலை ஏற்படுத்தலாம்.

### தொடர்முறை கூட்டெரு தயாரிப்பு

தொடர்ச்சியாக சேதனக் கழிவுகள் கிடைக்கக்கூடிய இடங்களில் நிரந்தரமான 6 குழிகளை அமைத்து கூட்டெரு உற்பத்தியை மேற்கொள்ள முடியும். இம்முறையில் இருவார இடைவெளியில் ஒரு குழியில் இருந்து மற்றைய குழிக்கு கழிவுகளை மாற்றுவதன் மூலம் புரட்டுதலின் தேவை நிறைவு செய்யப்படும். சிதைவடையும்போது கழிவுகளின் கனவளவு குறைவடைவதால் குழிகளின் பருமனை சிறிதாக்கி தேவையான இடப்பரப்பை குறுகியதாகப் பராமரிக்க முடியும்.

பாடசாலைத் தோட்டங்களைப் பொறுத்தவரையில் இம்முறை மிகப்பொருத்தமான ஒன்றாகும். ஏனெனில் பரப்பளவு குறைவதால் நாளாந்தம் கிடைக்கும் சேதனக்கழிவுகளின் அளவும் குறைவாகவே காணப்படும். ஆகவே பாரிய குழியினை அமைத்து ஒரே தடைவையில் அதனை நிரப்புவது இலகுவில் சாத்தியப்படமாட்டாது. எனவே ஒவ்வொருவரும் தமது சுற்றாடலில் இருந்து இருவார காலப்பகுதியில் சேகரிக்கப்படக்கூடிய சேதனக் கழிவுகளின் மொத்தக் கனவளவினை அறிந்து அல்லது அனுமானித்து அதற்கேற்ப முதலாவது குழியின் பரிமாணத்தை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். உள்ளீடுகளை இருவார கால இடைவெளியில் அடுத்துள்ள குழிகளுக்கு மாற்றும்போது ஏறத்தாள 10% கனவளவு குறைவடைகின்றது.

இதைக்கருத்திற்கொண்டு மற்றைய குழிகளின் பருமனை நிர்ணயித்தல் வேண்டும். இடம்மாற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழிகள் முற்றாக நிரம்பும் நிலை காணப்படுமாயின் கழிவுகளை கையாள்வதும் இலகுவாக இருக்கும்.

யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 14.09.2009 ஆம் திகதி நடைபெற்ற பயிற்சியில் விவசாய போதனாசிரியர் திரு. ந.திவாகரனின் நெறிப்படுத்தலுடன் பாடசாலை மாணவர்கள் தொடர்முறை கூட்டெரு தயாரிப்பு முறையில் கூட்டெருவைக் குழிகளில் மாற்றுகின்றனர்.



### திரவப்பசளை தயாரித்தல்

கிளிசிறியா இலை 25Kg, பச்சைச் சாணம் 25Kg இந்த இரண்டையும் பெரிய சாக்கில் அல்லது உரைப்பையில் இட்டு சாக்கு வாயைக் கட்டி விட வேண்டும். பின்னர் சாக்கைப் பரலில் இட்டு நீர் ஊற்ற வேண்டும். சாக்கை மூடி நீர் நிற்கும் வகையில் நீரை ஊற்றி சாக்கு மிதக்காமல் இருக்க பாரம் (கல்) ஒன்றைக் கட்டி வைக்க வேண்டும். பரலின் வெளி வாய்ப்பகுதியை பொலித்தீனால் மூடிக் கட்டிவிட வேண்டும். இவ்வாறு 21 நாள்கள் நன்கு சிதைவடைய விடவும். பின்பு இத் திரவத்தை வடித்து 1:4 என்ற அளவில் நீருடன் கலந்து ஐதாக்க வேண்டும். இத்திரவத்தை மரக்கறிக் கன்றுகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை 1 லீற்றர் ஊற்றல் வேண்டும்.

யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 14.09.2009ஆம் திகதி நடைபெற்ற பயிற்சியில் உதவிப் பண்ணை முகாமையாளர் திருமதி ஐ.யோமினாவின் வழிகாட்டலுடன் பாடசாலை மாணவர்கள் திரவப்பசளை தயாரிக்கின்றனர்.



### மண் புழு வளர்ப்புத் தொழில்நுட்பம்

விவசாயிகள் தமது சொந்த நிலத்தில் இருந்து எடுக்கப்பட்ட மேல்மட்ட, இடைமட்ட மண்புழுக்களை சேகரித்து அதனைப் பயன்படுத்தி இயற்கை உரம், திரவ உரம் தயாரித்தலே மண்புழு வளர்ப்புத் தொழில் நுட்பம் எனப்படும்.

### மண்புழு உரம்

மண்புழு உரத்திற்கு பயன்படுத்தப் படும் கழிவுகள்

1. சமையல் அறைக்கழிவு -
வெங்காயத் தோல்
வாழைப்பழத் தோல்
முட்டைக் கோது
உணவு மீதி
பழுதடைந்த காய்கறிகள்
2. மாட்டெரு
3. ஆட்டெரு
4. பாற் பண்ணைக் கழிவுகள்

### மண்புழு உரம் தயாரிக்கத் தேவையான பொருள்கள்


- கற்கள்/ செங்கல்
- மணல் மண்
- மேல் மண்
- கழிவுகள்
- பிளாஸ்ரிக் வாளி - 50 லீற்றர் கொள்ளளவு

### மண்புழு உரம் தயாரித்தல் படிமுறைகள்

- பரலினுள் 3-4 cm உயரத்திற்கு கற்கள்/ உடைந்த செங்கல் இடவும்
- பரலினுள் உடைந்த செங்கல்லின் மேல் 3cm உயரத்திற்கு மணல்இடவும்
- இதன் மேல் 15cm உயரத்திற்கு மேல் மண் இடவும்.
- பரலினுள் 100 மேல் மட்ட, 50 இடை மட்ட மண் புழுக்களை இடவும்.
- பின் 10 cm உயரத்திற்கு எரு இடவும்.
- தென் னோலை அல்லது பனையோலையால் மூடவும்
- 30 நாள்களின் பின் வாரத்திற்கு 2 முறை 5cm உயரத்திற்குக் குப்பை இடவும்.
- தேவைக்கேற்ப நீர் தெளிக்கவும்
- குழி நிரம்பி 45 நாள்களில் உரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### உபயோகிக்கும் முறை

ஒரு செடி




### 2. மண்புழு கழுவு திரவம்

பொருத்தமான இடம்
- நிழலான இடம்
- வீட்டுக்கு அருகில்
- பராமரிப்பிற்கு வசதியான இடம்

### தேவையான பொருள்கள்

➢ பெரல்
➢ ½" திருகியுடன் (tap)
➢ மண்முட்டி
➢ ½" செங்கற்கள்
➢ பெருமணல் கலந்த மணல்
➢ மேல் மண்
➢ சாணம்/ ஆட்டுப் புழுக்கை
➢ வைக்கோல்
➢ மண்புழுக்கள்

### செய்முறை

- பெரலின் அடியில் 2'' உயரத்தில் துவாரம் இட்டு திருகியைப் பொருத்தவும்.
- பெரலை 1-1½ உயரத்தின் மேல் வைக்கவும்
- 15cm உயரம் - செங்கல் துண்டுகளை பெரலின் அடியில் பரப்பவும்
- 15cm உயரத்தில் செங்கல் துண்டு, ஆற்று மணல் பரப்பவும்
- பின்பு நீர் ஊற்றி இவ்விருதட்டுகளும் கழுவிச் செல்லக் கூடியதாக குழாயைத் திறந்து வைக்கவும்.
- தட்டின் மேல் மேல்மட்ட மண்ணை கொள்கலனின் அரைப்பகுதிக்கு நிரப்பவும்
- மண் தட்டை நீர் விட்டு ஈரமாக்கவும்
- 100-125 மண்புழுக்களை மண்தட்டின் மேல் விடவும்
- 1'' தடிப்பில் பச்சைச் சாணக உருண்டை இடவும்.
- இதன் மேல் வைக்கோல்/ காய்ந்த புல்



இடவும்
- இரு வாரங்களின் பின் 1'' தடிப்பில் சாணம் இடவும்
- திருகியை மூடி விடவும்
- பரலின் ½ அடி உயரத்தில் மண்முட்டியில் சிறு துவாரம் இட்டு நீரை வடிய விடவும். ஒரு லீற்றர் நீரை ஊற்றி மறுநாள் காலை திருகியைத் திறந்து திரவத்தைச் சேகரிக்கவும்.
- திருகின் ஊடாக மண்புழு கழுவு திரவத்தைப் பெறவும்.

திருமதி K.சிவதீபன்
விவசாய கண்காணிப்பு உத்தியோத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

- மாலையில் தாவரங்களுக்கு 1:5 என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவும்.

### தாவர பீடை நாசினிகளைப் பாவித்து பீடைகளைக் கட்டுப்படுத்தல்

பீடைகளை விரட்டக்கூடிய, வெறுப்பூட்டக்கூடிய, அல்லது குடித்தொகையைக் குறைக்கக் கூடிய தாவரப் பகுதிகளைக் கொண்டு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இயற்கை நாசினிகளே தாவர பீடை நாசினிகள் எனப்படும்.

### தாவர பீடை நாசினிகளின் நன்மைகள்

- தீமையான பக்க விளைவுகள் அற்றது
- நச்சுத்தன்மை அற்றது
- நன்மை தரும் பூச்சிகளுக்குப் பாதிப்பற்றது
- மனிதருக்கும் ஏனைய விலங்குகளுக்கும் பாதிப்பற்றது

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
28 ★ 02 ★ 1933



மறைவு
19 ★ 02 ★ 2009

## அமரர் நாகப்பர் கணேசசிங்கராசா

(சமாதான நீதிவான்)

திதி: தசமி

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்பான
வார்த்தைகளும் அமைதியான உங்கள்
பண்பும் அரவணைக்கும் நற்குணமும்
என்றும் நிலைத்து நிற்கும் எம்மனதில்
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கும்

அத்துளு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவு

உறவாய்
1953 ★ 02 ★ 14



உயிராய்
2008 ★ 02 ★ 01

## அமரர் கிறிஸ்தோபர் கொலின் தேவராஜா

(வருமான மேற்பார்வையாளர், நல்லூர்ப் பிரதேசசபை)

திதி: அபரபக்கதசமி (08.02.2010)

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்

"திருப்பதி",
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

(92279)

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

# 15ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## சுப்பிரமணியம் குமாரசாமி
(குட்டி)

அன்பின் ஆலயமே பண்பின்
இருப்பிடமே
பாசத்தின் உறைவிடமே பக்தியின்
பரிணாமமே!
அன்புடனும் பண்புடனும்
எம்மைப் பேணிக்காத்து
பண்புடனும் நாம் வாழ
வழிகாட்டியவரே!
ஆண்டுகள் பதினைந்து அவனியில்
ஓடினாலும்
ஆறவில்லை எம் துயரம்....
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம்
18.12.1957

மறைவு
26.01.1995

அம்மன் கோவிலடி,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## பாடசாலைத் தோட்ட....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

- செலவு குறைந்த முறை
- தெளிகருவி அவசியமில்லை
- இலகுவாகக் கிடைக்கக் கூடியவை

தாவர பீடை நாசினிகளின் பாவனையில் கவனிக்க வேண்டியவை

- தாவர பீடை நாசினிகளை மாலை நேரத்தில் பாவித்தல் சிறந்தது
- ஒவ்வொரு முறையும் நாசினிகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்த வேண்டும்.
- பீடைகள் தாக்குவதற்கு முன் பாவிக்க ஆரம்பிக்க வேண்டும்.

பீடை நாசினி வகைகளும் தயாரிப்பு முறைகளும்

வேப்பிலைக் கரைசன்

தேவையான பொருள்கள்
வேப்பிலை - 2 கிலோ
நீர் - 5லீற்றர்
சவர்க்காரம் - 10 கிராம்

செய்முறை

- வேப்பிலையை நீருடன் சேர்த்து மூடிய பாத்திரத்தில் இட்டு இலைகள் பொன்னிறமாக வரும் வரை 20 நிமிடம் அவிக்கவும்
- 12 மணித்தியாலம் வரை குளிர விடவும்
- சவர்க்காரத்தை 1 லீற்றர் நீரில் கரைக்கவும்
- தடித்த துணியினால் வேப்பிலைக் கரைசலை வடிக்கவும்.
- சவர்க்காரக் கரைசலுடன் கலந்து விசிறவும்.

வேப்பம் விதைக் கரைசல்

தேவையான பொருள்கள்
உடைத்த வேப்பம் பருப்பு - 20 - 30 கிராம்
நீர் - 10 லீற்றர்
சவர்க்காரம் - 10 கிராம்

செய்முறை

- வேப்பம் பருப்பை நன்கு இடித்துமா வாக்கவும்.
- ஒரு லீற்றர் நீருடன் கலந்து 12 மணி நேரம் ஊற விடவும்.
- ஊறவைத்த கரைசலை வடித்தெடுத்து 10 லீற்றர் நீருடன் சவர்க்காரத்தை கலந்து விசிறவும்.

உள்ளிக் கரைசல்

தேவையான பொருள்கள்
உள்ளி - 100 கிராம்
மரக்கறி எண்ணெய் - 2 மேசைக்கரண்டி
சவர்க்காரம் - 10 கிராம்
நீர் - 10 லீற்றர்

செய்முறை

- உள்ளியை நன்கு அரைக்கவும்.
- சவர்க்காரத்தை 1 லீற்றர் நீரில் நன்கு கரைக்கவும்.
- அரைத்த உள்ளி, சவர்க்காரக் கரைசல், மரக்கறி எண்ணெய் ஆகியவற்றை ஒரு பிளாஸ்ரிக் பாத்திரத்திலிட்டு 24 மணி நேரம் ஊறவிடவும்.
- கரைசலை வடித்தெடுத்து 10 லீற்றர் நீருடன் கலந்து விசிறவும்.

பஞ்ச மூலம் (ஐந்திலைக் கரைசல்)

தேவையான பொருள்கள்
பிளாஸ்ரிக் வாளி (50 லீற்.கொள்ளளவு) - ஒன்று
பச்சைச் சாணி - 1 கிலோ
பெருங்காயத் தூள் - 100 கிறாம்
எருக்கலை - 1 கிலோ
வேம்பு - 1 கிலோ
ஆடாதோடை - 1 கிலோ
காட்டாமணக்கு - 1 கிலோ
நொச்சி - 1 கிலோ

செய்முறை

- இலைகளை உரலில் நன்கு இடிக்கவும்
- இடித்த இலையை வாளியில் இட்டு 10 லீற்றர் நீர் சேர்க்கவும்.
- பெருங்காயத்தூள், பச்சைச் சாணி ஆகியவற்றை வாளியினுள் சேர்த்து தடியினால் நன்கு கலக்கவும்.
- தினமும் காலை, மாலை நன்கு கலக்கி வாளியை இறுக மூடவும்.
- 2-3 வாரங்களின் பின் 500 மில்லிலீற்றர் கரைசலுக்கு 9 ½லீற்றர் நீர் கலந்து விசிறவும்.

பப்பாசி இலைக் கரைசல்

தேவையான பொருள்கள்
பப்பாசி இலை - 2 கிலோ
நீர் - 5 லீற்றர்

செய்முறை

- பப்பாசி இலையை ½ லீற்றர் நீர் சேர்த்து நன்கு இடிக்கவும்.
- சாற்றை வடித்தெடுத்து மீதியை நீருடன் கலந்து விசிறவும்.

## விண்ணப்பம் கோரல்

பருத்தித்துறை
பெப் 08

வடமராச்சிக் கல்வி வலையத்திலுள்ள மருதங்கேணிக் கோட்டக்கல்வி அலுவலர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் வடமராட்சி கல்வி வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(04-236-190)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
14 ★ 03 ★ 1933



மறைவு
09 ★ 01 ★ 2010

## அமரர் கந்தையா ஆறுமுகம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் வேண்டுகின்றோம்.

தம்மனை,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0212240971


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2094 திகதி 06-02-2010

ஆங்கில எழுத்திற்கும் T

வெற்றி எண்கள்
18 40 49 58

போனஸ் இல: 13

ஜக்பொட் பரிசு ரூ. 15,797,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 193975 | 20/- | 3,879,500/- |
| 2 இல | 13834 | 100/- | 1,383,400/- |
| 3 இல | 288 | 1,000/- | 288,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7824 | 40/- | 312,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 563 | 1,000/- | 563,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,797,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 9230 | 100/- | 923,000/- |
| 2 இல + போனஸ் இல | 425 | 500/- | 212,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 367 | 200/- | 73,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | |
| மொத்தம் | | | 10,163,760/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 226545 | | 10,763,760/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - W.A. அனுர பிரசன்ன - மீடியாகொடை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - T.M.D. அதுல தென்னகோன் - திவுலபிட்டிய.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 301611958-5-47 |
| கொழும்பு | 301611508-3-44 |
| பொலன்னறுவை | 301599104-2-00 |
| கம்பஹா | 301603503-1-19 |
| குருணாகல் | 301602963-7-07 |
| களுத்துறை | 301607150-0-07 |
| மாத்தளை | 301607877-0-01 |
| நுவரேலியா | 301618829-0-39 |
| புத்தளம் | 301611270-2-01 |
| கண்டி | 301599296-9-41 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 16,326,550/-

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
தொ.பே: 2333546/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பரிசுத்தினமும், 'அமுத ஜோதி' மலர் வெளியீட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை அழைத்து வருவதை முதலாவது படத்திலும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும்,நிகழ்வில் பங்கேற்ற விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் 'அமுத ஜோதி' மலரை நல்லூர் கல்விக்கோட்டப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா வெளியிட்டு வைக்க அதனை கல்லூரி அதிபர் வி. மாணிக்கம் பெற்றுக் கொள்வதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: உமா, சுகந்தன்.)

# குறிகட்டுவான்- நயினாதீவுக்கு இடையே மேலதிக படகுகள் பயணிகள் சேவையில்!

யாழ்ப்பாணம், பெப்.8

குறிகட்டுவானுக்கும் நயினாதீவு துறைக்கும் இடையில் மேலதிகமான படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாகக் குறிகட்டுவான் துறையில் பயணிகளின் வரவு அதிகரித்துக் காணப்பட்டது.

இதனை அடுத்து மேலதிக படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு பயணிகள் விரைவாக நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் சென்றுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகை அதிகரித்ததை அடுத்து இச் சேவையில் தொடர்ந்தும் மேலதிக படகுகள் சேவையில் ஈடுபட்டு வரு வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-224)

# வலிகாமம் கிழக்குப் பகுதி விளைநிலங்களில் தீவிரமாக முன்னெடுக்கப்படும் விவசாய நடவடிக்கைகள்

கோப்பாய், பெப்.8

வலி.கிழக்குப் பிரதேசத்தில் விவசாய செயற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த காலங்களில் - பலவருடங்களாக- செய்கை பண்ணப் படாத தரிசு நிலங்கள் பலவும் பண்படுத்தப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்காக தயார் படுத்தப்பட்டு வருகின்றன.

பீற்றூட், கோவா, கரட் மற்றும் லீக்ஸ் போன்ற மரக்கறிப் பயிர்வகைகளையும் வெங்காயம், புகையிலைச் செய்கைகளிலும் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனால் இப் பிரதேசச் சூழல் பயிர் செய்கையினால் பொலிவு பெற்றுக் காணப் படுவதுடன் விவசாயிகளும் உற்சாகத்துடன் காணப்படுகின்றனர்.

இந்த விவசாயச் செயற்பாடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் திருப்திகரமாக கிடைக்கப் பெற்று வருவதாகவும், குறிப்பாக ,எரு போன்ற இயற்கை பசளை வகையும் தாராளமாக நியாய விலையில் கிடைப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இருந்த போதிலும் இப் பிரதேசத்தின் பெரும்பாலான வீதிகள் பலவும் கடந்த 30-40 வருடங்களாக திருத்தப்படாமையினால் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தற்போதுள்ள அபிவிருத்தி சூழலில் இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இவ்வாறான விவசாயக் கிராமங்களையும் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் வீதிகளைச் சீர் செய்து உதவுமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04-72)

# நல்லூரில் நாளாந்தம் சனக்கூட்டம்; கைவரிசையைக் காட்டும் திருடர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.8

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடல் பகுதியில் திருடர்களின் கைவரிசை தினமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆலயச் சுற்றாடல் பகுதியில் தென் பகுதி நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் களைகட்டி காணப் படுகின்றன.

இதனால் தினமும் பெருமளவு மக்கள் இப்பகுதியில் மாலை நேரங்களில் திரண்டு வந்து பொருள்களை வாங்கிச் செல்கின்றனர்.

அதனைவிட நல்லூர் முருகனைத் தரிசிக்கவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் இப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக இப் பகுதியில் சன நெரிசல் அதிகரித்துக் காணப்படுவதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் திருடர்கள், தமது கைங்கரியத்தை சுலபமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஒரு சைக்கிள் களவாடப்பட்டதோடு இருவரின் கைப்பைகளும் தந்திரமாக அபகரிக்கப்பட்டுள்ளன.

எனவே இப்பகுதியில் கூடும் பொது மக்கள் தமது உடைமைகளில் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (04-224)

# பெருந்திருவிழா

வடமராட்சி,பெப்.8

துன்னாலை கோவில்கடவைப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து தினங்கள் இடம் பெறும் இப்பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக் கிழமையும், தீர்த்தத்திருவிழா 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (04-236)

# புத்தளம் சிறுவனின் சிகிச்சைக்காக நகரில் இடம்பெற்ற நிதி கோரிப்பு

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட மூன்று வயதுச் சிறுவன் ஒருவனின் உயிரைக் காப்பாற்றுவதற்கு நிதி சேகரிக்கும் பணி யாழ். நகரில் இடம் பெற்றுள்ளது.

புத்தளம் நாயக்கர் சேனை மாம் புரியைச் சேர்ந்த தயாகர் கானியம்மா என்பவரின் மூன்று வயதுக் குழந்தையான தயாகர் பிரபு இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளான்.

இந்தக் குழந்தைக்கு அவசரமாகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட வேண்டும்.

மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வரும் இந்தக் குடும்பத்திற்கு மேற்படி சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு போதிய பணவசதி இல்லை என்று கூறப்படுகிறது.

இந்தக் குழந்தை நேற்று முன்தினம் யாழ். நகருக்கு வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்டு சகல இடங்களிலும் நிதி சேகரிக்கும் பணியில் குடும்பத்தினர் ஈடுபட்டனர்.

வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்ட ஒலி பெருக்கி மூலம் குழந்தையின் நோய் பற்றிய விவரம் அறிவிக்கப்பட்டு நிதி சேகரிப்பு இடம் பெற்றது.

இதில் பலரும் தம்மாலான நிதியுதவியினை வழங்கினர். (04-224)




யாழ். றோட்டறிக் கழகத்தினரால் விஷேட தேவையுடையோருக்கான முச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதன் போது றோட்டரியன் ஈ. சரவணபவன் விஷேட தேவையுடைய ஒருவருக்கு முச்சக்கர வண்டியொன்றை வழங்குவதையும், அருகில் றோட்டரிக் கழகத்தின் ஏனைய உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்- கான்)

# சங்கானை மத்தி மக்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன

## வலி.மேற்குப் பிரதேசசபை செயலாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.8

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை மத்தி கிராம சேவையாளர் பிரிவுக் காணிகளில் குடியிருக்கும் சொந்தக்காணிகளற்ற மக்களுக்கு காணிகள் விரைவில் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

பிரதேச சபை செயலாளர் (சுழிபுரம்) சு.புத்திசிகாமணி இதற்கான நடவடிக்கையை வலி. மேற்கு பிரதேச செயலகம், அரசாங்க அதிபர் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்த வகையில் மேற்கொண்டுள்ளார்.

இருவாரங்களுக்குள் காணி நில அளவை செய்யப்பட்டு பங்கிடப் பட்ட பின்னர்-

உறுதிகள் வழங்கப்படும் எனப் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து-

அராலி ஊரந்தியில் உள்ள மக்களுக்கும் பிரதேச சபையின் காணிகள் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ஆலோ சனைகளை வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலக உதவி பணிப்பாளர் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (04-302)




# சனசமூக நிலையங்களுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம்

வடமராட்சி,பெப்.8

வடமராட்சி தெற்கு,மேற்கு (கர வெட்டி) பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இப்பிரதேச சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இப்பொதுக் கூட்டத்தில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூகநிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்டகப்பட்டுள்ளது. (04-236)

# சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பால் நயினாதீவில் சங்கு, சிப்பி போன்ற பொருள்களுக்கு மவுசு

யாழ்ப்பாணம்,பெப்.8


நயினாதீவில் சங்கு, சிப்பி முதலான கடல்சார் பொருள்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை நயினாதீவுப் பகுதியில் அதிகரித்ததை அடுத்தே இத்தகைய கடல்சார் பொருள்களுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சங்கு, சிப்பி; சோகி போன்றவற்றைப் பயன்படுத்தி சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் உருவாக்கப்பட்டு பல்வேறு உருவ அமைப்புக்களில் இவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இப்பொருள்களை பயணிகள் ஆர்வத்துடன் ஞாபகச்சின்னங்களாக வாங்கி செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமை உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் வடவலய பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், போட்டிகளில் வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு திருமதி ந. சிவரட்ணம் வெற்றிக்கிண்ணம் வழங்குவதை மூன்றாவது படத்திலும், மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்தினர் வெற்றிக்கிண்ணத்துடன் நிற்பதையும் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு தொகுதியினரையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: விக்ரோறி)

# பிரதேச சபை உபஅலுவலகக் கட்டட விஸ்தரிப்புக்கான காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெ. 8

சுழிபுரம் பகுதியில் ஆயுள்வேத உப அலுவலகம்- நூலகம்- கருத்தரங்கு மண்டபம் அமைப்பதற்கான காணியை க. வாமதேவன் அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

இதன் மூலம் சுழிபுரம் உப அலுவலகத்தின் மூன்று மாடிக் கட்டடம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான அபிவிருத்திக் கூட்டம் எதிர் வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை சுழிபுரம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி தவயோகராசஜா மேற்கொண்டுள்ளார்.

பிரதேச சபை செயலாளர் சு. புத்திசிகாமணி தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்திற்கு-

சுழிபுரம் உப- அலுவலகத்திற்கு உட்பட்ட அனைத்து சன சமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களைத் தவறாது இக் கூட்டத்தில் சமுகமளிக்குமாறு உப அலுவலக பொறுப்திகாரி திருமதி சி. தவயோகராஜா கேட்டுள்ளார். (04-302)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.8

காங்கேசன்துறை நடேஸ்வரக் கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமாரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவராசாவும் கலந்து கொள்வர். (201)

## நீர்வேலியில் புதனன்று நூல் அறிமுக விழா

கோப்பாய், பெப்.08

நீர்வை தி.மயூரகிரியின் 'எவ்வழி நல்வழி? அவ் வழி நாடுவோம்' (பல்சமய உறவாடல் ஏடு) நூல் அறிமுக விழா நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ. குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலை ஆசிரியர் ஐ.சிவராஜாவும் முதன்மை உரையை தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசனும் வாழ்த்துரையை ஞானம் சஞ்சிகை அசிரியர் தி. ஞானசேகரனும், அறிமுக உரையை பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மாவும் பாராட்டுரையை யாழ்.பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. தி.வேல்நம்பியும், மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், நிறைவுரையை வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் த.நடராசாவும் நிகழ்த்துவர். (1372)

## இணையத்தளத்தில் பல்கலை. விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப்.08

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் புதிய கல்வியாண்டு அனுமதிக்கான (2009/2010) உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் பல்கலைக்கழக இணையத்தளமான www.uwu.ac.lk எனும் தளத்தில் தற்போது வெளியாகியுள்ளது.

விண்ணப்பிக்கவிரும்பும் மாணவர்கள் இந்த இணையத்தளத்திலிருந்து படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலனை முன்னிட்டு இந்தத் தகவல் வெளியிடப்படுகின்றது என ஊவா வெல்லஸ்ஸ தமிழ் மாணவர்கள் தெரிவித்தனர். (04-14)




சுடர் ஒளி THE SUDAROLI வார மலர்
பெப்.7–பெப்13
இப்போது விற்பனையில்
* காற்றோடு போகும் வார்த்தைகள்
* முள்ளி வாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்
* உயிர்வலிக்கும் கணங்கள் தொடர்...
* கடவுளிடம் முறையிடுதல்
* முகமூடிகளைக் கழற்றுங்கள்
* தமிழ்த் தேசியம் மீண்டும் புத்துயிர் பெறுகின்றது
* மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.
இப்போது 30/=விலிருந்து 25/= வாக விலை குறைக்கப்பட்டுள்ளது
உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்..


## சேவை நலன் பாராட்டு

எமது பாடசாலையில் கடந்த 23 வருடகாலமாக மனைப்பொருளியல் ஆசிரியராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திருமதி மேரி பேடினன் லூட்ஸ் விக்ரோறியா**

அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



சேவை விபரம்
முதல் நியமனம்:
கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் (18.05.1977)
யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை (1979 - 1981)
மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் (1982 - 1986)
யா/கனகரத்தினம் ம.ம.வி. (01.05.1986 - 08.02.2010)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
**யா/கனகரத்தினம் ம.ம.வி.**
(92307)

## வேலாயுதம் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

தலைவர் : திரு K.P.ஆனந்த நடேசன்
இடம் : பாடசாலை மண்டபம்
காலம் : 21.02.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி

பிரேரணைகள் ஏதும் இருப்பின் அவற்றை செயலாளருக்கு 14.02.2010ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கி.குகநாதன்
பருத்தித்துறை. (92314) செயலாளர்.

## மரண அறிவித்தல்கள்

### தயாகுணம் சிவகரன்

(காசாளர், யாழ்.போதனா வைத்தியசாலைச் சிற்றுண்டிச் சாலை)



மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட தயாகுணம் சிவகரன் (06.02.2010) சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் தயாகுணம் - பத்மறஞ்சினி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும் மலரவன் (இந்தியா), தர்சிகா (யா/இந்து மகளிர் கல்லூரி தரம் 12 கலைப்பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்திகாவின் அன்புக் கணவரும், அபிசாந்தின் அன்புத் தந்தையும், சாந்தீஸ்வரன் - சிவாஜினி தம்பதிகளின் மருமகனும், தனுசன், துவியன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.02.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தயாகுணம் (தந்தை-சின்ராசா).
ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (92319)

### திருமதி புனிதவதி பரமானந்தம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பரமானந்தம் (06.02.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியமணி ஆறுமுகம்-சரஸ்வதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இளையதம்பி பரமானந்தம் (பிரதம எழுதுவினைஞர், இலங்கை மின்சாரசபை) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசர் மற்றும் திருமதி திலகவதி விநாயகமூர்த்தி, திருமதி புஷ்பவதி வாரித்தம்பி, திருமதி குணவதி பூலோகநாதன் (தாதிய உத்தியோகத்தர், யா/போதனா வைத்தியசாலை), திருமதி இமாவதி பரந்தாமன் (எழுதுவினைஞர், பனம் பொருள் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), திருமதி கமலவதி ரஞ்சன் பாபு (டென்மார்க்) ஆகியோரின் சகோதரியும், உதயணன் (லண்டன்), பிரதீபன் (பொறியியலாளர்,அமெரிக்கா), திருமதி மீரா அரன் (கனடா), திருமதி பிரிந்தா ஞானசூரியர் (லண்டன்), திருமதி துசிலை இராஜகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"மங்கள பவன்" கந்தரோடை, சுன்னாகம்.
தொ.பே: 0212240310
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்கள் தனியொருவரில் மட்டுமல்லாது குடும்ப சமூக மட்டங்களிலும் தாக்கத்தை விளைவிப்பனை

தற்போது எமது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையை உள சமூகப் பார்வையில் (Psychosocial) பார்க்க விரும்புகிறேன். தற்போது உள சமூக மேம்பாட்டுக்குக்கான தேவை, தேவைக்கான சான்றுகள் எவை என்பதனை அவதானிக்கலாம். இங்கு என்ன செய்யலாம்? இங்கே என்ன நடந்துவிட்டது? என்ன நிலையில் நாங்கள் இருக்கின்றோம்? கடந்த மூன்று தசாப்த காலமாகப் போர்ச் சூழ லில் ஏறக்குறைய எல்லோருமே ஒரு வித பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.
இடப்பெயர்வினை அனைவரும் ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்து இருக்கின்றோம். எமது உறவினரில் யாராவது ஒருவர் உயிரிழந்துள்ளார்கள். வீடிழப்பு, சொத்திழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2 வருடங்களாக நிகழ்ந்த வன்னிப் போரினால் வன்னிப் பிரதேசம் சூனியப்பிரதேசமாகக் காட்சி அளிக்கின்றது. இதனை அங்கு சென்ற வர்கள் அல்லது ஏ9 வீதியால் பய ணம் செய்தவர்களால் உணர முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிகழ்ந்த சம்பவங்கள் கனவு மாதிரி உள்ளது. முழுதாகச் சொல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

நான் ஒரு சமயம் கம்போடியாவில் சேவை செய்ய நேர்ந்தது. அங்கு பிணக்குகளுக்குப் பின்பான சூழலுக்கு Ground Zero என்ற சொற்பிரயோகம், அதாவது தரைமட்டம் அல்லது எல்லாம் அழிக்கப்பட்டு அடிமட்டத்தினை அடைந்த நிலை என்ற கருத்தில் பயன்படுத் தப்பட்டது. அங்கு எல்லாமே சிதைந்து போயின. மக்களின் எதிர்ப்பு, விழுமியங்கள் என்பனவும் நலிவு கண்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் சற்று நல்ல நிலை உள்ளது. சமூகம் ஆட்டம் கண் டிருந் தாலும் ஓரளவுக்கு இயங்கிக் கொண்டு இருக்கின்றது. 1995ஆம் ஆண்டில் எதிர்பார்ப்புகள் அற்ற நிலை இருந்தது. ஆனால் இப்போது மாற்றம் காணப்படுகின்றது.

உள சமூக மேம்பாடுகள் பற்றி மாற்றுக் கருத்துக்கள் பலரிடம் உள் ளன. குறிப்பாக அதிகாரிகள் மட்டத் தில் உள்ளன. அவர்களைக் கவனிக்க வேண்டிய தேவை இல்லை. அவர் கள் தாங்களாகவே தங்களுக்கு வேண்டிய தைச் செய்வார்கள். அவர்களது திட்டங்கள் மக்களை ஆற்றுப்படுத்த உகந்தனவாக அமையவில்லை. சாதாரண விவசாயம் போலவே நோக்கப்படுகின்றன.

**சுனாமிக்குப் பின்னர்**

இலங்கையில் சுனாமிக்குப் பின்னர் சமூக உளத் தேவைகள் பல ராலும் உணரப்பட்டன. ஏனெனில் அது இலங்கை முழுவதையும் பாதித்தது. ஆனால் தற்போதைய நிலை குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தினை மட்டுமே பாதித் துள்ளது. அதனால் ஏனையோரால் அதனை உணரக் கடினமாகின்றது.

**சமூக உளத்தேவை அவசியமானது**

இடம் பெயர்ந்தவர்களில் பலர் தங்களைத் தாங்களே கவனிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இடம் பெயர்ந்த பிள்ளைகளை மற்றப் பிள்ளை களுடன் ஒப்பிடும் போது வித்தியாசம் காணப்படுகின்றது அவர்களிடம் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவர்களால் கல்வியில் கவனம் செலுத்துவது கடினம். சுலபமாக அச்சமடைதல், பயங்கரக் கனவு காணுதல் என்று பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. உண்மையான மேம்பாட்டுக்கு பொருளாதார வளர்ச்சி மட்டுமே போதாது. உளச் சமூக தேவைகளையும் முழுமையாகக் கவனிக்காது விட்டால் எவ்வளவுதான் அபிவிருத்தி செய்தாலும் அது மக்களுக்குப் பயன்படாது. எனவே ஏனைய தேவைகளுடன் உள சமூக தேவைகளையும் அத்திவாரமாக அமைதல் வேண்டும். UNDP, UNHR போன்ற நிறுவனங்கள் யுத்தத்திற்குப் பின்பான சூழலில் உள்ள சமூக தேவைகளைக் கவனித்துக் கொள் கின்றன. நாங்களும் இதில் கவனம் செலுத்த வேண்டும். உள வளத் துணை கூடச் செய்யமுடியாத நிலை கடந்த 6 மாதத்தில் இருந்தது. ஆனால் நாம் வேறு வழிகளில் உள சமூக சேவைகளைச் செய்தோம். அதாவது ஆடல், பாடல், விளையாட்டுக்கள் மூலமாக அவற்றைச் செய்தோம்.

இந்த அனர்த்தங்களின் விளைவாக தனிப்பட்ட நபரில் ஏற்படும் மாற்றம் மட்டுமல்லாது குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படும். குடும்ப இயக்கப்பாட்டில் மாற்றம் ஏற்படுகின்றது. குடும்பத் தலைவர்களை இழக்கும் போது தாய் பொறுப்பினை ஏற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சிறு பிள்ளைகளும் சில பொறுப்புகளை ஏற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

குறிப்பா, காணாமல் போனவர் களது குடும்பங்களின் நிலை கேள்விக் குறியாக உள்ளது. அதனைப்பற்றி வெளியில் கதைப்பதற்கே பயப்படும் சூழலும் உள்ளது.

**அனர்த்தங்களின் பின்னர்**

அனர்த்தங்களின் பின் சமூக மட்டத்தில் சில

உதாரணமாக வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற தாய் ஒருவர் தனது கைக்குழந்தையுடன் தான் தங்கியிருக்கும் முகாமுக்குச் செல்லப் பேருந்தில் ஏறியபோது நசிபட்டு நெரிசலில் குழந்தை இறந்ததாக வைத்தியர் ஒருவர் கூறினார். முன்பெல்லாம் ஒரு தாய் பேருந்தில் ஏறினால் இருக்கையில் இருப்போர் எழுந்து இடம் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. இத்தகைய போக்கு இன்று பெரி யளவில் அரிதாகி விட்டது. சமுதா யத்தில் சந்தேகிக்கும் தன்மை அதிக ரித்து விட்டது.
ஒருவரிடம் மற்றவர் மனம் விட்டுக் கதைக்கும் தன்மை குறைந்து விட்டது. எல்லா வற்றிலும் பார்க்க பெரும்பாலா னோரின் போக்கில் மௌனம் கடைப் பிடிக்கும் தன்மை உள்ளது.

**சமூகம் மீட்சி பெற**

எமது சமூகம் மீண்டு வரு வதற்கு (Creative Spirit) ஆக்க பூர்வமான உந்து சக்திகள் உரு வாக்கப்படல் வேண்டும். இதற்கு இந்த மௌனம் கலைய வேண்டிய சந்தர்ப்பம் தற்போதைய தேவையாகும்.

பெண்களுக்கு எதிரானவன் முறைகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. மேலும் இளவயதுக் கர்ப்பங்கள் Teenage Pregnancy அதிகரித்துள்ளது. இவை யாவற்றையும் நான் சமூக வடுக்களாகவே பார்க்கிறேன். இவற்றினை எதிர்கொள்ளச் செய்யவேண்டியவை தனிப்பட்ட மாற்றங்களாக, குடும்ப மாற்றங்களாக, சமூகமட்ட மாற்றங்களாக அமைய வேண்டும். முதலாவது விழிப் புணர்வுச் செயற்பாடு அனேகமான வர்களின் இள சமூகப் பாதிப்புகளை ஏற்றுக் கொள்ளும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. அவர்களிடத்தில் எதனையும் மறுக்கும் தன்மை காணப்படும். எல்லாவற்றுக்கும் ஒரு மாற்றம் ஏற்பட குறிப்பிட்ட கால அவகாசம் தேவை. இது பாடசாலை மாணவர்களுக்கும் உத்தியோகத் தர்களுக்கும் கூடப் பொருந்தும்.

இரண்டாவதாக சமூகமட்டத்தில் அடிப்படை அறிவையும் ஆற்றலையும் ஏற்படுத்த வேண் டும். இதற்குச் சமூகத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். அவர்களால் சமூகத்தில் ஏனையவர்களுக்கு உள சமூகத் தாக்கங்கள் பற்றி எடுத்துக் கூறக் கூடியதாக இருக்கும். மேலும் மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய தாகவும் இருக்கும்.

மூன்றாவதாக ஊரில் வழக்கிலி ருந்த பழைய சமய சம்பிரதாயங்கள், கிரியைகளை மீளவும் இயங்க வைத் தல் வேண்டும். இறந்தவர்களுக்கான கிரியைகளைத் தவறாது ஒழுங்காகச் செய்தல் வேண்டும். இதற்காக ஊரை யும் குடும்பத்தினையும் இயங்கச் செய்தல் அவசியமானது. மேலும் சுதேச கலாசார நிகழ்வுகள் அவசியமானவை.

நான்காவதாக நடந்தவற்றை மீண்டும் அசை போடுவதா? அல்லது அதனைத் தவிர்த்து முன்நோக்கிச் செயற்படுவதா? என்ற கேள்வி எழுகின்றது. 2002-2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் இதைப்பற்றிக் கதைத்தபோது இருபகுதியும் ''ஏன் வீண் பிரச்சினை. முன்நோக்கிச் செயற் படுவோம்'' என்றனர். ஆனால் நடந்த வற்றை ஏற்றுக் கொண்டு மன்னிப்பு அளித்தல், தண்டனை அளித்தல் என்ற நடைமுறைகள் (Truth and Reconcillations) தென்ஆபிரிக்காவில் வெற்றி தந்தன. நடந்தவற்றை வெளிக் கொண்டுவந்து கதைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு சமூக அநீதியை மாற்றி நீதியை ஏற்றுக் கொள்வது நல்லது என்பது தென் ஆபிரிக்க மக்களால் அனுபவபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மக்களுக்குத் தேவையான, பொருத் தமான பொருளாதார அடிப்படைத் தேவைகளை மூன்று பிரிவுகளாக நோக்கலாம்.

**'சிந்தனைக்கூடம்' நிகழ்வில் கலந்துகொண்டு இன்றைய நிலையில் உள சமூக மேம்பாட்டுக்கான தேவை என்ற விடயம் குறித்து உள வியல்துறைப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு இது.**

**தொகுப்பு - நந்தன்**

ஆரம்பப் பிரிவில் உடன் தேவை கள், அல்லது மீட்புக்காலம். இங்கு உணவு, வதிவிடம், உடை, பாதுகாப்பு என்பன தேவைப்படுகின்றன.

இடைநிலைப் பிரிவில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. இறுதிப் பிரிவில் அபிவிருத்தி பற்றி நோக்கப்படும்.

இங்கு வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள், பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் பொருத்தமான பயிற்சி கொடுப்பது அவசியமானதும் உள சமூக மேம்பாட்டுக்கு மிகவும் முக் கியமானதுமாகும். சிலருக்கு கூடியளவு உதவி தேவைப்படும், சிலருக்கு கூடுதலான ஆதரவு அளிக்கப் படல் வேண்டும். ஏனெனில் இவர்களால் மற்றவர்கள் பாதிக்கப்படலாம்.
கலைத்துறையினை முன்னேற்றுவது அதாவது இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என்பவற்றினை ஊக்குவிப்பது மிகவும் இன்றியமை யாதது.

பலருக்குச் சட்ட உதவி தேவைப் படலாம். இதற்குப் பொருத்தமான தொடர்புகள் மூலம் சட்ட ஆலோசனையினைப் பெற்றுக்கொடுக்க வழி காட்டலாம். அல்லது சட்ட ஆலோசனை பெறக் கூட்டிச் செல்லலாம். இதற்குச் சமூக சேவை அமைப்புகளுக்கு இடையே உயிர்ப் பான வலையமைப்புத் தொடர்பாடல் இருத்தல் அவசியம்.

********

# —சமூக வடுக்களை எதிர்கொள்வதற்கு தனியாள், குடும்ப, சமூக ரீதியிலான மாற்றங்கள் அவசியம்—

மாற்றங்களைக் காணக் கூடியதாக உள்ளது. நவீன மயமாக்கல் விரைவாகியுள்ளது. இது ஏனைய நாடுகளில் இடம்பெறும் விதத்தில் உள்ளது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லாத தன்மை



காணப்படுகின்றது. விழுமியங்கள் பற்றிய மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது பெரியோர் மீது உள்ள மதிப்புக் குறைவாகக் காணப்படுகின்றது. வயது வித்தியாசத்தினை மதிக்கும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. மற்றவர்களுக்கு மதிப்பளித்தல் குறைந்ததுள்ளது. அனேகமாகச் சுய தப்பித்துக் கொள்ளல், அதாவது பிரச்சினைகளில் இருந்து தாம் தப்பிக்கும் தன்மை அதிகரித்துள்ளது. இவையாவும் விரைவாக நடைபெற்று வருகின்றன.



பேராசிரியர் தயா சோமசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்; சென்றலைட்ஸைத் தோற்கடித்தது ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு,பெப்.8

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் விக்ரம்-கங்கு-ராஜன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வருடாந்தம் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட்சுற்றுப் போட்டி ஆட்டம் ஒன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 03 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 22.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றது.

இதில் றொகான் 36 ஓட்டங்களையும், லவநீதன் 21 ஓட்டங்களையும், மதுசன் 18 ஓட்டங்களையும்பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லட்சுமிகாந்தன் 06 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் உமாதரன் 5.4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன் பகீரதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

114 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 28.1 ஓவரில் 07 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

இதில் ஜெயராஜ் 47 ஓட்டங்களையும் பவசுதன் 20 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்ரலலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த வதுசனன் 05 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கோகுலன், நிஷாந்தன், கோபிகன் ஆகியோர்தலா ஒருவிக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (04-86)

## 'தேசத்தின் மகுடம்' வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டம்

# காலிறுதிப் போட்டியில் மகாஜனா கடைசிவரை போராடியும் தோல்வி

வலி.வடக்கு, பெப்.8

'தேசத்தின் மகுடம் ' கரப்பந்தாட்டப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கடுமையாகப் போராடிய போதிலும் இறுதி நேரத்தில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

அகில இலங்கைரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் விளையாட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டு இருந்தது.

கேகாலை ருவான்புர மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் அனுராதபுரம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் சுற்று மகாஜனக் கல்லூரி 25:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது.

எனினும் அடுத்த இரண்டு சுற்றுக்களிலும் மகாஜனக் கல்லூரி கடுமையாக போராடிய போதிலும் அனுராதபுரம் மத்திய கல்லூரி 25:23, 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

எனினும் நான்காம் சுற்றில் சுதாரித்துக் கொண்ட மகாஜனக் கல்லூரி 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று 2:2 என்ற சமநிலையில் காணப்பட்டது.

இதனால் ஐந்தாம் சுற்று இரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமானதாக காணப்பட்டது. இதில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டபோதிலும் இறுதி நேரத்தில் அனுராதபுரம் மத்திய கல்லூரி 15:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் மகாஜனக் கல்லூரியை வெற்றிகொண்டது.

இதனால் ஆட்டநிறைவில் ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் அனுராதபுரம் மத்திய கல்லூரி 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் மகாஜனக் கல்லூரியை வெற்றி பெற்றதால் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை மகாஜனா இழந்தது. (04-86)

## ----- மஞ்சிக் கிண்ணக் கரபந்தாட்டம் -----

# ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய வி.கவும் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கியமும் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.8

மஞ்சிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்குக்கிடையே நடை


காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

பெற்று வந்த ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியள வில் யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிமோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி இரண்டு நேர் செற்களில் 25:06,25:13 என்ற புள்ளிகள் கணக்கில் கோப் பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கியவிளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக


ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்

அணி மூன்று நேர் செற்களில் 25:21, 25:18, 29:19 என்ற புள்ளி அடிப்படையில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (04-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.8

'எக்ஸ்போ எயார்' விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் இன்று திங்கட்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு.

★ பி.ப.3 மணி (பெண்கள் பிரிவு)

யாழ்.திருக்குடும்பக்கன்னியர்மடம் எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி

★ பி.ப .4.30 மணி (ஆண்கள் பிரிவு)

யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ் மத்திய கல்லூரி. (04-23)

## கரப்பந்தாட்டச் சங்க புதிய நிர்வாகக்குழு

வலி.வடக்கு,பெப்.8

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகக்குழு அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்-

தலைவர்: க.ஏகாம்பரம், உபதலைவர்கள்: க.நாகேந்திரம், சி.கஜேந்திரன், செயலாளர்: சி.மனோகரன், உபசெயலாளர்: ந.சுதேஸ்குமார், பொருளாளர்: க.குமாரசிங்கம், செயற்குழு அங்கத்தவர்கள்: சி.அப்புத்துரை, செ.செல்வச்சந்திரன், என்.செந்துரன், ந.முருகதாஸ்காந்தன், வி.சிந்துஜா. (04-86)

# சகல துறைகளிலும் ராகுலன் பிரகாசிப்பு; கொக்குவில் இந்துவிற்கு அபார வெற்றி

யாழ்ப்பாணம் பெப் 7

ராகுலனின் துல்லியமான பந்து வீச்சின்



துணையுடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால்வெற்றி வாகை சூடியது.

கொக்குவில் இந்துக்கல்லூரியும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி ஒன்றில் மோதிக்கொண்ட ஆட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட் டங்களை பெற்றுக்கொண்டனர். பங்குஜன் 18 ஓட்டங்களையும், ராகுலன் 58 ஓட்டங் களையும், உத்தமகுமரன் 22 ஓட்டங்களையும், யனுதாஸ் 29 ஓட்டங்களையும், பவிந்திரன் 22 ஓட்டங்களையும்தமது அணிக் காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியைச் சேர்ந்த விஸ்ணு பிரகாஷ் 43 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், திருஷன்44 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோயாக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் விஸ்ணுப்பிரகாஷ் 17 ஓட்டங்களையும், ஸ்ரீகஜன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ராகுலன் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், கார்த்திக் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

அதற்கமைய இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 54 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் திருஷன் 9 ஓட்டங்களை யும், தரணன் 7 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் ராகுலன் 4 விக்கெட்டுக்களையும் கார்த்திக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர். (04-23)




# கூடைப் பந்தாட்டப் போட்டியில் மத்திய கல்லூரி அணிக்கு வெற்றி!

யாழ்ப்பாணம்,பெப்.8

'எக்ஸ்போ எயார்' விமானசேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்கழகம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண், இரு பாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான போட்டி ஒன்று அண்மையில் யாழ். இந்துக்கல் லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இடம் பெற்றது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.


யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையேயான இந்த ஆட்டத்தில், யாழ். மத்திய கல்லூரி தன்னை எதிர்த்து விளையாடிய கொக்குவில் இந்துக்கல்லூரியை 101:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. (04-23)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்ற உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த வீராங்கனைகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மனமார்ந்த நன்றிகள்



அனைவரும் எதிர்பார்த்த நம்பிக்கையான மாற்றத்தினை ஏற்படுத்தித் தருவதற்காக எவ்வித இடையூறுகளையும் பொருட்படுத்தாது மக்கள் தத்தமது ஜனநாயக உரிமைகளை செவ்வனே பயன்படுத்தி எனக்கு வாக்களித்தமைக்கு நான் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் ஒருநாள் உண்மை வெற்றிபெறும். அன்று உங்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நிச்சயம் நிறைவேறும்.

எனது கோரிக்கைகள் மற்றும் கோட்பாடுகளையேற்று அர்ப்பணிப்புடன் எனக்கு ஆதரவளித்த அனைவருக்காகவும் உங்களது நம்பிக்கைக்கு எவ்வித இடையூறுகள் வந்தாலும் அதற்கு நான் முகம் கொடுக்க தயாராகவுள்ளேன். மக்களின் ஜனநாயகத்தை வென்று இதன் மூலம் சிறந்ததோர் எதிர்காலத்தை ஏற்படுத்த காத்திருப்போமாக.

சரத் பொன்சேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புவோருக்கு

யாழ்ப்பாணம், பெப்.8

சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினர் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணியினருக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை விரைவில் நடத்தவுள்ளனர். அதற்கான விண்ணப்பங்கள் கிரிக்கெட் அணிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன. சாவகச்சேரி-கச்சாய் வீதி முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகிலுள்ள ஸ்ரீமுருகன் சனசமூகநிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை கையளிக்குமாறு நிலையச் செயலாளர் க. தர்சன் அறிவித்துள்ளார். (04-207)

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

அனுசரணை:- சவாரி ரசிகர்கள்
இடம்:- நீர்வேலி மைதானம்
காலம்:- 07.03.2010
பிரிவு:- A, B, C, D
கட்டுப்பணம்:- ரூபா 500
பிரவேசம்:- இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போட்டி அமைப்பாளர்
சி.அசோக்குமார்(தேவன்).
(92297)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி ஐயாத்துரை சோதிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியை)
தாயின் மடியில்: 02.01.1940
ஆண்டவன் அடியில்: 09.01.2010

கடந்த 09.01.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (08.02.2010) திங்கட்கிழமை முற்பகல்11 மணியளவில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது துயரில் பங்கு கொண்டு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சேகண்டி 2 ஆம் ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி/564675) குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வல்லிபுரம்நித்தியானந்தன்
திதி: தசமி 08.02.2010
தோற்றம்: 24.09.1944
மறைவு: 01.02.2008

எம் வீட்டு ஒளி விளக்கே உன்
பிரகாசத்தால் இன்பமுடன் வாழ்ந்து- வந்தோம்
எங்கள் உயிர் மூச்சே உனக்கு நிகர்
இனி யாரும் இல்லையோ.

இல.120,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (சி/564662) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
சிவகுரு சிவராசா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 09 |
| 09 | 01 |
| 1926 | 2010 |

காலம் தனை வென்று நிற்கும் உங்கள்
கோலம் இன்னும் எங்கள் நெஞ்சிலாடுதே!
சீலமாக எமையெல்லாம் சீராட்டி வளர்த்து
ஞாலமதில் உயர்த்திவிட்ட உத்தமரே
காலனவன் உங்களைக் கவர்ந்துபோய்
நாள்கள் பலவானாலும் நாமும்மை என்றென்றும் மறவோம்.

தங்கள் நினைவில் வாழும்:
ஜோதிபுரம்,
இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி (சி/564676) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு உண்டு

தற்போது வவுனியா-யாழ் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ISUZU JOURNEY'M' ரக வாகனம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772097009, 0773543507 (சி/564674)

## காணி விற்பனைக்கு

முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கில் (K.K.S வீதியில் இருந்து 500M தூரத்தில்)
02பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772668426, 0779870559 (94637)

## நீச்சல் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்கள்

வலி.வடக்கு,பெப்.8

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு கல்லூரி இல்லங்களுக்கு இடையே நடத்தப்பட்ட நீச்சல் போட்டியில் முதல் பத்து இடங்களை பெற்று வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு.

வி.அன்றூஸ், எஸ்.விமல்ராஜ், எ.ரவிவர்மன், ஆர்.ரகுராஜ், ஜே.செந்தூரன், என்.மனோஜ்காந், எ.கொட்சைன், ஆர்.சுதர்சன், ரி.கஜன்.

மேற்படி போட்டியில் 50 மாணவ வீரர்கள் கலந்து கொண்டதுடன். பெரும் எண்ணிக்கையானவர்கள் போட்டியை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஐந்து வருட கால இடைவெளியின் பின்னர் நடைபெற்ற இந்த நீச்சல் போட்டிக்கு யாழ்ப்பாணம் கடற்தொழிலாளர் சங்கம் மற்றும் கடற்படையினர் ஆகியோர் ஆதரவு வழங்கியுள்ளார்கள். (04-86)

## சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இல்ல மெய்வமைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 8

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி கடந்த சனிக்கிழமை கல்லுரி மைதனத்தில் அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடை பெற்றது

இப் போட்டியில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டார். அத்துடன் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கும்,அணிகளுக்கும் கேடயங்களை வழங்கினார்

மேலும் சாவகச்சேரி நகர்ப் படையணியினர் சார்பில் விளையாட்டு உபகரணங்களையும் நலன்புரி நிலையங்களிலிருந்து இப் பாடசாலையில் இணைந்துள்ள 200 மாணவர்களுக்கு மிதிவண்டிகளையும் ஆளுநர் வழங்கினார்

ஆளுநர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வலயக்கல்விப் பணிப்பாளர் உட்பட பலர் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (04-207)

## வலைப்பந்தாட்டப் போட்டி

வடமராட்சி,பெப்.8

பருத்தித்துறை கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 16ஆம்,17 ஆம் திகதிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (04-236)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி, பெப்.8

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எஸ்.பொன்னையா தலைமையில் நடை பெறவுள்ளது.

இப்போட்டிக்கு கச்கோட்டைப் பங்குத்தந்தை அருட்திரு மருத்தின் பத்திரிநாதர் அடிகள் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (04-236)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
ஆறுமுகம் செல்லம்மா
மலர்வு: 25.07.1930
உதிர்வு: 09.01.2010

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த வேளையில் உடன் வந்து உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரம் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து இன்று (08.02.2010) திங்கட்கிழமை நாவற்குழி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ.நவரத்தினம் (மகன்),
நாவற்குழி, கைதடி. (92312) ஆ.நடராசா (மகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் டாக்டர்
ரேணுகா கஜேந்திரன்
மலர்வு: 16.08.1967
உதிர்வு: 09.01.2010

கடந்த 09.01.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.02.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூம்பொழில்,
வட்டு.வடக்கு, சித்தங்கேணி. (92313) கணவர், மகள்.

## கண்ணீர் அஞ்சலி



நாகலிங்கம் திருச்செல்வம்
(முன்னாள் உப அதிபர் யா/சென்.மேரீஸ் வித்தியாலயம் O.L.R)

நாராந்தனையைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை புகுந்த இடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய எங்கள் ஆருயிர் அன்பு மாமா 05.02.2010 இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மருமக்கள்-ந.பத்மநாதன் (பிறைசூடி)
ந.தங்கவேல்.
56/3, கலட்டி அம்மன் றோட்,
யாழ்ப்பாணம். (92310)

## மரண அறிவித்தல்

நாகலிங்கம் குணசிங்கம்
(சுருட்டு வியாபாரி)



கொக்குவில் மேற்கு, கேணியடியைச் சேர்ந்த நாகலிங்கம் குணசிங்கம் (குட்டி) 07.02.2010ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வியாகேஸ்வரியின் அன்புக் கணவரும்,நல்லம்மா, நாகேஸ்வரி,பராசக்தி,கணேசு,தேவராசா (தெய்வம்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருந்தவராஜா (தவம்- உடுப்பிட்டி),நடராசா(கனடா) ஆனந்தராஜா (பிரான்ஸ்), சோதிமலர் (அவுஸ்திரேலியா), பூமலர்(லண்டன்), ராணிமலர் (கனடா), நவமலர்(உடுப்பிட்டி), நாகேஸ்வரி(பிரான்ஸ்), காலஞ் சென்ற இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2010)மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (92311)
தகவல்:
நா.தேவராசா (சகோதரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மேலதிகக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும், படையினரின் சார்பில் வழங்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களை கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனிடமும், துவிச்சக்கர வண்டியை நலன்புரி நிலைய [illegible] ஆளுநர் வழங்குவதை இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: தென்னவன், அருணன்)

# தனியார்துறை ஊழியர்களின் விடுமுறை குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.8

காரியாலய சட்ட நடைமுறைகளுக்கு அமைய தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வாராந்த விடுமுறையாக ஒன்றரை நாள்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டும். பூரணை தினங்களிலும் (போயா) பகிரங்க விடுமுறை தினங்களிலும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்.

யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

தனியார் ஊழியர்களுக்கான விடுமுறைகளை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து தொழில் வழக்குநர்களையும் அறிவுறுத்துகின்றார் உதவித் தொழில் ஆணையாளர்.

இது தொடர்பாக அவர் வணிகர் கழகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நடைமுறைகள் குறித்து உதவித் தொழில் ஆணையாளர் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மேற்கூறப்பட்ட விடுமுறைகளை தொழில் வழக்குநர்கள் வழங்குவதுடன் அது தொடர்பான பதிவேடுகளைப் பேணவேண்டும். அத்துடன் பரிசோதனைகளுக்கு வரும் தொழில்திணைக்கள உத்தியோகத்தர்களிடம் அவற்றை பரிசீலினைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

* ஊழியர்களின் விருப்பத்துடன் மேற்கூறிய விடுமுறைதினங்களில் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தும் போது அதற்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குதல் வேண்டும்.

* பூரணை தினங்களில் ஊழியர்களின் விருப்பத்துடன் வேலைக்கு அமர்த்தும் போது சாதாரண சம்பளத்தின் ஒன்றரை மடங்கு சம்பளம் வழங்க வேண்டும். பகிரங்க விடுமுறை தினங்களில் வேலைக்கு அமர்த்தும் போது சாதாரண சம்பளத்தின் இரட்டிப்பு மடங்கு சம்பளத்தினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது அவ்வருடத்தில் பிறிதொரு தினத்தை விடுமுறையாக வழங்க வேண்டும்.

* மேற்கூறிய விடுமுறை நிபந்தனைகளை அனுசரித்து நடக்குமாறு அனைத்து தொழில் தருநர்களையும் அறிவுறுத்துகின்றேன்.

* மேற்கூறிய விடுமுறை அனுசரித்தல் சம்பந்தமாக யாழ்ப்பாண வணிகர் கழகத்துடன் கலந்துரையாடிய போது அவர்கள்ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க உடன்பட்டனர். அதற்கு அனைத்து நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஒ-224)

## தேசிய கலை இலக்கிய போட்டிகளுக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.8

இவ்வாண்டுக்கான தேசிய கலை இலக்கிப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கோரியுள்ளது.

கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடலாக்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டோர் இதற்கான விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு உதவி அரசாங்க அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார் அறிவித்துள்ளார். (04-224)

# நூலகர்களுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.8

வடக்கு மாகாண (உள்ளூராட்சி) நூலகர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நூலகர்களுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பினை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி . வி.ரமேஷ் வடக்குமாகாண அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன் மூலம் பட்டதாரி நூலகர்கள் வகுப்பு 111, வகுப்பு11, வகுப்பு1, சுப்புறா தரம் எனவும்-

புட்டதாரி அல்லாத நூலகர்கள் வகுப்பு 111, வகுப்பு11, வகுப்பு1,விசேட தரம் எனவும் 4 வகுப்புக்களில் உள்ளடக்கப் பட் டுள்ளனர்.

இச் சேவைப் பிரமாண குறிப்பு மூலம் நீண்டகாலமாக நிலவி வந்த சம்பள முரண்பாடு, பதவி உயர்வு பிரச்சினைகள் என்பன தீர்க்கப்பட்டுள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (04-302)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நகரில் மும்முரம்



யாழ்ப்பாணம் பெப் 8

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அதே வேளையில் அதைக்கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளும் தீவிரமாகியுள்ளன.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவின் நெறிப்படுத்தலில் யாழ். மாநகர சுகாதாரப்பகுதியினர் புகையூட்டல் உட்பட நோயைக் கட்டுப்படுத்தக் கூடியதான நடவடிக்கையை முன்னெடுப்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.

மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தமது கடமை நேரத்திற்கும் மேலதிகமாக -இரவு 9 மணிவரை -யாழ். மூத்தவிநாயகர் கோயில் மற்றும் ஆத்திசூடி வீதிப்பகுதிகளில் தமது ஊழியர்களுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை அண்மையில் காணக்கூடியதாக இருந்தது. (04-111)

# அதிகரிக்கும் காட்டுப்பன்றிகளின் நடமாட்டத்தால் தினமும் சிரமங்களை எதிர்நோக்கும் பொதுமக்கள்

யாழ்ப்பாணம்,பெப்.8

வடமராட்சி மற்றும் வலி.கிழக்கு பிரதேசங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வல்லைவெளிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காட்டுப் பன்றியுடன் மோதி விபத்துக்கு இலக்காகினர். இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பேர் காயங்களுக்குள்ளாகினர்.

இதனைவிட வலி. கிழக்குப் பகுதிகளான கோப்பாய், நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் போன்ற இடங்களிலும் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துக் கானப்படுகின்றது.

கோப்பாய் தரவைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்களை இந்த பன்றிகள் சேதப்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனைவிட நீர்வேலியில் உள்ள தோட்டங்களில் உட்புகும் பன்றிகள் அங்கு பயிரிடப்பட்ட மரக்கறிகளையும் சேதப்படுத்திவிட்டுத்தப்பிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பன்றிகள் தென்மராட்சிப் பகுதியில் இருந்தே இரவு வேளைகளில் வருவதாகவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

# வடமராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கு கணனி அறை அமைக்க நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை,பெப்.8

வடமராட்சிக் கல்வி வலயத்திலுள்ள எட்டுபாடசாலைகளில் கணனி அறை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலட்டி றோ.க.த.க பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை சென்.தோமஸ் மகளிர் பாடசாலை, தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை, கம்பர்மலை இதக.பாடசாலை,அல்வாய்சின்னத்தம்பிவித்தியாலயம், அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, வல்வை சிவநேச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே கணனி அறை அமைப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (04-190)




# இலங்கையிலே டெங்கு நோயின் தாக்கம் யாழ்.மாவட்டத்திலேயே அதிகம்

யாழ்ப்பாணம்,பெப்.8

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அண்மைக் காலத்தில் அதிகளவானோர் டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்தால் இதுவரையும் 19 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 பேர் 18 வயதிற்கும் குறைந்த சிறுவர்கள் ஆவர். உயிரிழந்துள்ள இந்தச் சிறுவர்களில் 7 மாதப் பெண் குழந்தை உட்பட 13 பெண்களும், 6ஆண்களும் அடங்குவர்.

அதுமட்டுமன்றி சிகிச்சை பெறுவதற்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இம் மாதம் 5ஆம் திகதி வரை 1224 பேர் டெங்கு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. (04-14-16)

# நீர்வேலி கயிற்றப்புலம் பிரதேசத்திற்கு நீண்ட காலத்திற்குப் பின்னர் மின்சாரம்

யாழ்ப்பாணம், பெப்.8

நீர்வேலி தெற்கு கயிற்றம் புலம் வீதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு முன்னேற்பாடாக மின்சார சபையினர் தற்போது மின் கம்பங்களை நட்டு வருகின்றனர்

கடந்த பல வருடங்களாக மின்சாரம் இன்றி இப்பகுதி விவசாயிகளும் விவசாயக் குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்

எனவே மின்சாரம் விநியோகம் இப்பகுதிக்கு வழங்கப்பட்டால் விவசாயிகள் பலரும் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (4-224)

# பங்குச்சந்தை தொடர்பான செயலமர்வு

பருத்தித்துறை.பெப்.8

இலங்கைப் பங்குச் சந்தை தொடர்பான செயலமர்வு பங்குச்சந்தை உத்தியோகத்தர்களினால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை எட்டு மணிக்கு ஜி.சீ.ஈ.உயர்தர வர்த்தகப்பிரிவில் கல்விகற்கும் மாணவர்களுக்கும், பிற்பகல் 1 மணிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் வ[illegible] கல்வி ஆகிய பாடங்களை கற்கும் மாண[illegible]நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (04-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பப் பாடபோதனைகளை முன்னெடுக்க கிழக்கில் துரித நடவடிக்கை

கொழும்பு, பெப். 08

பாடசாலைகளில்தற்போது அமுல்படுத்தப் பட்டுவரும்தகவல்தொழிநுட்பபாட போதனை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள் வதற்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் களம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அடங்கிய பாடசாலை சமூகத்தினருக்குக் கணனி தொடர்பான அறிவைப் போதிக்கும் நோக்கத்துடன் தகவல் தொழில்நுட்பக் கல்விச் செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

கணனிக் கல்வியைப் போதிப்பதற்கு வசதியாகப் பாடசாலைகளில் கணனி வள நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கிழக்கு மாகாண பாடசாலைகளில் புதிய கல்வியாண்டில் தகவல் தொழிநுட்ப பாட போதனைகளை மேலும் திறன் பட முன்னெடுக்கும் நோக்கத்துடன் விசேட செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள் ளன.

இதேவேளை, தகவல் தொழிநுட்பத்திற் கான தேசிய தகவல் தளமொன்று அறிமுகம் செய்வதற்கும் கல்வியமைச்சு தீர்மானித் துள்ளது.

இந்த விடயங்கள் பற்றி ஆராயும் கலந்து ரையாடலொன்று மட்டக்களப்பு கணனி வள நிலையத்தில் நடைபெற்றது எனக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார். (சி)

# கனியமணல் கழிவு நீரினால் புல்மோட்டையில் பாதிப்பு

கொழும்பு, பெப். 08

புல்மோட்டையில் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்த ாபனத்தால் கனியமணல் தரம்பிரித்து வெளியிடப்படும் கழிவு நீர், புல்மோட்டை சவாமியா நகர் 3 ஆம் வட்டாரத்தை அண்டிய பகுதி மற்றும் ஜின்னாபுரம் ஆகிய பகுதிகளில் விடப்படு வதால் இப்பிரதேசங்கள் பாதிக்கப்படு வதோடு குடிதண்ணீர் கிணறுகளும் உவர்த் தன்மையாக மாறுகின்றன. கனிய மணல் கடல் நீரைக் கொண்டு சுத்திகரிக்கப்படு வதால், கடல் நீர் சென்றடையும் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன இதனால் தாவரங்களும் ஏனைய தோட்ட மரங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடயமாகக் கனிய மணல் தாபனத்தின் நிர்வாகத்தினருக்கு இப்பகுதி பொதுநல அமைப்புக்கள் பலமுறை தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித மாற்று நடவடிக்கையும் எடுக்கப்படாததையிட்டு பிரதேச மக்கள் மிக வும் கவலை தெரிவிக்கின்றனர். (சி)

# மூதூர், வெருகல் பிரதேசங்களில் நெற்செய்கையில் பூச்சித் தாக்கம்

கொழும்பு, பெப். 08

மூதூர், கிண்ணியா வெருகல் பகுதியில் அறக்கொட்டியான் எனப்படும் கிருமித் தாக்கத்தினால் அதிகமான நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

நெற்பயிரைத் தாக்கும் இக்கிருமி அதனை அரித்து தூளாக்கி விடுகின்றது. மிகவேகமாகப் பரவி வரும் இப்பூச்சித் தாக்கத்திலிருந்து நெல்வயல்களைப் பாதுகாக்க விவசாயிகள் பெரும் பிராயத்தனங்களை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மழையின்மை காரணமாகவும் அதிகமான நெல்வயல்கள் இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பெருமளவு விவசாயிகள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படும் ஆபத்து தென்படுகிறது எனவும் கூறப்படுகிறது. (சி)

# ரயில்சேவை ஆசனப்பதிவு அலுவலகத்தை கல்முனையில் மீண்டும் இயங்கச் செய்க!

கொழும்பு, பெப். 08

ரயில்வேத் திணைக்களத்தின் கல்முனை பிரதேசத்திற்கான ஆசனப் பதிவு அலுவல கத்தை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும் என அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முஸ்லிம்களின்ஹிஜ்ரி1400ஆவதுஆண்டை முன்னிட்டு 1982 ஆம் ஆண்டு அப்போதைய போக்குவரத்து அமைச்சர் எம்.எச்.முஹம்மதி னால் இந்த ஆசனப் பதிவு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் கல்முனை தொடக்கம் பொத் துவில் வரையிலான தமிழ், முஸ்லிம் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் வர்த் தகர்கள் ஆசனப்பதிவுகளை மேற்கொண்டது டன் தமது பொருட்களையும் கொழும்பு உட்பட ஏனைய நகரங்களுக்கு அனுப்பியும் வைத்தனர்.

கிழக்கில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரண மாக ரயில் போக்குவரத்து மட்டக்களப்புக்கு நிறுத்தப்பட்டதனால் கல்முனை ஆசனப் பதிவு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது மட்டக்களப்புக்கான ரயில் போக்கு வரத்துச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆசனப்பதிவு அலுவலகத்தை மீள இயங்கச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடப்படுகிறது. (சி)

# மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் தனித்துவமாக இயங்குவதற்கு அங்கீகாரம்

கொழும்பு, பெப். 08

சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் நிர் வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்த மாளிகைக் காடு கிராமம் அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பரிபாலனத்தின் கீழ் தனித்துவமாக இயங்கு வதற்கான அங்கீகாரத்தை இலங்கை வக்பு சபை வழங்கியுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் மற்றும் காரைதீவு பிரதேச சபை ஆகிய பிரிவுகளுக்குட் பட்ட மாளிகைக்காடு கிராமம் தனித்துவமாகச் செயற்படும் வகையில் இக் கிராமத்திலுள்ள அந்-நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது. இதனை ஆட்சேபித்து சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் இலங்கை வக்பு சபை நீதி மன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இதனை விசாரணை செய்த இலங்கை வக்பு சபை, நிர்வாக ரீதியாக மாளிகைக்காடு கிராமம் வேறு பட்டிருக்கும் காரணத்தினால் இக்கிரா மத்தின் பள்ளிவாசல் நிர்வாக நடவடிக்கைகள் தனித்துவமாக இயங்குவதற்கான அங்கீகா ரத்தை அண்மையில் வழங்கியுள்ளது.

மாளிகைக்காடு கிராமத்தின் பள்ளிவாசல் நடவடிக்கைகளைச் சுதந்திரமாகவும், தனித்து வமாகவும் மேற்கொள்ளத் தமக்குச் சட்டரீதி யான அங்கீகாரம் கிடைத்த நிலையில் மாளி கைக்காடுகிராமத்தின்எதிர்காலசமூக, சமய, கலாசார நடவடிக்கைகளை அந்-நூர் ஜும்ஆப் பள்ளி வாசலைத் தளமாகக் கொண்ட கட்டமைப்பின் கீழ் சிறப்பான முறையில் செயற்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும்-

தற்போதைய அந்-நூர் ஜும்ஆப் பள்ளி வாசல் மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளி வாசல்என்றபெயர்மாற்றத்துடன்இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாகவும் இப்பள்ளிவாசலின் பிரதம நம்பிக் கையாளர் எம்.அலியார் தெரிவித்தார். (சி)

# இரண்டாம் மொழிக் கல்வியை போதிக்கும் நடவடிக்கை துரிதம்

கொழும்பு, பெப். 08

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர் களுக்குத் தாய்மொழிக்கு மேலதிகமாக இரண்டாம்மொழியைப்போதிக்கும்நடவடிக்கை களை இந்த வருடத்திலும் முன்னெடுப் பதற்குக் கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதன்பிரகாரம் இரண்டாம் மொழியாக சிங்கள மாணவர்களுக்கு தமிழ்மொழியும், தமிழ். மொழிமூல மாணவர்களுக்குச் சிங்கள மொழியும் போதிக்கப்பட்டு வரு கின்றன.

கடந்த வருடம் மாணவர்களுக்கு இரண் டாம் மொழியைப் போதிப்பது பற்றி அமுல்படுத்தப்பட்ட வேலைத் திட்டங் களின் முன்னேற்றம் தொடர்பாகவும் இந்தக்கூட் டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது எனக் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். யூ.விஜேரத்ன தெரிவித்துள்ளார். (சி)

# மட்டு. மாவட்டத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு

கொழும்பு, பெப். 08

''கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு நீங்களே சாட்சிகள்'' எனும்தொனிப் பொருளில் இவ்வருட கிறிஸ்தவ ஒன்றிப்பு உலகம் முழுவதிலும் அனுஷ்டிக்கப்படு கின்றது. இதனை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு நிகழ்வு இம்மாதம் 13ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அருட்திரு எ.எஸ்.சுபேந் திரன் அடிகளாரின் கூட்டு வழிபாட்டுடன் சமாதானப்பவனி ஆரம்பமாகி, தாண்ட வன் வெளி தூய காணிக்கை அன்னை ஆலயத்தில் ஒன்றிப்பு வழிபாடு டி.எஸ். மதியாபரணம் அடிகளாரின் வரவேற்பு ரையுடன் ஆரம்பமாகும்.

இவ்வழிபாட்டில் மட்டு-திருமலை ஆயர் அதிவண. கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, துணை ஆயர் அதிவண. கலாநிதி பொன்னையா யோசப், மெதடிஸ்த திரு அவை வடக்கு, கிழக்கு சபாசங்கத் தலைவர் எஸ்.டி. தயாசீலன் ஆகியோர் மறையு ரைகளையும், வாழ்த்துச் செய் திகளையும் தெரிவிப்பார்கள்.

அமெரிக்கன்சிலோன்மிஷன், கத்தோலிக்க திருச்சபை, அங்கிலிக் கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இரட்சணிய சேனை போன்ற சபைகளின் குரு முதல்வர்களும் இச்சபை பங்கு களிலிருந்தும் பாடசாலைகள், கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், ஆசி ரிய பயிற்சிக் கல்லூரி போன்றவற்றைச் சேர்ந்தோரும் இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சகல இடங்களுக்குமான போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என ஒழுங்கமைப்புக் குழு வின் சார்பில் அருட்தந்தை டீ.சாமிநாதன் தெரிவித்தார். (சி)

## வெருகல் பிரதேசசபைக்கு புதிய அலுவலகக் கட்டடம்

கொழும்பு, பெப். 08

வெருகல் பிரதேசசபைக்கான புதிய அலுவலகக்கட்டடம் விரைவில் நிர்மாணித்து முடிக்கப்படவுள்ளது. வெருகல் பிரதேச சபைக்கான புதிய இரண்டுமாடிக் கட்டட மானது ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதிமூலம் 'நெக்கொட்' அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இக்கட் டடமானது ஈச்சிலம்பற்று - வப்பியா வழிச்சந்தியில் பிரதேச சபைக்கு சொந் தமான காணியில் நிர்மாணிக்கப்படுகின்றது. நிர்மாண வேலைகளில் 95 சதவீதமான வேலைகள்நிறைவடைந் துள்ளன. இன்னும் சில மாதங்களில் சகல வேலைகளும் நிறை வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் உருவாக்கப்பட்ட வெருகல் பிரதேச சபைக்கெனத் தனியான கட்டடம் இல்லாததால் அந்த அலுவலகம் பொதுக் கட்டடங்களில் இயங்கி வந்தமை குறிப் பிடத்தக்கது. (சி)




# கிழக்கு அரச சேவை சாரதிகளுக்கு வினைத் திறமைகாண் பரீட்சை

கொழும்பு, பெப். 08

கிழக்கு மாகாண அரச சேவை அலுவ லகங்களில் பணிபுரியும் சாரதிகளு க்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட் சையை இம்மாதம் நடத்துவதற்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத் துள்ளது.

கிழக்கு மாகாணப் பொதுச்சேவை சாரதி வகுப்பு -02 'ஆ', வகுப்பு 'அ' மற்றும் வகுப்பு -01 ஐச் சேர்ந்த சாரதிகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கே.உடகே அறி வித்துள்ளார்.

சாரதிகள் இதற்கான விண்ணப் பங்களை மாகாண பொதுச்சேவை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

பெருந்தெருக்கள் சட்டம் தொடர்பான பிரயோக முறை அறிவு, மோட்டார் பொறித் துறை பற்றி அடிப்படை விடயங்கள் மற்றும் திணைக்களத் தலைவரின் அறிக்கை என்பன நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக் கப்படவுள்ளன.

அரசசேவையில்பணிபுரியும் உத்தியோ கத்தர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்பு மற்றும் பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொடுப் பதற்காக வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (சி)

# காணி அனுமதிப் பத்திரம் இன்றி வெருகல் பிரதேச மக்கள் அவலம்

கொழும்பு, பெப். 08

காணி அனுமதிப் பத்திரம் இல்லாமையால் பல்வேறு அசௌகரியங்களைத் தாங்கள் எதிர் கொள்கின்றனர் என வெருகல் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 10 கிராம சேவையாளர் பிரிவுகளில் சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் குடியிருப்பு காணி, நெல் வயற்காணி ஆகியவற்றிற்கான காணி அனுமதிப் பத்திரங்கள் இல்லாமையால் உரமானியம் பெறுதல், காணிகளுக்கு இடாப்பு வைத்தல், வீட்டுமானியம் பெறுதல், மின்சார இணைப்புப் பெறுதல் போன்றவற்றில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அனுமதிப்பத்திரம் இல்லாமையால் காணி களுக்குள் பிறரின் அத்துமீறல், எல்லைப்பிரச் சினை, உரிமைப் பிரச்சினை போன்றனவும் ஏற் படு கின்றன எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு சிலரிடம் காணி அனுமதிப் பத்திரம், ஜயபூமி காணி உறுதிகள் என்பன காணப்பட்ட போதிலும் கடந்தகால யுத்தத்தில் சகலதும் அழிவடைந்தும் காணாமலும் போயுள்ளன.

பலதடவைகள் காணி அனுமதிப்பத்திரம் பெற,வெருகல்பிரதேசசெயலகத்துக்குவிண்ணப் பித்தும், காணிக் கச்சேரி விசாரணை தோற்றியும் இன்னும் கிடைக்கவில்லை யெனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காணி அனுமதிப்பத்திரம் கைவசம் இல்லா மையால் உரமானியம் பெறுகின்றபோது பிரதேச செயலகங்களுக்கு சென்று அதிகாரிகளின் சிபாரிசுக் கையொப்பத்திற்காக அலைய வேண்டி ஏற்படுகிறது. சிலவேளைகளில் இரண்டு ஏக்கருக்கு மேலதிகமாக ஒரு விவசா யிக்கு அதிகாரிகள் உரமானியம் பெறுவதற் கான சிபாரிசுகளை செய்து கொடுக்க மறுக் கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இவைகளை கருத்திற்கொண்டு மாகாண காணி ஆணையாளர் வெருகல் பிரதேச மக்க ளுக்கு காணி அனுமதிப் பத்திரம்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக் கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்ற விதிமுறைகளில் மாற்றம்; ஆஸ்திரேலிய அரசு திட்டவட்டம்

மெல்போர்ன், பெப். 08

குடியேற்ற விதிமுறைகளில் மாற்றம் கொண்டுவர ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து இந்திய மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். இதையடுத்து, நாட்டில் குடியேற்ற விதிமுறைகளைக் கடுமையாக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி வெளிநாடுகளிலிருந்து சிகை அலங்கரிப்பாளர்கள், சமையல்காரர்கள், தொழிலாளர் ஆகியோராக வந்து ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்கியுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வெளிநாடுகளிலிருந்து வரும் தொழிலாளர்களை அனுமதிக்கும் குடியேற்ற விதிமுறைகளில் மாற்றம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான புதிய விதிமுறைகளைக் குடியுரிமைத்துறை அமைச்சர் கிறிஸ் இவான், திங்கட்கிழமை (இன்று) அறிவிப்பார்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தொழிலாளர் என்ற பெயரில் வரும் பலர் இங்கு நிரந்தரமாகத் தங்கி விடுகின்றனர். இதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொழிலாளரை வெளிநாடுகளிலிருந்து அழைத்துவருவது குறித்து ஆஸ்திரேலிய தொழில் வர்த்தக சபை, தொழில் நிறுவனங்கள், சுரங்க நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் அமைச்சர் கிறிஸ் இவான் பேசுவார்'' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஆஸ்திரேலியாவில் 457 பிரிவுகளில் தற்காலிக விசாக்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் ஏராளமான தொழிலாளர் வருகின்றனர். இதனால் உள்நாட்டு தொழிலாளரின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகிறது'' என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விசா நடைமுறையும் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் கடந்த ஓராண்டில் ஏராளமான இந்தியர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களாவர். இதனால்தான் வெளிநாட்டவர்கள் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்கிவிடுவதைத் தடுக்க ஆஸ்திரேலிய அரசு இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது.

## நேபாளத்தில் பஸ் விபத்து: ஏழு பக்தர்கள் உயிரிழப்பு

காத்மாண்டு, பெப். 08

நேபாளத்தில் பஸ் கவிழ்ந்து சிறுமி உட்பட 7 இந்து பக்தர்கள் உயிரிழந்தனர். தலைநகர் காத்மாண்டுவிலிருந்து 175 கி.மீ. தொலைவிலுள்ள சிட்ஜ்வான் மாவட்டத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இந்து பக்தர்கள் பாரஹா ஷேத்ராவிற்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தனர். அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் தாரேச்சூர் என்ற இடத்தில் பாலத்திலிருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 4 வயதுச் சிறுமி, 2 பெண்கள் ஆகியோர் உட்பட 7பேர் இறந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் பாரத்பூரிலுள்ள மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உலக அரங்கில்

# பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல்; 25 பேர் மரணம்; 75 பேர் படுகாயம்

## இராணுவத்தின் அதிரடியில் 60 தீவிரவாதிகள் உயிரிழப்பு

கராச்சி, பெப். 08

பாகிஸ்தானின் இருவேறு இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 25 பேர் உயிரிழந்தனர். 75 பேர் காயமடைந்தனர்.

கராச்சி நகரில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மத ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ள பஸ்ஸில் ஷியா முஸ்லிம்கள் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது அந்த பஸ் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பஸ்ஸில் பயணம் செய்த 13 பேர் இறந்தனர். காயமடைந்த 50 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மற்றொரு வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் கராச்சியின் ஜின்னா மருத்துவமைய வைத்தியசாலை வளாகத்தில் நடந்தது. இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்த 25 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அதேவேளை, தலிபான்களின் ஆதிக்கத்திலிருந்த பகுதியைக் கைப்பற்ற பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் 60 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதில் 7 இராணுவச் சிப்பாய்களும் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் குறிப்பிடுகையில், ''பாகிஸ்தானின் எல்லையோரத்திலுள்ள பஜாவூரில் டமாடோலா பகுதி தலிபான்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இந்தப் பகுதியைக் கைப்பற்ற பாகிஸ்தான் இராணுவத்தினரும் பழங்குடியினப் பகுதி சிப்பாய்களும் கடந்த மாதம் 27ஆம் திகதிமுதல் தாக்குதலை நடத்தி வந்தனர். இராணுவத்தின் கடும் தாக்குதலில் தலிபான்கள் வசம் இருந்த டமாடோலா பகுதி, பாகிஸ்தான் இராணுவம் வசம் சனிக்கிழமை வந்தது'' என்றார்.

# ஏவுகணை உற்பத்தி நிலையங்கள் ஈரானில் இரு இடங்களில் திறக்கப்பட்டது

தெஹ்ரான், பெப். 08

ஈரானில் இரு இடங்களில் ஏவுகணை உற்பத்தி நிலையங்களைப் பாதுகாப்பு அமைச்சர் அகமது வாஹிதி திறந்துவைத்தார்.

தரையிலிருந்து விண்ணிலுள்ள இலக்கைத் தாக்கும் 'காயெம்' என்ற ஏவுகணை, ஹெலிக்கொப்டர்களைத் தாக்கவல்லது. இதையும், தரையிலிருந்து கிளம்பி, தரையிலக்கைத் தாக்கும் 'டூஃபான்' ஏவுகணையையும் இம் மையங்கள் உற்பத்தி செய்யும்.

ஈரானில் நடந்த இஸ்லாமியப் புரட்சியின் 31 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, இந்த ஏவுகணை உற்பத்தி நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த புதனன்று, உயிருள்ள ஆமைகள், எலிகள், புழுக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஆய்வுக்கலனுடன், 'கவோஷ்கர் 3' என்ற ஆய்வு ரொக்கெட்டைப் பரிசோதனை முயற்சியாக ஈரான் விண்ணுக்கு செலுத்தியது.

உயிருள்ள பிராணிகளுடன் ரொக்கெட் அனுப்பப்பட்டு, மூன்று நாள்களே ஆன நிலையில் இந்நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன என அரசு தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

ஈரானின் ஏவுகணை உற்பத்தி, விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை மேற்கத்திய நாடுகள் கண்டித்து வருகின்றன. இத்திட்டங்கள் அணுஆயுத தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படலாம் என்று அவை அஞ்சுகின்றன.

# இனக்குரோதப் பேச்சுக்கு எதிர்ப்பு; மலேஷிய அதிகாரி பதவி துறந்தார்

கோலாலம்பூர், பெப். 08

தமிழர்களும், சீனர்களும் மலாய் இனத்தவர்களுக்கு நிகரான சலுகைகளைக் கேட்டால் அவர்களது குடியுரிமை இரத்துச் செய்யப்படும் என மிரட்டிய மலேஷிய பிரதமர் அலுவலக சிறப்பு அதிகாரியின் பதவி பறிபோயுள்ளது.

இவரது பேச்சுக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. இதைத் தொடர்ந்து இவர் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். பிரதமர் நஜீப் துன் ரஸ்ஸாக்கின் முக்கிய உதவியாளரும், பிரதமர் அலுவலக சிறப்பு அதிகாரியுமான நசீர் சபர் என்பவர் இந்தியர்களும், சீனர்களும், மலாய் இனத்தவர்களுக்கு நிகரான சலுகைகளையும், அந்தஸ்தையும் கோரினால், அவர்களது குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டு நாடற்றவர்களாக மாற்றப்படுவர் என்று மிரட்டிப் பேசியிருந்தார்.

இது மலேஷியாவில் பெரும் கொதிப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மையினரான தமிழர்களும், சீனர்களும், நசீரின் பேச்சுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதனால் பிரதமர் நஜீப்புக்குப் பெரும் தர்மசங்கடம் ஏற்பட்டது. மேலும் ஒரே மலேஷியா என்ற நஜீப்பின் திட்டம் தொடர்பான கருத்தரங்கில் இவ்வாறு நசீர் பேசியமையால் பிரதமருக்குப் பெரும் நெருக்கடியாகிவிட்டது.

இந்த எதிர்ப்பைத் தொடர்ந்து தற்போது நசீர் பதவி விலகிவிட்டார். மேலும் பகிரங்கமாக மன்னிப்பும் கேட்டுள்ளார். இதுகுறித்து நசீர் கூறுகையில், ''எனது பேச்சு இனவெறியைத் தூண்டும் வகையில் அமைந்துவிட்டது. இதற்காக அனைத்து மலேஷியர்களிடமும் நான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

''யாரையும் புண்படுத்தவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் நான் இவ்வாறு பேசவில்லை. எந்த சமுதாயத்தையும் இழிவுபடுத்தும் நோக்கமும் எனக்கு இல்லை. யாரையும் குறைத்து மதிப்பிடவும் இல்லை. இருப்பினும், எனது பேச்சு தவறானது என பலரும் கூறத் தொடங்கிவிட்டனர். இதனால் எனது தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினைக்குப் பொறுப்பேற்று எனது பதவியையும் இராஜிநாமாச் செய்துவிட்டேன்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

# உயிருடன் மகளைப் புதைத்த தந்தையும், தாத்தாவும் கைது!

## தென் கிழக்குத் துருக்கியில் கொடூரம்

துருக்கியில் 16 வயது யுவதியை உயிரோடு புதைத்த யுவதியின் தந்தையும், தாத்தாவும் கைது செய்யப்பட்டனர். இந்த யுவதி இளைஞருடன் பேசுவதை வழக்கமாக்கொண்டிருந்தார். இதனால் ஆத்திரமடைந்த தந்தையும், தாத்தாவும் இந்த யுவதியைக் குழி தோண்டி உயிருடன் புதைத்துள்ளனர்.

துருக்கியில் இந்த அதிர்ச்சிச் சம்பவம் நடந்துள்ளது. தென்கிழக்கு துருக்கியிலுள்ள காடா நகரில் வசிப்பவர் அய்கான். இவருக்கு 9 பிள்ளைகள். இவர்களில் ஒருவர் 16 வயது யுவதி மதினா மெமி.

இவரைக் கடந்த 40 நாள்களாகக் காணவில்லை என அக்கம்பக்கத்தினரிடமிருந்து பொலிஸாருக்குத் தகவல் சென்றது. சந்தேகமடைந்த பொலிஸார் அந்த யுவதியின் தந்தையையும் அவரது தாத்தாவையும் விசாரித்தனர்.

இருவரும் சேர்ந்து வீட்டின் பிற்பகுதியில் 6 அடி ஆழக் குழி தோண்டி மதினாவை உயிருடன் புதைத்த கொடுமை தெரியவந்தது.

இதையடுத்து, மதினாவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. குழிக்குள் உட்கார்ந்த நிலையில் மதினாவின் உடல் இருந்தது. கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. இது தொடர்பான விசாரணையில், ''எங்கள் எச்சரிக்கைகளை மீறித் தொடர்ந்து இளைஞர்களுடன் மதினா பேசி வந்தார். இதனால் குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் என்று பயந்தோம். அதனால் அவளை உயிருடன் புதைத்தோம்'' என்று இருவரும் தெரிவித்தனர். இதையடுத்து இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

# ஜக்ஸனின் டாக்டர் மர்ரே மீது இன்று குற்றப்பத்திரிகை தாக்கல்

லொஸ் ஏஞ்சல்ஸ், பெப். 08

உலகப் புகழ்வாய்ந்த பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்ஸனின் திடீர் மரணம் தொடர்பாக அவருடைய டாக்டர் கான்ராட் மர்ரே மீது இன்று திங்கட்கிழமை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது. அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால், அவருக்கு அதிக பட்சம் 4 ஆண்டுகள் சிறைவாசம் விதிக்கப்படலாம்.

அவரை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்ய விரும்புகின்றனர். அவரோ நீதிமன்றத்தில் சரணடைய விரும்புகிறார். அது மட்டும் அல்ல. அவரைக் கைது செய்ததும் அவர் கைகளில் விலங்கை மாட்டி அவரைப் புகைப்படம் எடுத்து உலகுக்குக் காட்டவேண்டும் என்று பொலிஸார் விரும்புகின்றனர் என மர்ரேக்கு நெருக்கிய வட்டாரங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. இதற்காகவே அவர் சரணடைவதைப் பொலிஸார் விரும்பவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

டாக்டர் மர்ரே மீது நேரடியாகக் கொலைக் குற்றம் சாட்டப்படமாட்டாது. அதே சமயம், அவருடைய இறப்புக்குக் காரணமாக இருந்தார் என அவர் மீது வழக்கு பதிவு செய்யப்படும் எனத் தெரி கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கு அதிகபட்சம் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. லொஸ் ஏஞ் செல்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறவுள்ளது.

டாக்டர் மர்ரேக்கு நெவாடா மாநிலத்தில் வீடு இருக்கிறது. அவரோ ஹொஸ்டன் நகரில் பணிபுரிகிறார். அவர் லொஸ் ஏஞ்சல்ஸில் சரணடையத் திட்டமிட்டு வியாழக்கிழமையே தன்னுடைய சட்டத்தரணியிடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால், அரச தரப்போ அவருக்குக் கைவிலங்கிட்டு அதைப் புகைப்படம் எடுக்க விரும்பியுள்ளமையால், அவர் சரணடைய இடையூறாக உள்ளது. ஆனால் இதை அரசுத் தரப்பு மறுக்கிறது.

அவரைக் கைதுசெய்து கைவிலங்கிட்டு அதைப் புகைப்படம் எடுக்கவேண்டும் என்று அரசு வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜூன் மாதம் மைக்கல் ஜக்ஸன் இறந்தார். மிகப் பெரிய நடன நிகழ்ச்சிக்குத் தொடர்ந்து ஒத்திகைகள் பார்த்துவந்த அவர் இரவுபகலாக ஓய்வின்றி அதில் ஈடுபட்டார். தூக்கம் வராமல் இருக்கவும், களைப்பு மேலிடாமல் இருக்கவும் தனக்கு வலி மறப்பு ஊசி போடுமாறு மர்ரேயிடம் அவர் கூறினாராம். அவரும் அப்படியொரு ஊசியைப் போட்டார். அதைப் போட்ட சில நிமிடங்களுக்கெல்லாம் அவர் மயக்க நிலையில் ஆழ்ந்து பின்னர் இறந்துவிட்டார்.

இதற்காக டாக்டர் மீது நேரடியாகக் கொலை வழக்குப் போடாமல், தன்னுடைய செயலால் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்துவிட்டார் என்று வழக்கு பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. கொல்லவேண்டும் என்ற எண்ணமோ, சதியோ இல்லை. எனினும், மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்ட மைக்கல் ஜக்ஸனுக்கு இந்த ஊசி போட்டால் ஆபத்து வரும் என்று தெரிந்தே போடப்பட்டுள்ளது எனக் கருதப்படுகிறது.

இந்தக் குற்றத்திற்காக அவர் அதிகபட்சம் 4 ஆண்டுகளைச் சிறையில் கழிக்க வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் சுதந்திர தாகம் தணியாது!

## கோவையில் பினாங்கு துணை முதல்வர் தெரிவிப்பு

கோவை, பெப். 08

ஈழத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இல்லாவிட்டாலும் சுதந்திர தாகம் தணியாது; - ஓயாது - என்று உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் பினாங்கு துணை முதல்வர் ராமசாமி கூறினார்.

கோவையில் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நிகழ்ச்சிக்குப் புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். மலேஷியாவின் பினாங்கு மாநில துணை முதல்வர் ராமசாமி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசியபோதே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

உலகம் எங்கும் பரந்து கிடக்கும் தமிழர்களுக்கு கடந்த காலங்களில் கசப்பான அனுபவங்கள்தான் ஏற்பட்டுள்ளன. உலக அளவில் உள்ள தமிழர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிவருகின்றனர். மலேஷியா, சிங்கப்பூர், மொரிசியஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு அவரவர் வாழ்வுரிமை, மொழி ஆகியவற்றுக்குப் பல்வேறு அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளை, விவகாரங்களை இந்த மாநாட்டின் வழியாக நாம் விவாதிக்க வேண்டும்.

தமிழினப் பாதுகாப்புக்காக உலக அளவில் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முதற்படி தான் இந்த மாநாடு. தமிழ் இனத்தின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. தனிநாடு என்னும் தாகம் இன்னும் தணியவில்லை.

தமிழர்களுக்கு என தனிநாடு ஒன்று வேண்டும். அது தனி ஈழமாக அமையும். ஈழத்தில் பிரபாகரன் இல்லாவிட்டாலும் சுதந்திர தாகம் ஓயாது. தமிழர்கள் என்றால் ஒதுக்கப்பட்ட சமுதாயம் என்ற நிலை மாற வேண்டும். தமிழன் தன்மானத்தோடு வாழ வேண்டும். தமிழர்களுக்கு தனித்துவம் வாய்ந்த தலைவர்கள் தேவை - என்றார்.

நிகழ்ச்சியில் புலவர் புலமைப்பித்தன், மலேஷியாவின் குணசேகரன் எம்.பி. மற்றும் மலேஷிய எம்.எல்.ஏக்கள் சிவநேசன், குணா, ரவி, சிம்மாதிரி, கணபதி ராவ், வசந்தகுமார், தமிழ் அறிஞர் பொன்னுரங்கம் உட்பட பலர் பேசினர்.



புதுவைக்கு வந்த ராகுல்காந்தி புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ராஜீவ் காந்தி கிரிக்கெட் மைதானத்தைத் திறந்துவைத்தார். பின்னர் அவர் தொண்டர்களைப் பார்த்து கையசைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# கடந்த 100 வருடங்களில் வெப்பமான ஆண்டு 2009

புதுடில்லி, பெப். 08

1901 ஆம் ஆண்டு முதல் கடந்த 100 ஆண்டுகளில் வெப்பமான ஆண்டு 2009 ஆம் ஆண்டுதான் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 1961 - 1990 ஆம் ஆண்டு வரையிலான சராசரி வெப்பத்தைவிட கடந்த ஆண்டு வெப்பநிலை அதிகமாக இருந்தது. இந்த வெப்பநிலை சுமார் 0.913 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது. இது 1901 ஆம் ஆண்டு முதல் கடந்த 100 ஆண்டுளில் வெப்பமான ஆண்டாகும்.

இந்தியாவில் சராசரி வெப்பநிலை 24.64 டிகிரி செல்சியஸ். கடந்த 100 ஆண்டுகளில் வெப்பநிலை அதிகரித்து வந்துள்ளதை இந்திய வானிலை ஆய்வு மையத்தின் புள்ளி விவரத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்கள் கடந்த ஆண்டு கடும் வரட்சியைச் சந்தித்தன. சராசரி மழை அளவைவிட மிகவும் குறைவாக மழை பெய்தது மற்றும் பல மாநிலங்களில் மழையே பெய்யாதது ஆகிய காரணங்களால் வரட்சி நிலவியது. இந்த சூழ்நிலையில், கடந்த ஆண்டு வெப்பம் அதிகம் இருந்தது என்ற வானிலை ஆய்வு மையத்தின் தகவல் வரட்சிக்கு காரணத்தை தெளிவாக உணர்த்துகிறது.

# கடல் வழியாக மீண்டும் கடத்தல்கள்: முகவர்கள் குறித்து ரகசிய விசாரணை

இராமநாதபுரம் கடலோரப் பகுதிகள் வழியாக மீண்டும் கடத்தல் அதிகரித்துள்ளதால், பழைய மற்றும் புதிய முகவர்கள் குறித்து பொலிஸார் இரகசிய விசாரணை செய்து வருகின்றனர்.

தற்போது, இலங்கையில் உள்ள முக்கிய முகவர்கள், மீண்டும் தமிழகத்திலிருந்து பல்வேறு பொருள்களைக் கடத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பும் முயற்சியில் இறங்கி உள்ளனர்.

கடந்த மாதம் இலங்கையிலிருந்து எட்டு லட்சம் ரூபா ஹவாலா பணம், கீழக்கரைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அனுப்பப்பட்டு, துப்பாக்கிக் குண்டுகள், ஹெரோயின், செய்மதித் தொலைபேசிகள் போன்ற பொருள்களைக் கடத்தமுயன்றபோது, நான்கு பேரை கியூப் பிரிவுப் பொலிஸார் பிடித்தனர். இதில், செய்மதித் தொலைபேசி வைத்திருந்ததால் பயங்கரவாதச் செயல்களுக்காகக் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம், பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவத்தில் முக்கியமான ஒருவர், ஏற்கனவே இலங்கைக்குப் பலமுறை ஆட்களை அனுப்பியது, விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பொருள்கள் கடத்திய வழக் கில் தொடர்பு உடையவர் என்பதால், இவர் மூலம் மேலும் பல முகவர்கள் உருவாகி யிருக் கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் கீழக்கரைப் பகுதியில், வெளிநாட்டிற்கு கடத்த முயன்ற பவளப்பாறைகளை, அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாகக் கியூப் பிரிவு மற்றும் உளவு பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உலகத் தமிழர்கள் பாதுகாப்பு மாநாட்டில் பிரபாகரனின் படம், 'சிடி'க்கள் பறிமுதல்!

கோவை, பெப். 08

கோவையில் நடந்த உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் இடம் பெற்றிருந்த பிரபாகரன் போஸ்டர்கள், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த புத்தகம், 'சிடி'க்கள் மற்றும் அவரது உருவப்படங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கோவையில் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாடு நேற்றுமுன்தினம் தொடங்கி நேற்று நிறைவடைந்தது. மாநாட்டையொட்டி புத்தகம், 'சிடி' விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் பிரபாகரனின் உருவம் பதித்த மாவீரர்வரை, நேர்காணல், தமிழின நாட்காட்டி போன்ற புத்தகங்களும், புகழ் செல்வி, தமிழ்கொடி, தலைவர் வருவார் தமிழீழம் மலரும் உள் ளிட்ட ஈழத்தமிழர் போராட்டம் குறித்த வீடியோ ''சிடி'க்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதுதவிர, பிரபாகரனின் முழு உருவப் படங்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்த்த அங்கிருந்த உளவுப் பிரிவுப் பொலிஸார் சென்னையிலுள்ள உளவுப்பிரிவிற்குத் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, கோவை மாநகரப் பொலிஸாருக்கு உடனடியாக பிரபாகரனின் படங்களை அப்புறப்படுத்த உத்தரவு வந்தது. நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு பொலிஸ் உதவி கமிஷனர் முத்துராஜ் தலைமையில் பொலிஸார், மாநாட்டில் விற்பனைக்கு வைத்திருந்த புத்தகங்கள், போட்டோக்கள், 'சிடி'க்களைப் பறிமுதல் செய்ததோடு, பிரபாகரனின் படங்களையோ, புத்தகங்களையோ, 'சிடி'க்களையோ விற்பனை செய்யக்கூடாது என்று எச்சரித்தனர்.

# தாக்கரேயின் உருவப்பொம்மை எரிப்பு; காங்கிரஸைச் சேர்ந்த ஐந்து பேர் கைது

சிவசேனா கட்சியின் நிறுவுநர் பால்தாக்கரேயின் உருவப் பொம்மையை எரித்தனர் என திருவண்ணாமலையில் காங்கிரஸ் கட்சியினர் 5 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

மும்பை மராத்தியர்களுக்கே சொந்தம் என சிவசேனா கட்சித் தலைவர்கள் கூறி வருவதற்கு இந்தியா முழுவதும் எதிர்ப்பு எழுந்து வருகிறது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சி பொதுச் செயலர் ராகுல்காந்தி சிவசேனாவின் நிலையை குறை கூறியிருந்தார். இதனால் ராகுல்காந்தியை சிவசேனா கட்சியினர் விமர்சித்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் திருவண்ணாமலை காமராஜர் சிலை அருகே சனிக்கிழமை காங்கிரஸ் கட்சியினர் பால்தாக்கரேயின் உருவ பொம்மைக்குத் தீ வைத்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், காங்கிரஸை சேர்ந்த ஐவரை கைது செய்தனர்.

# சோனியாவுடன் மு.க.ஸ்டாலின் சந்திப்பு; தமிழகத்துக்கு நிதி ஒதுக்கக் கோரிக்கை

காங்கிரஸ் தலைவர் சோனியாவை தமிழக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் டில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்தார். அப்போது, தமிழகத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

டில்லியில் நடைபெறும் முதல்வர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஸ்டாலின் டில்லி சென்றுள்ளார். டில்லியில், காங்கிரஸ் தலைவர் சோனியாவை நேற்றுமுன்தினம் அவருடைய இல்லத்தில் சந்தித்தார். அப்போது, அடுத்த மாதம் 13 ஆம் திகதி தமிழக புதிய சட்டசபைக் கட்டடத்தைத் திறந்து வைக்க வருகை தரும் சோனியாவுக்கு துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

டில்லியில் சோனியாவைச் சந்தித்த பின்னர் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா, கோதாவரி பேசினில் இருந்து கிடைக்கும் எரிவாயு, தமிழகத்துக்கும் அளிக்கப்படும் என்ற வாக்குறுதியை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று சோனியாவிடம் வலியுறுத்தினேன். இது தொடர்பாகப் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா, பெற்றோலியத் துறை அமைச்சர் ஆகியோருக்கு தமிழக முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டினேன்.

அந்தக் கடிதத்தின் அடிப்படையில், தமிழகத்துக்கு எரிவாயு வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டேன்.

மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதியை உடனடியாக ஒதுக்குமாறு சோனியாவிடம் கோரிக்கை விடுத்தேன். அதற்கு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் ஆலோசித்து தேவையான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுப்பதாக காங்கிரஸ் தலைவர் சோனியா உறுதியளித்தார் - என்றார்.

# பகிடிவதைக் கொடுமையால் மாணவன் தீக்குளித்துப் பலி



மரக்காணம், பெப். 08

புதுவை அருகே 'ராக்கிங்' கொடுமையால் கல்லூரி மாணவன் தற்கொலை செய்து கொண்டார். இதுதொடர்பாக 3 மாணவர்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே அனுமந்தை கிராமத்தைச் சேர்ந்தவர் குப்புசாமி. இவரது மகன் ஸ்ரீதர் (வயது - 20) புதுவை பொம்மையார்பாளையத்தில் உள்ள தனியார் கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

கடந்த 3 நாள்களுக்கு முன்பு புதுவையைச் சேர்ந்த சக மாணவர்கள் இவரை பகிடிவதை (ராக்கிங்) செய்தனர் எனத் தெரிகிறது. இதுபற்றி மாணவனின் தந்தை குப்புசாமி கல்லூரி நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். இதையடுத்து சம்பந்தப்பட்ட மாணவர்களைக் கல்லூரி நிர்வாகத்தினர் கண்டித்தனர் எனத் தெரிகிறது.

இதனால் ஆத்திரமடைந்த மாணவர்கள், ஸ்ரீதரை தொடர்ந்து ராக்கிங் செய்துள்ளனர். மனமுடைந்த நிலையில் காணப்பட்ட ஸ்ரீதர் கடந்த வெள்ளியன்று நள்ளிரவில் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். அலறல் சத்தம் கேட்டு எழுந்த பெற்றோர் அவரை மீட்டு புதுவை ஜிப்மர் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இறந்தார்.

இதுகுறித்து 3 மாணவர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து அவர்களைத் தேடி வருகின்றனர்.

ராக்கிங் கொடுமையால் மாணவன் தீக்குளித்த சம்பவம், அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியச் செய்திகள்



முதல்வர் கருணாநிதிக்குச் சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரமாண்டமான பாராட்டு விழாவில், தமிழ் சினிமா உலகினர் திரண்டு வந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

அமிதாப்பச்சன் தலைமையில் நடந்த விழாவில் ரஜினி, கமல் உட்பட அனைத்து நடிகர்களும் கலந்துகொண்டனர்

விழாவின் தொடக்கமாக, நடிகர் - நடிகைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் இயக்குநர் பிரபுதேவாவுடன் இணைந்து நடிகை நயன்தாரா நடனமாடினார். அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிஸ்-ஆம்லாவின் துடுப்புகள் நாக்பூரில் ஓட்ட மழை பொழிவு!

நாக்பூர், பெப். 08

இந்தியாவுக்கு எதிராக நாக்பூரில் நேற்றுமுன்தினம் தொடங்கிய முதலாவது டெஸ்டில் கலிஸ், ஆம்லா ஆகியோரின் சதத்தால் தென்னாபிரிக்கா வலுவான நிலையை எட்டியுள்ளது.

தென்னாரிக்கக் கிரிக்கெட் அணி இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்தியாவுக்கெதிராக 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி ஸ்மித்தும், பிரின்ஸும் முதல் இன்னிங்ஸைத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவுக்கு பேரிடி விழுந்தது. சஹீர்கானின் மிரட்டலில் ஆரம்ப வீரர்கள் இருவரும் 6 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

பிரின்ஸ் (0), ஸ்மித் (6) இருவரும் விரைவிலேயே வெளியேறினாலும், பின்னர் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹஸிம் ஆம்லா - கலிஸ் ஜோடி அணியைச் சரிவிலிருந்து மீட்டது.

ஆரம்பத்தில் தடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தது இந்த ஜோடி. பின்னர் அபாரமாக ஆடிய கலிஸ் தனது 34ஆவது டெஸ்ட் சதத்தை நிறைவு செய்தார். மறுமுனையில்



நின்ற ஆம்லா கொடுத்த இரு வாய்ப்புகளை இந்திய வீரர்கள் கோட்டைவிட்டமையால், ஆம்லாவும் சதத்தைப் பூர்த்தி செய்தார். அவருக்கு இது 8ஆவது சதமாகும். முதல் நாள் முடியும்வரை இந்த ஜோடிக்கு முடிவு கட்ட முடியாமல் போனமையால் தென்னாபிரிக்க அணி வலுவான நிலையை அடைந்தது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 291 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

கலிஸ் 159 ஓட்டங்களுடனும் ஆம்லா 115 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்தது தென்னாபிரிக்க அணி.

முந்தைய நாள் களத்தில் இருந்த கலிஸ் 173 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த டி வில்லியர்ஸ் (53), டுமினி (9), பௌச்சர் (39) ஆகியோர் தமது பங்கைச் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸிற்காக 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 558 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஆம்லா இரட்டைச் சதம் கடந்து 253 ஓட்டங்களுடனும் ஸ்ரைன் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் சஹீர்கான் 3 விக்கெட்டுகளையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுகளையும் ஷேவாக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றை ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கம்பீர் (12), ஷேவாக் ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.



பெல்கிரேடில் நடந்து வரும் பெடரேஷன் கிண்ண டென்னிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த ஆட்ட மொன்றில் ரஷ்யாவின் கஸ்னெட்சேவா 6-1, 6-4 என்ற செற் கணக்கில் செர்பியாவின் இவனோசிக்கை வீழ்த்தினார். ஆட்டத்தின் போது கஸ்னெட்சேவா...

# பந்துவீச்சுக் குறித்து டோனி மகிழ்ச்சி!

''எமது பந்துவீச்சாளர்களின் செயற்படுகளை உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.''

- இவ்வாறு இந்திய அணியின் தலைவர் டோனி கூறியுள்ளார்.

நாக்பூர் டெஸ்டில் முதலாவது நாள் ஆட்டம் முடிந்த பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இன்றைய நாளில் (நேற்றுமுன்தினம்) நமது பந்துவீச்சாளர்களின் செயற்பாடு எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. சஹீர்கானின் பந்து வீச்சு உண்மையிலேயே மிகவும் அருமையாக இருந்தது.

''ஆடுகளம் பந்துவீச்சுக்கு மந்தமாக இருந்தாலும் கூட நாங்கள் நன்றாகவே செயற்பட்டோம். ஆனால், எதிரணி வீரர்களை வீழ்த்துவதற்குக் கிடைத்த ஒரு சில வாய்ப்புகளைத் தவற விட்டு விட்டோம். அது எமக்கு ஏமாற்றமாகவே அமைந்தது'' - என்றார்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான மோதலில் ஆஸ்திரேலியா 113 ஓட்டங்களால் வெற்றி!

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

இதன் முதலாவது போட்டி நேற்று மெல்போர்ணில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய வோட்ஷன்-மார்ஷ் ஜோடி 50 ஓட்டங்களைப் பெற்றவேளை மார்ஷ் (20) ஆட்டமிழந்தார்.

பின்னர் அணித்தலைவர் பொண்டிங் களம் புகுந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த வோட்ஷன் அரைச்சதம் கடந்து (59) சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து பொண்டிங் (49) அரைச் சதமடிக்கும் வாய்ப்பைக் கோட்டை விட்டு ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்களான கிளார்க் (18), வைட் (22), மைக் ஹஸி (28), ஹெடின் (8), ஜோன்ஷன் (21) ஆகியோர் ஓரளவு சிறப்பாக ஆடி ஆட்டமிழந்தனர்.

இறுதியில் ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 256 ஓட்டங்களைப் பெற்றது.

கௌரிச் (6), ஹரிஸ் (2) ஆகியோர் இறுதி வரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில், போலட் 3 விக்கெட்டுகளையும் ராம்புல் 2 விக்கெட்டுகளையும், ரோஜ், ஸ்மித், செய்ல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் 257 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது.

ஆரம்ப வீரர்களான செய்ல் (7), மோரான் (3) ஆகியோர் வந்தவேகத்திலேயே நடையைக் கட்டினர் பின்னர் வந்த டோவ்லின் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார்.

ஆகக் கூடுதலாக போலட் 31 ஓட்டங்களையும் சைமன்ஸ் 29 ஓட்டங்களையும் டி ஒனாரின் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை ஓட்டங்களைக் கூட எட்டவில்லை.

ஸ்மித் (7), மில்லர் (4), ராம்புல் (3), ஆகியோர் ஏமாற்றிச் சென்றனர்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 34.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி113 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரரான ரோஜ் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் ஹரிஸ், கௌரிச் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், போலிஞ்சர் 2 விக்கெட்டுகளையும், ஜோன்சன், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்த ஆஸ்திரேலிய வீரரான வோட்ஷன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றிமூலம் 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டாவது போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# நல்லூரில் இளைஞர் மீது கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 8

நல்லூர் ஆலயச் சுழலில் இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், இராஜேந்திரா வீதியைச் சேர்ந்த சற்குணதாஸ் பிரபுமோகன் (வயது 26) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார்.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பொல்லுகளுடன் வந்ததாகக் கூறப்படும் சிலரே குறிப்பிட்ட இளைஞரைத் தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஒ-78)

# யானைச் சின்னத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணியினர் தமது பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை அன்னச்சின்னத்தில் நிறுத்தியிருந்தனர். ஜே.வி.பி., ஐ.தே.கட்சி போன்றன இது விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட்டன.

இனிவரும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து அன்னச் சின்னத்திலேயே எதிர்கொள்ளலாம் என்பது ஜே.வி.பியின் நிலைப்பாடாக இருக்கின்றது.

அதேசமயம், தொடர்ந்தும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய எதிரணிக் கூட்டணியைப் பேணுவதையும் -

ஜனாதிபதித் தேர்தலைப் போல இந்த நாடாளுமன்றத் தேர்தலையும் தமது தலைமையில் எதிரணிகள் ஒன்றுபட்டு எதிர்கொள்வதையும் -

ஜெனரல் சரத் பொன்சேகா வலியுறுத்துகின்றார் என்று தெரிகின்றது.

இதனை ஐ.தே.க. தலைவர் ரணில் உட்பட ஏனையோரிடம் பொன்சேகா கோடி காட்டிவிட்டார்.

ஆனால் வரும் பொதுத் தேர்தலுக்கு பொன்சேகாவின் தலைமையை ஏற்க ரணில் மறுத்துவிட்டார்.

தேவையானால் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தாம் அமைத்துள்ள ஐக்கிய தேசிய முன்னணியில் பொன்சேகாவுக்கு பிரதித் தலைவர் மட்டப் பதவி ஒன்றை வழங்குவதற்கும் தாம் தயார் என்றே ரணில் இப்போது கோடிகாட்டியுள்ளார்.

அதேசமயம், ஐக்கிய தேசிய முன்னணியின் தற்போதைய கூட்டுக்குள் தேவையானால் ஜே.வி.பி. வந்து சேரலாம். ஆனால் முன்னணியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் சின்னமான யானைச் சின்னத்திலேயே அவர்கள் போட்டியிட முன்வரவேண்டும் என ரணில் நிபந்தனை விதித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயங்கள் குறித்து ஜெனரல் சரத் பொன்சேகாவும், ஜே.வி.பி. தலைவர்களும் தங்களுக்குள் பேசி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அன்னச்சின்னத்தில் ஒன்றிணைந்து போட்டியிட ஐ.தே.கட்சி இணங்காவிட்டால், ஜே.வி.பி. உட்பட்ட சில உதிரிக் கட்சிகளைத் தம் தலைமையில் இணைத்து கழுகுச் சின்னத்தில் களம் இறக்குவது குறித்து ஜெனரல் பொன்சேகா தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார் என்றும் கூறப்பட்டது.

(அ-சி)

# 'கன்ரீன்' மூடப்பட்டதால் நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.போதனா வைத்தியசாலைச் சிற்றுண்டிச்சாலை (கன்ரீன்) நேற்று மூடப்பட்டதால் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களும் ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் பணியாற்றும் ஊழியர் நேற்று முன்தினம் மின்சாரம் தாக்கிப் பலியாகினர். அதனைத் தொடர்ந்து சிற்றுண்டிச்சாலை நேற்று மூடப்பட்டிருந்தது.

இதனால் வழமை போன்று காலையில் சுடு தண்ணீர் மற்றும் உணவு வகைகளை வாங்க வந்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். வெளியில் சென்று வரமுடியாத நிலையில் நேயாளர்கள் பெரிதும் சிரமமடைய நேரிட்டது.

(ஒ-16-86)

# சாரணிய வழிகாட்டுநர் கூட்டம் வேம்படியில்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.மாவட்ட பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சாரணிய வழிகாட்டுநர்களையும் இக்கூட்டத்தில் சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம் கேட்டுள்ளார்.

# மாணவர்களுக்கான புத்தகப் பைகள்

யாழ்.கல்வி வலய நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கான புத்தகப் பைகளை இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையில் யாழ். ஆசிரிய வள நிலையத்தில் பெற்றுக்கொள்ளும்படி பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-72)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரைத்தகடுகளின் இருப்பு முடிவதால் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதம்

கொழும்பு, பெப். 08

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு உடனடியாகத் தேவைப்படும் தற்காலிக வீடுகளை அமைப்பதற்குரிய கூரைத் தகடுகளின் கையிருப்பு முடிவடைவதன் காரணமாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமடைந்து வருகின்றன என்று முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்தார்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் கொழும்பில் இருந்து இன்னமும் கூரைத் தகடுகள் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் அனுப்பி வைக்கப்பட்டதும் உடனடியாக மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்ணிவெடிகள் அகற்றும் பணி முடிவடையாமை மற்றும் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாகவும் மீள்குடியேற்றப் பணிகள் தாமதமடைந்தன எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் முழுவீச்சுடன் மீள்குடியேற்றம் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

(அ-சி)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் இணைந்து ஈடுபட்டுள்ளனர்- கைது செய்யப்பட்டவர், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என ரோஹித்த போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)

## விடுதலைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரிய பிரஜைகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 10 கப்பல்களில் பகுதி பகுதியாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன எனவும், ஏவுகணைக் கூடு ஒன்று விடுதலைப் புலிகளின் முகாமொன்றிலிருந்து மீட்கப்பட்டு தற்போது ரத்மலான விமானப்படைகளின் முகாமில் வைக்கப்பட்டுள்ளது எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதி மன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு கப்பல் மூலம் ஆயுதங்களைக் கொண்டுவந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு எம்.ராஜேந்திரன் கருணாகரன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டு ஹெலிகொப்டரை அழித்தார் எனக் கூறப்படும் அருளானந்தன் நிஷாந்தன் ஆகிய இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவு குறித்த விவரங்களை நீதிமன்றத்தில் அறிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆயுதக் கொள்வனவின் பின்னர் அவற்றை விநியோகிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கிய விடுதலைப் புலிகளைக் கண்டறிய வேண்டியுள்ளதால் சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டுமென நீதிமன்றத்தில் அனுமதிகோரினர்.

பின்னர் இந்த வேண்டுகோளுக்கு அனுமதியளித்த நீதிவான் எதிர்வரும் 26 ஆம் திகதி விசாரணைகளின் நிலைமை குறித்து மீண்டும் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(அ-சி)

## இனவாதத்தைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசர காலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அரசமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய அரசமைப்புச் சட்டம் பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிகோலியுள்ளது.

ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றன.

வடக்குக் கிழக்கு மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களிக்கவில்லை என குற்றம் சுமத்துவதன் ஊடாக இனவாதத்தை விதைக்க அவர்கள் முயற்சிக்கின்றனர்.

அதிகளவான தமிழ் - முஸ்லிம் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்பது வெளிப்படையான உண்மை.

இனவாதப் பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியிலான தீர்வு காணப்பட வேண்டும்- என்றார்.

(அ-சி)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவாம்பிள்ளை, மன்னார் ஆயர் ராயப்பு ஜோஸப் உட்பட ஆறு ஆயர்கள் அடங்கிய குழுவினர் கடந்த தேர்தலின்போது காணப்பட்ட பல்வேறு போக்குகள் குறித்து தமது அறிக்கையில் ஏமாற்றம் வெளியிட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்கள் மோசமாக மீறப்பட்டமை, பிரசாரத்திற்காக அதிகளவு பணம் செலவழிக்கப்பட்டமை மற்றும் தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற அவதூறு பிரசாரங்கள் குறித்தும் அவர்கள் அந்த அறிக்கையில் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## 14 மூத்த இராணுவ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்களில் கேணல், கப்டன் தர அதிகாரிகளும் உள்ளனர்.

1992 ஆம் ஆண்டின் இராணுவ அதிகாரிகள் விதியின்படி இராணுவத் தளபதி இவர்களைக் கட்டாய ஓய்வில் அனுப்பும் முடிவை எடுத்து அதனை நடைமுறைப் படுத்தினார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் அபிப்பிராயத்தின் கீழ் இராணுவ அதிகாரியொருவரை ஒழுக்காற்றுக் காரணங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கட்டாய ஓய்வில் அனுப்ப குறிப்பிட்ட சட்டம் அனுமதியளிக்கிறது.

இவ்வாறு கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டவர்களில் இராணுவத் தொண்டர் படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஜம்மிக லியனகே, முப்படைகளின் தலைமை அதிகாரியின் அலுவலகத்தில் பணிபுரிந்த ஜெனரல் ராஜித டி சில்வா, யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சமந்தா சூர்ய பண்டார, முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பிமல் டயஸ் போன்றவர்களும் உள்ளனர்.

1992 இல் இராணுவ அதிகாரிகள் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அதனைப் பயன்படுத்தி அதிகாரிகள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டமை இது இரண்டாவது தடவையாகும்.

1999 ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள்' - நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகள் வன்னியில் பெருமளவு பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் இவ்வாறு அதிகாரிகள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருந்தனர்.

எனினும், அவ்வேளை, இராணுவத் தோல்வியைத் தொடர்ந்து இராணுவ காரணங்களுக்காக ஏழு மூத்த அதிகாரிகள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இராணுவ நீதிமன்ற விசாரணைகளின் முடிவிலேயே இது இடம்பெற்றது.

மேலும் அவ்வேளை குறிப்பிட்ட அதிகாரிகள் ஒரு மாதத்திற்குத் தமக்கு வழங்கப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தவும், தமக்கு அளிக்கப்பட்ட வீடுகளில் தங்கியிருக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த வாரம் 14 அதிகாரிகளும் முற்றிலும் வித்தியாசமான முறையில் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளனர்.

எவ்வித விசாரணையும் இடம்பெறவில்லை. சிலர் தங்களுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை என்கின்றனர்.

எனினும், பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் வலுவான ஆதாரங்களின் கீழேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. - இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# கண்டி விபத்தில் 44 பேர் காயம்

கொழும்பு, பெப். 08

கண்டி, கிரிமெட்டிய சந்தியில் நேற்றுக் காலை தனியார் பஸ் ஒன்று வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 44 பயணிகள் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் 16 பேர் மெனிக்கின்ன வைத்தியசாலையிலும், ஏனையோர் கண்டி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

மாபானவட்டுர பிரதேசத்திலிருந்து கண்டியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 'தேசத்தின் மகுடம்' கண்காட்சியைப் பார்வையிடச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தவர்களே இந்த விபத்தில் சிக்கினர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (அ-சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நம்பகத்தன்மை மிக்க நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த காலப்பகுதியில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் சம்பவங்கள் குறித்தே தமது விசாரணைகள் அமைந்திருக்கும் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசைக் கவிழ்ப்பதற்காக சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் இராணுவத்திற்கு ஆயுத தளபாடங்களை விற்றதன் மூலம் சரத் பொன்சேகாவின் மருமகன் பெருமளவிற்கு தரகுப் பணத்தைப் பெற்றார் என்ற குற்றச்சாட்டுக் குறித்தும் விசாரிக்கப்படவுள்ளது எனக் குற்றப்புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

ஜெனரல் சரத் பொன்சேகா, இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார். அரசு தனக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரத் பொன்சேகா கடந்த வாரமே கைதுசெய்யப்படும் சாத்தியக்கூறுகள் தென்பட்டன. எனினும், இராணுவ நீதிமன்றின் முன் அவரை ஆஜர் செய்யும் விடயம் காரணமாக இது தாமதமானது. அவரது மருமகன் டனுனா திலகரட்ண எதிர்வரும் வாரங்களில் விசாரணைக்குள்ளாகலாம்.

பொன்சேகா எந்நேரமும் கைதுசெய்யப்படலாம். அதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகள் அனைத்தும் தயாராகவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண நீதிமன்றங்கள் போன்று இராணுவ நீதிமன்றத்திலும் சகல சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படும். எனினும், இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றவாளி என நிரூபணமாகும் பட்சத்தில் ஒருவருக்கு மரணதண்டனை அல்லது சிறைத்தண்டனை வழங்குவதற்குக் கூட அதிகாரங்கள் இராணுவ நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சதிப் புரட்சி முயற்சி தொடர்பான விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இதுவரை 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் 'சினமன் லேக் சைட்' ஹோட்டலின் பாதுகாப்பு முகாமையாளரான ரஞ்சித் தயாரட்ண கைது செய்யப்பட்டுள்ளார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த காலத்தில் அவருக்கு நெருக்கமாக இருந்த மூன்று பத்திரிகையாளர்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(விவரமான கட்டுரை 3 ஆம் பக்கத்தில்)

# ஜனஜய சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு பெப்.8

தேசிய லொத்தர் சபையின் 'ஜனஜய 99 ஆம் இலக்க ரூபவாஹினி தொலைக்காட்சி மூலமான நேற்றைய சீட்டிழுப்பில் விசேட இலக்கமாக 03 உம் வெற்றி இலக்கங்களாக 15, 30, 50, 60 ஆகியவையும் தெரிவாகியுள்ளன.

இதன்பிரகாரம் சுப்பர் பரிசு, இரண்டாம், மூன்றாம் பரிசு வெல்லப்படவில்லை.

மூன்று வெற்றி இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 138 பேருக்கு நான்காம் பரிசாக ஆயிரத்து ஐந்நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு வெற்றி இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4,799 பேருக்கு ஐந்தாம் பரிசாக நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு வெற்றி இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 54, 038 பேருக்கு ஆறாம் பரிசாக இருபது ரூபாவும் கிடைக்கவுள்ளது. (16)

# சிரமவாசன சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு பெப்.8

தேசிய லொத்தர் சபையின் சிரம வாசன 215 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'W' என்ற ஆங்கில எழுத்தும் 08,31,50,53 ஆகிய இலக்கங்களும் வெற்றிக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசுத் தொகையும் முதலாம் பரிசுத் தொகையும் வெல்லப்படவில்லை. மூன்று இலக்கங்களும் சரியாக உள்ள சீட்டுக்களை வைத்திருக்கும் 159 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்க்வுள்ளது.

இரண்டு இலக்கங்கள் சரியாக உள்ள சீட்டுக்களை வைத்திருக்கும் 6, 308 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது. ஒரு இலக்கத்தைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 68, 694 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (16)

## 18 டி.ஐ.ஜி.கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண, வடமா காணத்திற்குப் பொறுப்பான நிமால் மெதிவக்கே ஆகியோரும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## அமெ. உறவைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கொழும்பில் பல நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்த மூன்றாவது மார்ட்டின் லூதர் கிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்தார்.

இதன்போது அமெரிக்காவுடனான சிறந்த உறவுகளுக்கு உதவ முடியுமா என ஜனாதிபதி கேட்டுள்ளார்.

எனினும் தமது அமைப்பு அமெரிக்க அரசைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள மூன்றாவது லூதர் கிங், நட்புறவை ஏற்படுத்தத் தமது அமைப்பு நிச்சயமாக உதவும் என உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுடன் இது தொடர்பாகத் தாம் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள மூன்றாவது மார்ட்டின் லூதர், ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் முடிவடைந்துள்ளதால் இனி சிறந்த உறவுகள் ஏற்படலாம் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-சி)

CIMA (UK)
AND
CERTIFICATE IN BUSINESS ENGLISH
வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்!
SPECTRA SCHOOL OF BUSINESS
19 STANLEY ROAD,
(PEOPLE'S BANK LANE),
JAFFNA.
மேலதிக விவரங்களுக்கு:
071 5256239

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org